# காலைக்கதிர்
Kālaikkathir

விழியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 28, ஞாயிற்றுக்கிழமை 13.11.2016 | கதிர் 08



யாழ்.நகரில் புத்தம் புதிய
நவீன ஆடைத் தெரிவுகளுக்கு
Rasi Collections
ராசி
கலெக்ஷன்ஸ்
இல.199, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 5571


# ஈழப் போராட்டம் மௌனித்த பின் தமிழருக்கு சிறந்த தலைவர் இல்லை

## *சம்பந்தனையும் சாடுகிறார் சிவசக்தி ஆனந்தன்*

வவுனியா, நவம்பர் 13

**விடுதலைப் போராட்டம் நடைபெற்றபோது தமிழருக்கு உறுதியான தலைமைத்துவம் இருந்தது. ஆனால் அது மௌனிக்கப்பட்ட பின்னர் அரசியல் ரீதியாக - ஜனநாயக ரீதியாக - இராஜதந்திர ரீதியாக - தமிழர்களின் பிரச்சினையை சர்வதேசத்துக்கும் இலங்கைக்கும் எடுத்துச்சொல்லக் கூடிய முதுகெலும்பு உள்ள தலைவர் எமக்கு இல்லை.**

*-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கவலை வெளியிட்டார்.*




வவுனியா நெடுங்கேணியில்நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற 94 ஆவது சர்வதேச கூட்டுறவு தின நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

நெடுங்கேணி பிரதேசத்தை சிங்களமயமாக்கும்பலவேலைத் திட்டங்கள்திரைமறைவில்நடைபெறுகின்றன. இந்த பிரதேசத்திற்கான பிரதேச செயலாளராகக் கூட பெரும்பான்மை இனத்தவரைக் கொண்டு வருவதற்கானவேலைத்திட்டம் இடம்பெறுகின்றது.

வெலிஓயாவுடன் இருக்கக் கூடியபல கிராமங்களை நெடுங்கேணியுடன் இணைப்பது மட்டுமல்லாமல் கொக்கச்சான் குளம் என்ற பிரதேசத்தில் தென்பகுதியில் இருந்து குடியேறியுள்ள சுமார் 5000 தொடக்கம் 6000 வரையான சிங்களக் குடும்பங்களை வவுனியா வடக்கு நெடுங்கேணிபிரதேசத்துடன்இணைத்து வாக்காளர்களின் எண்ணிக்கையில் பெரும்பான்மை இனத்தவரைச் சேர்க்கும் வேலைகளும் இடம்பெறுகின்றன. எல்லைமீள்

பக்கம் 20 ›››



*'கைகோர்ப்பு' எனும் நல்லிணக்கத்துக்கான தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாத்தறையிலிருந்து நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த அரச அலுவ ›ர்களை யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையிலான குழுவினர் வரவேற்று அழைத்துச்சென்றபோது எடுக்கப்பட்ட படம்...*

*(செய்தி 19 ஆம் பக்கத்தில்)*

# அமெரிக்காவில் அதிசய மாற்றம் அதேபோன்று இங்கும் வரலாம்

## *ஜனாதிபதி கனவில் கோட்டாபய*

கொழும்பு, நவ.13

அமெரிக்க மக்கள் பாரம்பரியமாக அரசியலில் செல்வாக்கு மிக்கவர்களையே ஜனாதிபதியாகத் தெரிவுசெய்து வந்துள்ளனர். ஆனால் இம்முறை நிலைமை வழமைக்கு மாறாக அமைந்துவிட்டது. அரசியலில் தொடர்பு ஏதும் இல்லாத - செல்வாக்கு இல்லாத-டொனால்ட்ரம்பை அமெரிக்க மக்கள் தெரிவு செய்துள்ளனர். இது நல்லதொரு மாற்றம். இலங்கையிலும் இவ்வாறான ஒரு மாற்றம் வரலாம்.

- இவ்வாறு முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரனுமான கோட்டாபய ராஜபக்ஷ டுவிட்டரில் பதிவு செய்

பக்கம் 20 ›››

# எதிர்ப்புக்கு மத்தியில் திறக்கப்பட்ட

# மன்னார் மாந்தை தேவாலய திருச்சொரூபம் திருட்டு

மன்னார், நவ.13

மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வண்ணாங்குளம் இறை இரக்க தேவாலயத்தின் பீடத்தில் வைக்கப்பட்டிருந்த புனித இறை இரக்க ஆண்டவர்திருச்சொரூபம்நேற்றுமுந்தினம் வெள்ளிக்கிழமை இரவு களவாடப்பட்டுள்ளதாக அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தேவாலய நிர்வாகம்

பக்கம் 20 ›››

# தமிழக முதல்வர் ஜெயாவின் சிகிச்சை முடிந்துவிட்டது

## *அப்பலோ மருத்துவமனை தெரிவிப்பு*

முதலமைச்சர் ஜெயலலிதா எந்த சிகிச்சைக்காக வந்தாரோ அந்த சிகிச்சை முடிந்து விட்டது. எப்போது வீடு திரும்புவது என்பதை அவரே முடிவு செய்வார் என அப்பலோ மருத்துவமனையின் தலைவர் பிரதாப் சி ரெட்டி நேற்றுச் சனிக்கிழமை தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த அவர்,

முதல்வரின் நோய்த்தொற்று கட்டுப்பாட்டிற்குள் இருந்தாலும், தன் பணிகளை மேற்கொள்வதற்கான புத்துணர்ச்சியைப் பெறுவதற்காகவே அவர் மருத்துவமனையில் தொடர்ந்து

பக்கம் 20 ›››

அளப்பு அருணாசலம்



அண்ணரைப் போல தம்பியும் உந்த மாதிரியான காரியங்களிலை படுவிண்ணன் பாருங்கோ...

# பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு 30 பேர் பலி; பலர் படுகாயம்

## *நேற்று மாலை சம்பவம்*

இஸ்லாமாபாத், நவ.13

பாகிஸ்தானின் லாஸ்பெல்லாவில் உள்ள நூரானி வழிபாட்டுத்தலத்தில் நேற்றுச் சனிக்கிழமை மாலை குண்டு வெடித்ததில் சுமார் 30 பேர் கொல்லப்பட்டனர் என்று அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணம் லாஸ்பெல்லாவில் உள்ள புகழ்பெற்ற நூரானி வழிபாட்டுத் தலத்திலேயே குண்டு வெடித்தது.

பக்கம் 20 ›››

# குழாய் நீருக்கான கட்டணம் டிசெம்பர் முதல் அதிகரிப்பு

கொழும்பு, நவ.13

குழாய் நீருக்கு எதிர்வரும் டிசெம்பர்மாதம்முதல்கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது எனத் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

ஏற்கனவேயுள்ள கட்டணத்தை விடவும் நூற்றுக்கு 30 வீத கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக சபையின் தலைவர் கே.ஏ. அன்சார் குறிப்பிட்டுள்ளார்.

பக்கம் 20 ›››

## *அங்கவீனமுற்ற படையினர், தேரர்கள் இணைந்து*

# ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்ட சம்பவம் அரசைக் கவிழ்க்கும் சூழ்ச்சியின் ஒத்திகையா?

கொழும்பு, நவ.13

அங்கவீனமுற்ற படையினர் மற்றும் தேரர்கள் இணைந்து அண்மையில் ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்ட சம்பவம் தென்னிலங்கையில் பேசுபொருளாகியுள்ள நிலையில், இது நல்லாட்சி அரசைக் கவிழ்ப்பதற்கான சூழ்ச்சியாக இருக்குமா என்று சந்தேகம் எழுந்துள்ளது.


ஜனாதிபதிமற்றும்பொலிஸ்மா அதிபர் ஆகியோர் நாட்டில் இல்லாத நேரம் பார்த்து இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை இந்த சந்தேகத்தை வலுவாக்குகின்றது என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 7ஆம் திகதி இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையின்போது, பொலிஸ்மா

பக்கம் 20 ›››

# நல்லாட்சி அரசின் உத்தரவுகளை ஏற்க மறுக்கின்றனர் படையினர்

## நாடாளுமன்றில் அடைக்கலநாதன் எம்.பி



கொழும்பு,நவ.13

நல்லாட்சி அரசாங்கத்தின் உத்தரவுகளை இராணுவம் உட்பட அரச படையினர் ஏற்றுக் கொள்வதில்லை என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என்ற கொள்கையில் அரசாங்கம் இருக்கின்றபோதும் இராணுவம் உட்பட அரச படைகள் அதற்கு எதிரான நிலைப்பாட்டில் இருக்கின்றன என்றும் அடைக்கலநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தின் இரண்டாவது நாள் விவாதம் நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்றது.

இதில் பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கலந்து கொண்டு உரையாற்றிய செல்வம் அடைக்கலநாதன் மேலும் கூறியதாவது:-

கடந்த அரசாங்கத்தின் மோசமான செயற்பாடுகள் காரணமாகவே ஆட்சிமாற்றமொன்றுக்காக தமிழ், முஸ்லிம் மக்கள் வாக்களித்திருந்தனர்.

புதிய அரசாங்கத்தின் மீது தமிழ் பேசும் மக்கள் பெரும் எதிர்பார்ப்புக்களை வைத்திருந்தனர். அந்த ஆழமான நம்பிக்கை வீழ்ச்சிகண்டு வருகின்றது.

வடக்கு, கிழக்கில் படையினர் தம்வசப்படுத்தி வைத்திருக்கும் பொது மக்களின் காணிகளை அரசாங்கம் விடுவித்தாலும் கூட மக்களின் நிலங்களை விடுவிப்பதில் காலதாமதம் காணப்படுகிறது.

தமது சொந்த வீடுகளில் சென்று குடியமரவேண்டும் என்ற ஏக்கத்துடன் பலர் காத்திருக்கின்றனர். காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் இருந்தாலும் படையினர் அரசாங்கத்தின் முடிவுகளை ஏற்றுக்கொள்ளவதில் சிக்கல் காணப்படுகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

அரசமைப்பு மாற்றத்தின் பின்னணியிலே தமிழ் பேசும் மக்களுடைய அரசியல் தீர்வும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அமையவேண்டும் - என்றார். (ம)

## நாவற்குழியில் சனி, ஞாயிறு யோகா பயிற்சி

சாவகச்சேரி,நவ.13

சாவகச்சேரி பிரதேச சபை நாவற்குழி உப அலுவலகத்தில் உள்ள பொது மண்டபத்தில் யோகாசனப் பயிற்சி வழங்கப் பட்டு வருகிறது.

யோகாசன குரு இ.வீரசிங்கம் இந்தப் பயிற்சியை வழங்கி வருகிறார். இப் பயிற்சி கடந்த மாதம் 29 ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. சனி, ஞாயிறு தினங்களில் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பயிற்சிநெறி தச்சன் தோப்பு சுந்தையா - கனகம்மா நிதியக் காப்பாளர் க.மயில்வாகனத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெற்று வருகிறது. (இ-22)

## ஓய்வு பெற்ற பேராசான்களுக்கான சேவை நயப்பு விழா நாளை

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.பல்கலைக்கழகபொருளியல் துறையில் நீண்ட காலம் சேவையாற்றி ஓய்வு பெற்ற பேராசான்களுக்கான சேவை நயப்பு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திருநெல்வேலி ஆடியபாதம் வீதியிலுள்ள சிவகாமி மஹால் மண்டபத்தில் இடம்பெறும்.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் பொருளியல்துறை தலைவர் எஸ்.எஸ்.உதயகுமார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணமும் சிறப்பு விருந்தினராக வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன், கலைப்பீட பதில் பீடாதிபதி க.சுதாகர், பொருளியல் துறை தலைவர் திருமதி விஜிதா ரவிசங்கர் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

முன்னாள் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் பசுபதி சிவநாதன், வவுனியா வளாக முன்னாள்முதல்வர்பேராசிரியர்இராஜகோபால், நந்தகுமாரன் மற்றும் முன்னாள் பொருளியல் துறைத் தலைவர் முதுநிலை விரிவுரையாளர் நல்லதம்பி பேரின்பநாதன் ஆகியோரே கௌரவிக்கப்படவுள்ளனர். (இ-7)

## பாதீட்டுப் பகுப்பாய்வு தொடர்பான செயலமர்வு

யாழ்.வர்த்தககைத்தொழில் மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட 2017 ஆம் ஆண்டுக்கான வரி மாற்றங்கள் மற்றும் முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பான கருத்தரங்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நடைபெறும்.

இக்கருத்தரங்குயாழ்நகரில் ஹற்றன் நஷனல் வங்கி மேற்தரக் கிளை மண்டபத்தில் இடம் பெறும்.

ஆர்வம் உள்ளவர்கள் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-7)

## சிறுநீரகம் தேவை

22 வயதுடைய இளைஞர் ஒருவருக்கு உடனடியாக B- இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை. இரக்க குணம் உடையவர்கள் தர விரும்பினால் உடன் தொடர்பு கொள்ளவும்.

சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு
0750406320 / 0217914498/0722269876/ 076 7471361

# சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 8 ஆவது தடவையாக யாழ்.நகரில்

வடமாகாணத்தில்தொடர்ந்து 8 ஆவது ஆண்டாக யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சியானது வடக்கிலுள்ள மக்களால் மிகப் பெரிய கண்காட்சி மற்றும் நுகர்வோர் சந்தை நிகழ்வாக கருதப்படுகின்றது.

இந்தக் கண்காட்சி 2017 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை மூன்று நாள்கள் யாழ். மாநகர சபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாநகர சபை, இலங்கை மாநாட்டுப் பணியகம் மற்றும் சர்வதேச வர்த்தக சபை ஆகியவற்றின் ஆதரவில் யாழ்ப்பாண வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம் இணைந்து இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு சேவை நிறுவனத்தால் இந்த நிகழ்வை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கைத்தொழில் மற்றும் வர்த்தகஅமைச்சு, யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய தூதரகம் மற்றும் தேசிய ஏற்றுமதியாளர்கள் சம்மேளனம் என்பன இதற்கு அங்கீகாரம் அளித்துள்ளன.

நிர்மாணம், விருந்தோம்பல், உணவு, பானவகை மற்றும் பொதியிடல், மோட்டார் வாகனம், தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம், நிதியியல் சேவைகள், ஆடையணி மற்றும் புடவை, விவசாயம், நுகர்வோர் உற்பத்திகள் மற்றும் பல தொழிற்துறைகள் இந்தக் கண்காட்சியில் இடம் பெறவுள்ளன.

பரந்த அளவிலான முதலீட்டாளர்கள் மற்றும் மக்கள் கலந்து கொள்ளும் இந்தக் கண்காட்சி நிகழ்வுக்கு 2016 ஆம் ஆண்டு 60 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-10)

## காரைநகரில் இன்று கவிதைப் பயிலரங்கு

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் காரைநகர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கவிதைப் பயிலரங்கும், கலந்துரையாடலும் இன்று காலை 8.30 மணிக்கு காரைநகர் கலாசார மண்டபத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் கவிஞர்கள் ஆ.சடகோபன் (நிலாக்கீற்றன்) க.சிவகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# கட்டுநாயக்க விமான நிலையம் திருத்தப் பணிக்காக மூடப்படுமா?

## அரசின் கோரிக்கைக்கு 45 நிறுவனங்கள் மறுப்பு

கொழும்பு, நவ.13

கட்டுநாயக்க விமான நிலையம் பராமரிப்பு நடவடிக்கைகளுக் காகத் தற்காலிகமாக மூடப்படவுள்ளது. விமான நிலையத்தின் விமான ஓடு பாதை கடந்த 20 வருடங்களாக திருத்தம் செய்யப்படாது காணப்படுகிறது. இதற்காக 50 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் விமான ஓடுபாதையை திருத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலைய விமான ஓடுபாதையின் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் காலப் பகுதியில் ஹம்பாந்தோட்டை மத்தள விமானநிலையத்தில் இருந்து விமான சேவைகளை நடத்துமாறு அரசாங்கம் கோரியுள்ளது.

இருப்பினும் இந்தக் கோரிக்கையை ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் உட்பட 45 விமான நிறுவனங்கள் ஏற்க மறுத்துவிட்டன என்று சிவில் விமான சேவை மற்றும் போக்குவரத்துப்பிரதி அமைச்சர் அஷோக் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

திருத்த நடவடிக்கைகளுக்காக விமான நிலையம் ஒரு நாளைக்கு எட்டு மணித்தியாலங்கள் மூடப்படவுள்ளது. திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் தொடர்ந்தும் காலம் தாழ்த்த முடியாது என்றும் தற்போது கிழமைக்கு நான்கு மணித்தியாலங்கள் விமான நிலையம் மூடப்பட்டு வருகிறது என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மத்தள விமான நிலையத்தை அண்மித்த பகுதியில் அதிக பறவைகளின் நடமாற்றம் மற்றும் விமான நிலையத்துக்கான தூரம் போன்றன விமான சேவை நிறுவனங்களின் மறுப்புக்கான காரணிகளாக முன்வைக்கப்பட்டுள்ளன. (இ-1)

# ஓராண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26 . 12 . 1933 | 26 . 10 . 2015 |



## கப்டன் நாகலிங்கம் சோமசுந்தரம்

(முன்னாள் பிரதி அதிபர் - யா/ இந்துக் கல்லூரி)

திதி : பூர்வபட்ச சதுர்த்தசி (13.11.2016)

இந்துவின் விருட்சமாய்
செயற்கரிய வீரனாய் - எம்
வாழ்வின் பேரொளியாய்
வெற்றி வழி நடத்தி
வாழவைத்த - எம்
குல விளக்கே!
ஆண்டு ஒன்றில் உம் நினைவில்
விழி நீர் சொரிய
ஏங்கித் தவிக்கின்றோம் நாங்கள்!

இல.7, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் வாடும் குடும்பத்தினர்

(C-078)

# சுவிஸ் - இலங்கை செய்த ஒப்பந்தம் தஞ்சமடைந்த தமிழரைப் பாதிக்காது

## அந்நாட்டு சோசலிச ஜனநாயகக் கட்சி உறுப்பினர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.13

சுவிஸ் – இலங்கையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தால் சுவிஸில் தஞ்சமடைந்துள்ள தமிழர்களுக்கு எவ்வித பாதிப்புமில்லை என்று அந்த நாட்டின் சோசலிச ஜனநாயகக் கட்சி உறுப்பினரும் தூன் நகரசபை உறுப்பினருமான தர்சிகா கிருஷ்ணானந்தம் தெரிவித்துள்ளார்.

சுவிஸில் தஞ்சமடைந்துள்ள இலங்கை அகதிகள் தொடர்பில் அந்த நாட்டின் உப ஜனாதிபதியும் நீதியமைச்சருமான சைமனேட்டா சொமாருகாவின் பிரதிநிதி மற்றும் அரசியல் பிரமுகர்களுடன் நேற்று இடம்பெற்ற முக்கிய சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே தர்சிகா கிருஷ்ணானந்தம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

சுவிற்ஸர்லாந்தின் உப ஜனாதிபதியும் நீதியமைச்சருமான சைமனேட்டா சொமாருகாவின் பிரதிநிதியின் அழைப்பின் பெயரில், சுவிஸில் வசிக்கும் இலங்கைத் தமிழ் மக்களின் பிரதிநிதி என்ற வகையில் நான் இச்சந்திப்புக்கு அழைக்கப்பட்டிருந்தேன்.

இதன்போது எமது மக்களின் பிரச்சினைகளைத் தெளிவாக அவர்களுக்குஎடுத்துரைத்தேன்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சுவிஸின் உப ஜனாதிபதியும் நீதி மற்றும் பொலிஸ்துறை அமைச்சருமான சைமனேட்டா சொமாருகா, புகலிடக்கோரிக்கையாளர்கள் தொடர்பில் மிக முக்கிய ஒப்பந்தத்தில் இலங்கை அரசுடன் கைச்சாத்திட்டிருந்தார். அந்த ஒப்பந்தம் தொடர்பில் அவர்களிடம் பேசினேன்.

இதனால், எவ்வித பாதிப்பும் சுவிஸில் தஞ்சமடைந்துள்ள இலங்கை அகதிகளுக்கு ஏற்படாதென அவர்கள் தெரிவித்தனர்.

அந்த ஒப்பந்தம் கடந்த 1994 ஆம் ஆண்டு முதல் உள்ளது என்றும், இவ்வாறான ஒப்பந்தங்கள் ஏனைய நாடுகளுடனும் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும், இதனால் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட நாட்டைக் கண்காணிக்க வாய்ப்பு உள்ளது எனவும் தெரிவித்தனர்.

ஏறத்தாழ இங்கு 50 ஆயிரம் தமிழர்கள் இருக்கிறார்கள். இலங்கையில் தற்போதும் மனித உரிமைமீறல்கள் இடம்பெறுகின்றன. காணாமல் போகிறார்கள். காணாமல்போனவர்கள் தொடர்பில் விசாரணை நடைபெறவில்லை. பெண்கள் பாதிக்கப்படுகின்றனர் போன்ற விடயங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

சுவிஸில் தற்போது அகதிகளாகத் தஞ்சமடைந்திருக்கும் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட முறையில் விசாரணை செய்வதாகவும், அவர்கள் தஞ்சம் கோரும் உண்மைத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களுக்கு அகதிதஞ்சம் கிடைக்கும்.



இதேவேளை, இலங்கை தொடர்பில் அனைத்து விடயங்களும் தெரிந்தவரே அவர்களை விசாரணை செய்வார். இதனால் அவர்கள் உண்மையில் பாதிக்கப்பட்டிருந்தால், அவர்களுக்கு அகதிதஞ்சம் கிடைக்கும் என்றும் கூறினார்.

நான் இங்கு இருக்கும் உறவுகளுக்குத் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால் –

நான் ஒரு சுவிஸ் அரசியல்வாதி. நீங்கள் தெரிவிக்கும் கருத்தை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், உங்களது வழக்குகளை விசாரித்து நடத்த முடியாது.

ஆகவே, நீங்கள் சிறந்த சட்டத்தரணி மூலம் உரிய ஆதாரங்களைத் திரட்டி இதனை மேற்கொள்ளுங்கள்.

சட்டத்தரணிகள் தொடர்பில் உதவி தேவைப்பட்டால் என்னுடன் தொடர்பு கொண்டால் உதவிகள் செய்ய முடியும்.

என்னுடன் பேச்சில் ஈடுபட்ட மூவரும் சுவிஸின் உப ஜனாதிபதியும், நீதி மற்றும் பொலிஸ் துறை அமைச்சருமான சைமனேட்டா சொமாருகாவுடன் அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தவர்கள்.

எனினும், இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து உறுதியாகத் தெரிவிக்கவில்லை.

உப ஜனாதிபதியும் நீதி மற்றும் பொலிஸ்துறை அமைச்சருமான சைமனேட்டா சொமாருகாவுடன் சந்தித்துக் கலந்துரையாடச் சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தருவதாக அவர்கள் தெரிவித்தனர்.– என்றார். (ஐ)

## இன்றைய மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.13

இலங்கை மின்சார சபையால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு மேலதிகமாக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக சில பகுதிகளில் இன்று ஞாயிறு மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பிரதேசத்தில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை திருநெல்வேலி ஒரு பகுதி, தலங்காவில் பிள்ளை யார் கோவிலடி, ஆரியகுளம் சந்தி, அரசடி, மின்சார நிலைய வீதி, ஸ்ரான்லி வீதி, பலாலி வீதி, ஓ.எல்.ஆர் பிரதேசம், வெலிங்டன் சந்தி, கஸ்தூரியார் வீதி ஒரு பகுதி, வெளிவாரிப்பட்டப்படிப்பு, திருநெல்வேலி கொமர்ஷல் வங்கி, திருநெல்வேலி இலங்கை வங்கி, நொதேண் பிறைவேற் வைத்தியசாலை, பலாலி டிப்போ, அவ்நோர் பிறைவேற் லிமிட்டற், ரயில் நிலையப் பிரதேசம், கிறீன் கிறாஸ் விடுதி பி.எி.எி.ஏ.எய், ஞானம்ஸ் விடுதி, ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கி, என்.எஸ்.ஆர். கட்டடத்தொகுதி, ஹட்டன் நஷனல் வங்கி ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)



இலங்கை அரசும் ஆஸ்திரேலிய அரசும் இணைந்து நடத்தும் விளையாட்டு அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்று சனிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் விளையாட்டு அபிவிருத்தித்திட்டம் வடமாகாணம், மேல் மாகாணம், வடமேல் மாகாணம் ஆகிய மூன்று மாகாணங்களையும் உள்ளடக்கி ஆஸ்திரேலிய அரசின் உதவியோடு ஜனவரி மாதம் முதல் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இதில் விளையாட்டு அபிவிருத்தி தொடர்பான பயிற்சி, ஈடுபடும் நோக்கங்கள் அதற்கான தேவைகள் ஆகிய விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டன. நேற்றைய ஆரம்பக்கட்ட கூட்டத்தில் ஆஸ்திரேலியா அரசின் பிரதிநிதிகளும், இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சின் பிரதிநிதிகள் யாழ் மாவட்ட விளையாட்டு திணைக்களம் மற்றும் கல்வித்திணைக்களம் சார்ந்த அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். இந்த நெடுங்காலச் செயற்றிட்டத்தால் விளையாட்டுத்துறை சார்ந்த முன்னேற்றகரமான மற்றும் நவீன யுத்திகள் உள்ளடக்கப்படலாம் என்று நம்பப்படுகின்றது. (ஐ-7-12)

## பொருத்து வீடுகள் ஏற்கவே முடியாது

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு பொருத்து வீடுகள் வழங்கப்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பொருத்து வீட்டுத் திட்டத்தை முன்னெடுக்க புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு முயற்சி செய்து வருகிறது. சிமெந்து கற்களிலான வீடுகள் அமைக்கப்பட வேண்டும்.

அரசின் 65 ஆயிரம் வீட்டுத் திட்டமானது கூடுதலான செலவில் மேற்கொள்ளப்படுகிறது. இதனைவிடவும் குறைந்த செலவில் வீடுகளை நிர்மாணிக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# இன்று மாணவராக இருப்போர் நாளை ஜனாதிபதியாகலாம்

## கனகராயன்குளம் ம.வியில் இந்தியத் துணைத் தூதுவர் தெரிவிப்பு

கனகராயன்குளம், நவ.13

இங்குள்ள ஒரு மாணவனோ, மாணவியோ ஒரு காலத்தில் இலங்கையின் ஜனாதிபதியாக வரலாம் அதற்கு அச்சம் தேவையில்லை. சரியான முறையில் முன்னேறிச் சென்றால் போதும்.

இவ்வாறு இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன் தெரிவித்தார்.

வவுனியா கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தமிழர்களின் பண்பாட்டை எடுத்தியம்பும் வகையில் மாணவர்கள் செயற்பட்டிருந்தனர். அப்பாடசாலையில் அப்துல்கலாம் உட்பட பல பெரியாரின் புகைப் படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அப்துல்கலாம் ஜனாதிபதி என்பதற்கும் அப்பால் அவர் மாணவர்களுடன் அதிகமாக இருந்தார். மாணவர்களுடன் இருப்பதுதான் மிகவும் ஆசையாக இருந்திருக்கின்றது.

ஆகவே இங்குள்ள மாணவ, மாணவிகளும் விஞ்ஞானியாக, உயர் அதிகாரியாக இலங்கையின் ஜனாதிபதியாக கூட வரலாம். இப்போது மாணவர்கள் எல்லோரும் புத்திசாலியானவர்கள். அவர்களுக்கு அதிகமான அறிவுரைகள் கூற வேண்டிய அவசியமில்லை.

ஆகவே ஆசிரியர்களும் பெற்றோரும் கூறும் கருத்துக்கள் நல்லதற்கே என்று மாணவர்கள் அறியவேண்டும்.



தமிழ் மொழி எமது தாய்மொழி. எனினும் மற்றைய மொழிகளையும் கற்கவேண்டும். குறிப்பாக ஆங்கிலம் முக்கிய மொழி. ஆகவே தமிழுடன் ஆங்கிலத்தையும் கற்றால் நல்லது என தெரிவித்தார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 - 222 3000, editor@kalaikkathir.lk
விளம்பரம்: 021 - 221 9440, ads@kalaikkathir.lk
விநியோகம்: 021 - 222 2600

## நல்லதொரு சமிக்ஞை

**கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழர்கள் அதிகமாக வாழும் வடபகுதியைச் சேர்ந்த வாக்காளர்களில் 90 வீதமானோர் மைத்திரிபால சிறிசேனவுக்கே வாக்களித்தனர். அதன்மூலம் பதவியிலிருந்த மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடித்து, மைத்திரிபால சிறிசேனவை ஆட்சிப் பீடத்தில் ஏற்றினர் அவர்கள்.**

அந்த நன்றியை மறவாத நிலைநின்று இப்போது பகிரங்கமாகக் கருத்துக் கூறியிருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால.

"தங்களின் பிரச்சினையை நான் தீர்த்து வைப்பேன் என்று கருதி என் மீது அவர்கள் (வடக்கு மக்கள்) முழு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது எனது பொறுப்பு மட்டுமல்ல; கடமையும் கூட!" - என்று ஜனாதிபதி கூறியிருக்கின்றமை மகிழ்ச்சிக்குரியதே.

தமிழர்களின் ஒட்டுமொத்தத் தீர்மானத்தினாலேயே தாம் இப்போது இந்தப் பதவியில் அமர்ந்திருக்கின்றார் என்ற நினைப்பு அவருக்கு என்றும் இருக்க வேண்டும், அந்தத் தமிழர்களுக்குத் தாம் தவறாமல் நீதி செய்ய வேண்டும், நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்ற மனச்சாட்சியின் உறுத்தல் அவருக்குத் தொடர்ந்தும் இருந்து கொண்டேதான் இருக்கும்.

இது தொடர்பில் இன்னொரு விடயமும் சுட்டிக் காட்டப்படத்தக்கது. அதனைக் கூட அண்மைக் காலத்தில் அவரே சில இடங்களில் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டி வந்தமையை மறப்பதற்கு இல்லை.

"கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழர்களின் தலைவர்கள் ஒன்று சேர்ந்து என்னை ஆதரிக்க முன்வந்தார்கள். அதற்காக எழுத்து மூல நிபந்தனை எதனையும் அவர்கள் முன்வைக்கவில்லை. வெறும் புரிந்துணர்வுடனேயே அந்த முயற்சிக்கு முழு ஒத்துழைப்புத் தர முன்வந்தனர். அதன்படி செயற்பட்டுக்காட்டினார்கள். என் வெற்றியை உறுதி செய்தார்கள். எழுத்து மூல நிபந்தனைகள் எதனையும் விதிக்காமல், புரிந்துணர்வுடனும் என் மீது முழு நம்பிக்கை கொள்ளும் விதத்திலும் அந்தத் தலைவர்கள் செயற்பட்டார்கள். அந்த நம்பிக்கைக்கு முழுப் பாத்திரவாளியாக நடந்துகொள்வது எனது தலையாய கடமை." - என்ற சாரப்பட சில இடங்களில் அவர் கருத்துக் கூறிவந்திருக்கிறார்.

அதன் தொடர்ச்சியே இப்போது ' த ஹிந்து'வுக்கு அளிக்கப்பட்ட பேட்டியில் கூறப்பட்ட விடயம்.

'த ஹிந்து'வுக்கு வழங்கிய பேட்டியில் அவர் குறிப்பிட்டமைபோல, பெரும்பான்மையினரான சிங்களவர்களையும், ஏனைய சிறுபான்மையினரான தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களையும் ஒரே தீர்வுக்கு இணங்கப் பண்ணுவது மிகக் கஷ்டமான காரியமே.

ஆனால், சரியான - உறுதியான - தெளிவான - துணிச்சலான - தீர்க்கதரிசனம் மிக்க - ஓர் அரசியல் தலைமை இருக்குமானால் அத்தகைய தீர்வை எட்டுவது கஷ்டமல்ல.

தீர்வு முயற்சி மற்றும் அதையொட்டிய முக்கிய விடயங்கள் குறித்து ஜனாதிபதி மிக அண்மைக் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் மற்றும் கூட்டமைப்பின் பேச்சாளரும் எம்.பியுமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை இரண்டு தடவைகள் சந்தித்துப் பேசியிருக்கின்றார்.

ஒரு சந்திப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் மட்டும் நடந்தது. மற்றைய சந்திப்பு ஜனாதிபதி மைத்திரி மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவருடனும் மிக அண்மைக் காலத்தில் நடைபெற்றதாக உறுதியாக அறிய வந்தது.

இந்தச் சந்திப்புகளில் விரிவாகப் பல அம்சங்கள் ஆராயப்பட்டன. எனினும், பேச்சு முயற்சியின் முன்னேற்றங்கள் கருதி அங்கு ஆராயப்பட்ட விடயங்களின் விவரங்களை வெளியிடுவதில்லை என இரு தரப்பினரும் தீர்மானித்துக்கொண்டனர் என்றும் அறிய வந்தது தெரிந்ததே.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஏற்பாடுகள், புதிய அரசமைப்பை உருவாக்குதல், அதற்கான சர்வஜன வாக்கெடுப்பு, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைப் பெறுதல் ஆகிய விடயங்களை ஒட்டி மஹிந்த தரப்பு உட்பட இனவாதப் போக்காளர் முன்னெடுக்கக்கூடிய எதிர்ப்பு நடவடிக்கைகளை எதிர்கொள்ளும் வியூகம் போன்றவை பற்றியெல்லாம் அங்கு ஆராயப்பட்டதாக விடயமறிந்த வட்டாரங்களில் வந்துள்ளன.

இந்தக் கலந்துரையாடல்களுக்குப் பின்னர்தான், அரசுத் தரப்பிலிருந்து சில சாதகமான சமிக்ஞைகள் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன எனக் கூட்டமைப்பின் தலைமைக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் கசியவிடுகின்றன.

இனப்பிரச்சினைத் தீர்வுக்குப் புதிய அரசமைப்பு ஊடாகவே வழி காணப்படும் என்றும், அத்தகைய புதிய அரசமைப்புக்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்றும் பிரதமர் கூறிவருகின்றமையும் -

தமிழர்களுக்கு நியாயமானதை அளிப்பதன் மூலம் தீர்வு என்று யாழ்ப்பாணத்திலும் பிற இடங்களிலும் ஜனாதிபதி குறிப்பிட்டு வருகின்றமையையும் -

அந்த வரிசையில் இப்போது தமிழருக்கு நியாயமான தீர்வு ஒன்றை வழங்குவது தமது பொறுப்பு மட்டுமல்ல, அதையும் தாண்டி கடமைப்பாடும் கூட என்று 'த ஹிந்து' பேட்டியில் ஜனாதிபதி மைத்திரி பால குறிப்பிடுவதும் - ஊன்றி நோக்கப்பாலன.

ஒரு வகையில் நோக்கின், இது ஆரோக்கியமான - நல்நோக்கம் கொண்ட - நல்ல சமிக்ஞை எனலாம்.

ஆனாலும், தீர்வுக்கான தமது உத்தேசத் திட்டத்தை தென்னிலங்கையில் - குறிப்பாக கூட்டு எதிரணியின் - கடும் எதிர்ப்புக்கு மத்தியில் எவ்வாறு அரசும், ஜனாதிபதியும் இணைந்து விற்கப் போகின்றார்கள் - தமது மக்களிடம் சந்தைப்படுத்தப் போகின்றார்கள் - என்பது கேள்விக்குறியே, எதற்கும் பொறுத்திருந்து பார்க்க வேண்டிய நிலைதான்...

# வாகரையில் சிங்களக் குடியேற்றம்; உடனடியாக தடுத்து நிறுத்துங்கள்

## மட்டக்களப்பு மாவட்ட கூட்டமைப்பு எம்.பி. கிழக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை

மட்டக்களப்பு, நவ.13

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில்சிங்களக் குடும்பங்களை குடியேற்ற கிழக்கு மாகாண காணி ஆணையாளர் மேற்கொள்ளும் முயற்சியைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் கிழக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார். குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நீண்டகாலமாகவடக்குகிழக்கு மண்ணில் பெரும் துன்பியலை எதிர்கொண்ட தமிழ் சமூகம் தற்போதைய நல்லாட்சி அரசில் ஓரளவு நிம்மதியுடன் வாழ முற்படுகிறது. இந்த நிலையில் முன்பு இருந்த மஹிந்த ராஜபக்ஷ அரசின் சில அதிகாரிகள் மீண்டும் இன முறு கலை ஏற்படுத்த முயற்சி செய்து வருகின்றனர்.

இந்த வகையில் தற்போதய கிழக்கு மாகாண காணி ஆணையாளர் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினின் ஆலோசனையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங் கள மக்கள் வாழாத பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி இன முறுகலை தோற்றுவிக்க முயற்சித்து வருகின்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள புனாணை கிழக்குப் பகுதியில் 178 சிங்கள குடும்பங்களைக் குடியேற்ற முயற்சி செய்து வருகின்றார். இதற்குக் கிழக்கு மாகாண காணி அமைச்சரும் உறுதுணையாக உள்ளார்.

பொதுவாக இந்த பகுதியில் புனாணையில் 05 சிங்களக் குடும்பங்களும் நாவலடி முச்சந்தியில் இரண்டு குடும்பங்களுமே வாழ்ந்துள்ளன. தற்போது 29 சிங்களக் குடும்பங்கள் புணாணையில் திட்டமிட்டு குடியேற்றப்பட்டுள்ளன.

அது தவிர எப்போதும் இந்த பகுதியில் வாழாத 178 சிங்களக் குடும்பங்கள் இப்பகுதியில் யுத்த சூழலுக்கு முன் வாழ்ந்தன எனக் கூறி போலியான காணி ஒப்பங்களை சிங்களத்தில் தயா ரித்து வழங்கியுள்ளனர். இந்தப் பகுதியில் சிங்களக் குடும்பங்கள் வாழ்ந்திருந்தால் இவர்களை குடியேற்ற வேண்டியது அவசியம். ஆனால் இந்த பகுதியில் சிங்க ளக் குடும்பங்கள் வாழவில்லை. இதை இந்தப் பகுதிக்கு அண்மையாக வாழும் தமிழ், முஸ்லிம் குடும்பங்கள் யாவும் அறிவர்.

ஆனால்திடீரென178 குடும்பம் பேமிற் உடன் வந்துள்ளன. இது சிங்களத்தில் உள்ளது மட்டக்களப்பு கச்சேரியில் சிங்களத்தில் அனுமதி வழங்குவதில்லை. இதுபோலியாகஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை நீதி நியாயத்தில் கடமை புரியும் அனைத்து அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் அறிவர்.

குறிப்பாக இந்தப்பகுதியில் 178 சிங்களக் குடும்பம் வாழ்ந்து இருந்தால் சிங்கள பெயருடன் ஒரு கிராமம் இருந்திருக்கும். அது தவிர கீழ்வரும் விடயங்கள் அவர்களை உறுதிப்படுத்த கூடியதாக அமையும்.

1981 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு, கிராமத்தின் சிங்களப் பெயர், இங்கு பிள்ளைகள் பிறந்திருந்தால் பிறப்புச் சான்றிதழ் பத்திரம், உதவி அரச அதிபர் பிரிவின் கீழான பதிவுகள் போன்ற எவையும் இவர்களிடம் இல்லை.

போலியான காணி ஒப்பந்தத்துடன் வந்துள்ளனர். இவர்கள் இரகசியமாக புனாணை கிழக்கு பகுதியின் கேணிநகர் பகுதிக் கட்டடத்தில் கடந்த 8 ஆம் திகதி கிழக்கு மாகாண காணி ஆணையாளரை அழைத்து வந்து ஒருவருக்கு ஆறு ஏக்கர் என்ற வீதத்தில் காணி வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

தற்போதைய அரசு சமாதான சூழலைக் கட்டி எழுப்பி நல்லாட்சி மேற்கொள்ள வந்த வேளையில் இவ்வாறான செயற்பாடு இடம் பெறுகின்றது. இவ்விடயமாக தங்களிடம் கிழக்கு மாகாண பண்பாட்டு அமைச்சின் கலை நிகழ்வில் தங்களுக்கு நேரடியாக சுட்டிக் காட்டியுள்ளேன். - என்றுள்ளது. (ஜ)

# அம்பாறையில் குவிந்தது சூரை மீன்! மீனவர்களுக்கு அடித்தது அதிஷ்டம்!!

## 25 லட்சம் ரூபா வருமானம்; 'சுனாமி' அச்சம் மறுபுறம்

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேச தமிழ், முஸ்லிம் பகுதிகளில் கடல் மீன் பிடி அதிகரித்துள்ளது.

குறிப்பாக கல்முனைப் பிராந்தியத்தில் கடல் மீன்பிடி தற்சமயம் அதிகரித்துள்ளதால் கடற்றொழிலாளர்கள் புதிய உற்சாகமும், மகிழ்வும் அடைந்துள்ளனர்.

இப்பிராந்தியத்தில் மீன் பிடிக்குப் பெயர்பெற்ற நிந்தவூர், காரைதீவு, மாளிகைக்காடு, சாய்ந்தமருது பகுதிகளிலேயே கடந்த சில வாரகாலமாக மீன் பிடி அதிகரித்துள்ளது.

இதனால் சோம்பிக்கிடந்த கடற்றொழிலாளர்கள் புதிய உற்சாகம் கொண்டுள்ளனர்.

நேற்று சனிக்கிழமை முக்கிய மீன்பிடிப் பிரதேசமானநிந்தவூர்ப் பகுதியில் கரைவலை மீன்பிடியாளர்களுக்கு அமோகமான நாள். சுமார் 25 லட்சம் ரூபாவுக்கும் மேல் பெறுமதியான சூரை மீன்கள் கரைவலைத் தோணிகளுக்குபிடிபட்டுள்ளன.



இந்த மீன் 600 முதல் 650 ரூபாவரை (ஒரு மீன் இரண்டரைக் கிலோ) விற்பனை செய்யப்பட்டது. இந்த மீன்கள் குளிரூட்டப்பட்டு கொழும்பு போன்ற பிற மாவட்டங்களுக்கும் மொத்தமாக அனுப்பப்பட்டுள்ளன.

கடந்த ஒருவாரத்துக்கு முன்னர் நிந்தவூரில் சுமார் 30 லட்சம் ரூபா பெறுமதியான சூரை மீன்கள் கரைவலை கடற்றொழிலாளர்களுக்குப் பிடிபட்டமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 2004 டிசெம்பரில் இடம்பெற்ற 'சுனாமி' எனப்படும் கடற்கோள் அனர்த்தத்துக்கு முன்னரும் இவ்வாறே அமோகமாக மீன் பிடிபட்டதால் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர். (இ-150)

## ஒளி விழாவும் பரிசளிப்பு விழாவும்

வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலய ஒளி விழாவும், பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் த.செல்வகுமார் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தாளையடி பங்குத் தந்தை எல்மோ அருள்நேசனும், சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி ச.திரவியராசாவும் கலந்து கொள்வர். (இ-7)

### நாளை

14.11.2016
திங்கட்கிழமை
திதி : பூரணை மு.இ 8.22 வரை
நட்சத்திரம் : பரணி
மாலை 5.34 வரை
சுபநேரம் 12.07 - 1.37
இராகுகாலம் 7.37 - 9.07

# பாடசாலை மாணவர் நால்வர் 'டிப்பர்' மோதியதில் காயம்

### மருதனார்மடத்தில் சம்பவம்

சுன்னாகம்,நவ.13

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற ஓட்டோவுடன் டிப்பர்வாகனம்மோதிவிபத்து இடம் பெற்றது. இதில் ஒரே குடும் பத்தைச் சேர்ந்த பாடசாலைப் பிள்ளைகள்நால்வர்காயங்களுக்கு ஆளாகினர்.

ஓட்டோச் சாரதியும் காயங்களுக்கு ஆளானநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் மருதனார்மடம் சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச்சம்பவத்தில்தொண்டைமானாறு பகுதியைச்சேர்ந்தசயந்தகுமார் கார்த்தீசன் (வயது-13), சயந்தகுமார் துவாரகன் (வயது-9), சயந்தகுமார் மகிழ வன் (வயது-8), சயந்தகுமார் தனஞ்சயன் (வயது-7) ஆகிய மாணவர்களும் ஓட்டோ சாரதியான மகாலிங்கம் சிவசிதம்பரம் (வயது-34) என்பவரும் காயங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

சுன்னாகம் போக்குவரத்துப் பொலிஸார் இந்தத் தகவலைத் தெரிவித்தனர். மாணவர்கள் தொண்டைமானாறு பகுதியில் இருந்துவந்து மானிப்பாய் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வருகின்றனர்.

இதன் போது நிறுத்தியிருந்த ஓட்டோ மீது பின் நகர்ந்து வந்த டிப்பர் வாகனம் மோதியதால் இந்தவிபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் ஓட்டோ முற்றாகச் சேதமடைந்துள்ளது என்றுதெரிவிக்கப்படுகிறது. எனினும் ஓட்டோ சாரதி 'ஹோர்ண்' சத்தம் எழுப்பியதால் பெரும் விபத்துதவிர்க்கப்பட்டது. (ஐ-9)

# அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு வடமராட்சியில் கையெழுத்துப் போர்!

வல்வெட்டித்துறை,நவ.13

பல வருடங்களாக விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறுகோரி நேற்று வடமராட்சிப் பகுதியில் கையெழுத்துப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கோரி நாடு தழுவிய ரீதியில் கையெழுத்துப் போராட்டம் ஒன்றை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிகழ்வு நேற்றுக் காலை 8 மணியளவில் உடுப்பிட்டி சந்தியில் ஆரம்பமானது. அதன் பின்னர் தொடர்ந்து கையெழுத்துப் பெறும் போராட்டம் வடமராட்சியின் வல்வெட்டித்துறை, நெல்லியடி, மருதங்கேணி, பருத்தித்துறை, குடத்தனை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது.

கையெழுத்துப் போராட்டத்தில் ஏராளமான மக்கள் ஆர்வத்துடன் பங்குபற்றியதைக் காண முடிந்தது.

இது தொடர்பில், வடமராட்சி கிறிஸ்தவமத ஒன்றியத்தின் பொறுப்பாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான எஸ்.செல்வன் கருத்து தெரிவிக்கையில்:-



"நல்லாட்சிஅரசாங்கம் உருவாக்கப்பட்டதன் பின்னரும் தடுத்து வைக்கப்பட்ட அரசியல் கைதிகள் எந்தவித விசாரணையும் இன்றி உள்ளனர். இதனால் அரசியல் கைதிகளின் குடும்பங்கள் அன்றாட உணவுக்கே கஷ்டப்படுகின்றனர். இதனையெல்லாம் நாம் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. இந்தக் கையெழுத்துப் போராட்டம் மூலம் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கவே நாம் இதனை மேற்கொண்டு வருகின்றோம். அத்துடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் தொடர்பில் எவரும் கண்டு கொள்ளாமல் உள்ளமை பரிதாபமாக உள்ளது. இவ்விடயத்தில் ஜனாதிபதி உடனடி நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும். எதிர்வரும் 23 ஆம் திகதி கையெழுத்துடன் சோந்த மகஜர் ஒன்றை ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளோம் - என்று கூறினார்.

(ஐ-33)

## பாம்பால் ஏற்பட்ட விபத்து

பாம்பைக் கண்டவர் பதறிப் போய் விபத்துக்குள்ளானார்.

வீதியால் சென்று கொண்டிருந்தவர் இடைநடுவில், வீதியின் குறுக்கே பாம்பு சென்றதைக் கண்டு பதறிப் போனதில் சைக்கிளுடன் வீழ்ந்து காயங்களுக்கு ஆளானார்.

ஆனைக்கோட்டை பள்ளக்காடு சந்தியில் இடம்பெற்ற இந்த விபத்தில் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் சிவசந்திரன் (வயது 55) என்பவரே காயங்களுக்கு ஆளானார். (ஐ-9)

## விபத்தில் தாய் இரு பிள்ளைகள் படுகாயம்

யாழ்ப்பாணம் ஓ.எல்.ஆர் தேவாலயத்துக்கு அருகில் மோட்டார் சைக்கிள் கார் விபத்தில் காயங்களுக்கு உள்ளான தாய் மற்றும் இரண்டு பிள்ளைகள் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய சாரதி யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கொட்டி முத்தம்மாள் வீதியைச் சேர்ந்த றேமோயூட் சிந்துஜா (வயது-28), றெமோயூட் திவ்யா (வயது -7) மற்றும் றெமோயூட் ரஸ்மிதா (வயது - 4) ஆகிய மூவருமே காயங்களுக்கு ஆளானவர்களாவர்.

சிறுவீதியில் இருந்து பிரதான வீதிக்கு நுழைய முற்பட்ட போது எதிரே வந்த கார் மோதியுள்ளது. வீதியால் சென்றவர்களால் இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ஐ-9)

# மரநடுகை மாதத்தை முன்னிட்டு மன்னாரில் ஆயிரம் குடும்பங்களுக்கு மரக்கன்றுகள்

### விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் வழங்கினார்

மரநடுகை மாதத்தை முன்னிட்டு மன்னாரில் ஆயிரம் குடும்பங்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

உயிலங்குளத்தில் அமைந்துள்ளமாவட்ட விவசாயப்பயிற்சி நிலையத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மரநடுகை மாத நிகழ்ச்சியில் வடக்கு சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன்பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு மரக்கன்றுகளை வழங்கினார்.





வடமாகாண சபை கடந்த 2014ஆம் ஆண்டில் இருந்து கார்த்திகை மாதத்தை வடமாகாண மரநடுகை மாதமாகக் கடைப்பிடித்து வருகிறது.

இவ்வருட மரநடுகை மாதம் 'சொந்த மண் சொந்த மரங்கள்' என்றகருப்பொருளுடன் வடக்கு மாகாணம் முழுவதும் திணைக்களங்களினாலும்,பொதுஅமைப்புகளினாலும் பலா,முருங்கை பூவமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இதை முன்னிட்டே விவசாயத் திணைக்களத்தின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியில் இருந்து, மன்னாரின் 16 விவசாயப் போதனாசிரியர்கள் பிரிவுகளிலும் இருந்துதேர்வுசெய்யப்பட்ட ஆயிரம் குடும்பங்களுக்கு மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொருவருக்கும் தென்னை, நெல்லி, கொய்யா, தேசி, மாதுளை, பலா, முருங்கை, ஜம்புநாவல், சண்டி, விளா ஆகிய 10மரங்கள்வழங்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அஞ்சனா ஸ்ரீரங்கநாதன் தலைமையில் நடைபெற்ற மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சியில் வடக்கு போக்குவரத்துத்துறைஅமைச்சர் பா.டெனீஸ்வரன், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் யோகராஜா கமலேஸ்வரி ஆகியோரும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

(இ

## கடலாமை பிடித்தவருக்கு மறியல்

யாழ்ப்பாணம் நவ.13

சட்டவிரோதமானமுறையில் கடலாமையைப்பிடித்துவெட்டிய 4 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களை நாளை மறுதினம் 15 ஆம் திகதி வரை அவர்களைவிளக்கமறியலில்வைக்குமாறு உத்தரவிட்டுள்ள பதில் நீதிவான், வழக்கு விசாரணையை ஒத்திவைத்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமைமண்டைதீவுக்கடற்பரப்பில்சென்றறோலர்படகை மறித்துச்சோதனைசெய்தகடற்படையினர் படகுக்குள் உயிருடன் ஓர் ஆமையும் வெட்டிய நிலையில்ஓர் ஆமையும் இருப்பதைக் கண்டுபிடித்தனர்.

உயிருடன் இருந்த ஆமையையும் ஆமை இறைச்சியையும் கைப்பற்றிய கடற்படையினர்குருநகரைச்சேர்ந்த 4 மீனவர்களையும் கைது செய்து யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

நான்குமீனவர்களும்கடந்த வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

பதில் நீதிவான் நால்வரையும்15ஆம்திகதி வரைவிளக்கமறியலில் வைக்குமாறும் உயிருடன் இருக்கும் ஆமையைக் கடலில் விடும்படியும் ஆமை இறைச்சியை அழிக்குமாறும் உத்தரவிட்டு வழக்கு விசாரணையை ஒத்திவைத்துள்ளார்.

படகு கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

ஆமை பிடிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில் இச்சம்பவம்இடம்பெற்றுள்ளது.

(இ-59,9)





உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவு மற்றும் வைத்தியசாலை விளையாட்டு மருத்துவ அலகு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டி நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் பவானந்தராஜாவினால் வைத்தியசாலையில் இருந்து ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தச் சைக்கிளோட்டம் ஊர்காவற்றுறை வீதியூடாக 'வேலணைச் சந்திவரை பயணித்து மீண்டும் யாழ்.போதனா வைத்தியசாலையை வந்தடைந்தது. இதன்போது எடுக்கப்பட்ட படங்கள். (ம-18)

# வார ராசி பலன்கள்

13.11.2016 முதல் – 19.11.2016 வரை

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

**மேஷம்** :அசுவிணி, பரணி, கிருத்திகை 1ம் பாதம்

செவ்வாய் பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 8இல் புதனும், 9இல் சுக்கிரனும், 10இல் செவ்வாயும், 11இல் கேதுவும் உலவுவது சிறப்பு. 16ஆம் திகதி முதல் சூரியன் 8இல் இடம் மாறுவது சிறப்பாகாது. ஆன்மீக, அறப்பணிகளில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு மனத்தெளிவு பிறக்கும். நண்பர்களும் உறவினர்களும் உதவுவார்கள். குடும்பத்தில் அமைதி காணலாம். வியாபாரத்தில் வளர்ச்சி காணலாம். 16 ஆம் திகதி முதல் சூரியனும் சனியும் 8 ஆம் இடத்தில் கூடுவதால் வயிறு, தோல் சம்பந்தமான உபாதைகள் ஏற்படும். தந்தை நலனில் அக்கறை செலுத்த வேண்டிவரும்

**ரிஷபம்** : கிருத்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்

சுக்கிர பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 5இல் குருவும், 6இல் சூரியனும், 8இல் சுக்கிரனும், 10இல் கேதுவும் உலவுவது நல்லது. முக்கியமான எண்ணங்கள் சில நிறைவேறும். திருமணம் போன்ற சுப காரியங்கள் நிகழும். கலைஞர்களுக்கு வரவேற்பு கூடும். புதிய பதவி, பட்டங்கள் கிடைக்கும். 16ஆம் திகதி முதல் சூரியன் 7இல் இடம் மாறி, சனியோடு கூடுவதால் சுகம் குறையும். அலைச்சல் அதிகமாகும். பிறரிடம் சுமுகமாகப் பேசிப் பழகுவது நல்லது. பயணத்தின்போது விழிப்புத் தேவை. சாதுக்கள், சித்தர்களின் தரிசனம் பெற வாய்ப்பு உண்டாகும். தந்தையின் உடல் நிலையில் கவனம் தேவை.

**மிதுனம்** : மிருகசீரிம் 3,4ம் பாதங்கள்,திருவாதிரை, புனாபுசம் 1, 2, 3 ம் பாதங்கள்

புதபகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 3இல் ராகுவும், 6இல் புதனும், சனியும் உலவுவது நல்லது. அறிவாற்றல் பளிச்சிடும். நெருங்கிய நண்பர்களும் உறவினர்களும் உதவ முன்வருவார்கள். பயணத்தால் அனுகூலம் பெற வாய்ப்பு உண்டு. வியாபார முன்னேற்றத் திட்டங்கள் நிறைவேறும். உடன் பிறந்தவர்களாலும் தந்தையாலும் சில பிரச்சினைகள் ஏற்படும். பக்குவமாகச் சமாளிக்கவும். 16ஆம் திகதி முதல் சூரியன் 6ஆம் இடம் மா றுவதால் அரசு விவகாரங்களில் அனுகூலமான திருப்பம் ஏற்படும். நிறுவன, நிர்வாகத்துறையினருக்கு முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும்.

**கடகம்** : புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்

சந்திர பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

கோசாரபடி கிரகநிலை சிறப்பாக இல்லை. எக்காரியத்திலும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடுவது நல்லது. வீண் பயம் ஏற்படும். குடும்பத்தில் அமைதி குறையும். பேச்சிலும் செயலிலும் நிதானம் தேவை. பிறரால் ஏமாற்றப்படலாம். உடன் பணிபுரிபவர்களிடம் விழிப்புத் தேவை. புதிய துறைகளில் அதிக பணத்தை முதலீடு செய்ய வேண்டாம். ஜாதகப்படி தற்சமயம் யோகபலம் உள்ள தசை, புத்திகள் நடைபெறுமானால் கவலைப்படத் தேவையில்லை. ஜாதக பலமும் குறைந்திருப்பவர்கள் எச்சரிக்கையுடன் செயற்படுவது நல்லது. பொருளாதார விடத்தில் மிகுந்த எச்சரிக்கை தேவை.

**சிம்மம்** : மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்

சூரிய பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 2இல் குருவும், 3இல் சூரியனும், 4இல் புதனும், 5இல் சுக்கிரனும், 6இல் செவ்வாயும் உலவுவது சிறப்பு. முக்கியமானவர்களின் சந்திப்பு நிகழும். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற சொத்துகள் சேரும். பெண்களின் எண்ணம் நிறைவேறும். துணிச்சலான காரியங்களில் ஈடுபாடு கூடும். வழக்கில் அனுகூலமான திருப்பமோ, வெற்றியோ கிடைக்கும். நண்பர்கள், உறவினர்களால் நல்லதும் அல்லாததுமான பலன்கள் கலந்தவாறு ஏற்பாடும். வாரப் பின்பகுதியில் முக்கியமானதொரு காரியம் நிறைவேறும்.

**கன்னி** : உத்திரம் 2, 3, 4ம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2ம் பாதங்கள்

புத பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 3இல் சனியும், 4இல் சுக்கிரனும், 6இல் கேதுவும் உலவுவது நல்லது. தொழிலாளர்கள், விவசாயிகளுக்கு முன்னேற்றமான சூழ்நிலை நிலவிவரும். கண், கால், பாதம், மார்பு சம்பந்தமான உபாதைகள் சிலருக்கு ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வியாபாரிகள் அகலக்கால் வைக்கலாகாது. பேச்சில் நிதானம் தேவை. கொடுக்கல் வாங்கலில் விழிப்புடன் இருக்கவும். பயணத்தின்போது விழிப்புத் தேவை. யாருக்கும் வாக்கு கொடுக்கவேண்டாம். எக்காரியத்திலும் அவசரம் வேண்டாம். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்தவும்.

**துலாம்** : சித்திரை 3, 4ம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3ம் பாதங்கள்

சுக்கிர பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 2இல் புதனும், 3இல் சுக்கிரனும், 11இல் ராகுவும் சஞ்சரிப்பது சிறப்பு. வியாபார முன்னேற்றத் திட்டங்கள் கைகூடும். மாணவர்களது நிலை உயரும். 5இல் கேதுவும், 12இல் குருவும் உலவுவதால் பிள்ளைகளால் மன அமைதி குறையும். பொருளாதார சம்பந்தமான காரியங்களில் விழிப்புத் தேவை. உத்தியோகத்தர்களுக்கு பிரச்சினை சூழும். வயிறு, கண், கால் சம்பந்தமான உபாதைகள் ஏற்படும். பெரியவர்கள் , தனவந்தர்கள், மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாகாமல் இருப்பது அவசியம்.16 ஆம் திகதி முதல் குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படும். உணவுப் பழக்கத்தில் கட்டுப்பாடு தேவை.

**விருச்சிகம்** : விசாகம் 4ம் பாதம், அனுசம், கேட்டை

செவ்வாய் பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ஜென்ம ராசிக்கு 2 இல் சுக்கிரனும், 3 இல் செவ்வாயும், 10 இல் ராகுவும்,11இல் குருவும் உலவுவது சிறப்பு. பொருளாதார நிலையில் வளர்ச்சி காணலாம். கொடுக்கல் வாங்கல் லாபம் தரும். பேச்சில் இனிமையும் திறமையும் வெளிப்படும். எதிரிகள் அடங்குவார்கள். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்புடன் செய்யும் தொழிலில் வளர்ச்சி காணலாம். கூட்டுத் தொழில் லாபம் தரும். ஜன்ம ராசியில் புதனும், சனியும், 4 இல் கேதுவும் இருப்பதால் நண்பர்கள், உறவினர்களால் சில இடர்கள் உண்டாகும். சூரியன் பலம் குறைந்திருப்பதால் பணிகளில் கவனம் தேவை.

**தனுசு** : மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம்

குரு பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசியில் சுக்கிரனும், 3இல் கேதுவும், 11இல் சூரியனும் உலவுவது சிறப்பு. ஆன்மிகப் பணிகளில் ஈடுபாடு கூடும். நிர்வாகத் திறமை வெளிப்படும். பண வரவு சீராக இருக்கும் என்றாலும் எதிர்பாராத செலவுகளும் இழப்புகளும் ஏற்படும். வியாபாரிகள் விழிப்புடன் செயற்பட்டால் நஷ்டத்தைக் குறைத்துக்கொள்ளலாம். குடும்பத்தை விட்டுச் சிலர் பிரிந்திருக்கக்கூடும். தொழில், வியாபாரம் சம்பந்தமாக இடமாற்றம் ஏற்படும். 16 ஆம் திகதி முதல் சூரியன் 12 இல் இடம் மாறுவது சிறப்பாகாது. உடல் நலனில் கவனம் தேவை. கண் , கால் சம்பந்தமான உபாதைகள் ஏற்படும்.

**மகரம்** : உத்திராடம் 2, 3, 4ம் பாதங்கள், அவிட்டம் 1, 2ம் பாதங்கள்

சனி பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 9இல் குருவும், 10இல் சூரியனும், 11இல் புதனும், சனியும் 12இல் சுக்கிரனும் உலவுவது சிறப்பு. தொலைதூரத் தொடர்பு பயன்படும். நிர்வாகத் திறமை கூடும். முக்கியமானவர்களின் தொடர்பும் அதனால் அனுகூலமும் ஏற்படும். பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு கிடைக்கும். வியாபாரத்தில் வளர்ச்சி காணலாம். உத்தியோகத்தர்கள், ஆசிரியர்களுக்கு நன்மைகள் உண்டாகும். புதியவர்களிடம் விழிப்புத் தேவை. பயணத்தின்போது இயந்திரங்களில் பணிபுரிபவர்களுக்கு எச்சரிக்கை தேவை.

**கும்பம்** : அவிட்டம் 3, 4ம் பாதங்கள், சதயம், புரட்டாதி 1, 2, 3ம் பாதங்கள்

சனி பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 10இல் புதனும் : சனியும், 11இல் சுக்கிரனும் உலவுவது நல்லது. செய்து வரும் தொழிலில் சீரான வளர்ச்சியைக் காணலாம். வியாபார முன்னேற்றத் திட்டங்கள் கைகூடும். எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்களுக்கு அனுகூலமான போக்கு தென்படும். பெற்றோராலும், வாழ்க்கைத் துணைவராலும் நலம் உண்டாகும். நண்பர்கள் உதவுவார்கள். பொருளாதார சம்பந்தமான காரியங்களில் விழிப்புத் தேவை. பிள்ளைகளாலும், உடன் பிறந்தவர்களாலும் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு விலகும். கூட்டுத் தொழில் லாபம் தரும். குரு ஸ்தானத்தில் உள்ளவர்களை வணங்கி ஆசிர்வாதம் பெறவும்.

**மீனம்** : புரட்டாதி 4ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

குரு பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 6இல் ராகுவும், 7இல் குருவும், 11இல் செவ்வாயும் உலவுவது சிறப்பு. அந்தஸ்தும் மதிப்பும் உயரும். பொருள் வரவு அதிகமாகும். அயல்நாட்டுத் தொடர்பு பயன்படும். பயணத்தால் அனுகூலம் உண்டாகும். போட்டிகள், பந்தயங்கள், விளையாட்டுகள், வழக்கு, வியாக்கியங்களில் வெற்றி காணச் சந்தர்ப்பம் கனியும். துணிச்சலான காரியங்களில் ஈடுபாடு கூடும். அரசுப் பணியாளர்கள், நிர்வாகத் துறையினர் பொறுப்புடன் பணியாற்றினால் சங்கடங்களுக்கு ஆளாகாமல் தப்பலாம். தந்தைவழி உறவினர்களுக்கு உதவவும்.

Aircom E
Travelss & Tours
Head Office: No.2A, Ratnam Road, Colombo -13
Tel: 011-4617109, 011-2444061, 077 731 0414
aircom46@hotmail.com
Air India, spicejet, JET AIRWAYS, malaysia airlines, SriLankan Airlines, QATAR AIRWAYS

இப்பொழுது அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டுக்களை மிகக் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்

சென்னை மற்றும் மதுரை செல்வதற்கான இருவழி பயணச்சீட்டுக்களை Spicejet விமானத்தில் விசேட சலுகைக் கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு (கட்டார், டுபாய்) வேலைவாய்ப்புக்காகச் செல்பவர்களுக்கு காப்புறுதி (Insurance) செய்து தரப்படும்.



- இந்தியா செல்பவர்களுக்கான விசா மிகக் குறுகிய காலத்தில் செய்து தரப்படும்.
- ஐரோப்பிய நாடுகளுக்கு விசா விண்ணப்பிப்பவர்களுக்குத் தேவையான பயணக் காப்புறுதி (Travel Insurance), விமான ரிக்கெற் (Itinerary) செய்து தரப்படும்.
- வெளிநாடுகளிலிருந்து Western Union பணப்பரிமாற்றல் சேவை மூலம் அனுப்பப்படும் பணத்தை விரைவாகப் பெற்றுக்கொள்ள முடியும்.


Branches
299, Stanley Road, Jaffna. 021 221 9113, 021 492 3570 077 505 2715
Main Street, Chankanai. 021 225 0061 077 4178385
70A Main Street, Mannar. 023 492 4035 077 258 2835
268, Thirugnanasampanthar street, Trincomalee. (In Front of Saraswathy Cinema Hall) 026 222 0583, 071 444 4777

# கிராமிய மட்ட சீரழிவுகளைத் தடுக்க களமிறங்கும் கிராமிய சமுதாயக் குழு

## ஓமந்தை பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு



எழுத்துப்பிழைகள், ஒப்பம் அற்ற சான்றிதழ்




வவுனியா, நவ.13

கிராமிய மட்டங்களில் உள்ள சமூகச் சீரழிவுகள், கலாசாரச் சீரழிவுகளைத் தடுக்க கிராமிய சமுதாயக் குழு களமிறங்குகிறது.

இவ்வாறு ஓமந்தை பொலிஸ் பொறுப்பதிகாரி சுரேஸ் த டி சில்வா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சோசலிச ஜன நாயக ஆட்சியின் கீழ் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் கிராம சமுதாய பொலிஸ் குழு மறுமலர்ச்சி வேலைத்திட்ட நடை முறைப்படுத்தலின் கீழ் வவுனியா மாவட்டத்தில் ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 12 கிராமங்களைச் சேர்ந்த கிராமியக் குழுவில் அங்கம் வகிக்கும் தலைவர், செயலாளர்களுக்கு நியமனச் சான்றிதழ் வழங்கும் வைபவம் ஓமந்தை பொலிஸ் பொறுப்பதிகாரி சுரேஸ் த டி சில்வா தலைமையில் ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் கடந்த வியாழக் கிழமை நடைபெற்றது.

இதன்போது கலந்து கொண்டு கிராமியக் குழுவில் அங்கம் வகிக்கும் தலைவர், செயலாளர்களுக்கு நியமனச் சான்றிதழ்களை வழங்கி வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிராம மட்டத்தில் எவ்வாறான பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டாலும் அதனையும் மீறி சட்ட விரோத செயல்கள் இடம்பெறுகின்றன. இதனைத் தடுக்கவே கிரா மிய சமுதாயக்குழு பொலிஸ் மா அதிபரால் அமைக்கப்பட்டுள்ளது.

இனி நாங்கள் அக்கறையுடன் – விழிப்புணர்வுடன் – செயற்படுவோம் என்ற உறுதிமொழியை எடுப்போம்.

குற்றச் செயல்கள் குறித்துப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்த பொதுமக்களுக்கு மொழிப் பிரச்சினை இருக்கிறது.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் சமுதாய பொலிஸ் குழுவின் மூலம் எம்மை அணுகலாம்.

கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக எமக்குப் பிரச்சினைகளைத் தெரிவிக்கலாம். முன்மாதிரியாக நாங்கள் பல்வேறு பொது வேலைத் திட்டங்களை முன்னெடுத்து சமுதாயத்தை நல்லதொரு சமுதாயமாக மாற்றுவோம்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை இனி உருவாகாதவாறு பொலிஸாரும் பொது மக்களும் இணைந்து செயற்பட வேண்டும்.

தற்போது மருதங்குளத்தில் தற்காலிக பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இது போன்று ஓமந்தையின் ஏனைய பிரதேசங்களிலும் சட்டவிரோத செயல்களை மட்டுப்படுத்த பொலிஸாரின் சேவை இருக்கும்.

அதற்கு உறுதுணையாகவே கிராமிய சமுதாயக் குழு இருக்க வேண்டும். இவர்கள் மூலமாகவும் பொலிஸாரும் இணைந்து மக்கள் பிரச்சினையைக் கேட்டறிந்து அதற்கேற்ப தீர்வை வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். – என்றார்.

உரையின் பின் சமுதாயக் குழுவின் உறுதிமொழி எடுக்கும் நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து மக்களது பிரச்சினைகளை அவர் கேட்டறிந்தார். இதன்போது, ஓமந்தையில் யானைப் பிரச்சினை இருப்பது பற்றியும், பொலிஸார் மொழிப் பிரச்சினையில் குறிப்பாக தமிழ் எழுத்து பிழைகளை விடுவது, போலிகளுக்கு இடமளிப்பதால் ஏற்படும் சிக்கல்கள் குறித்தும் சுட்டிகாட்டப்பட்டது.

அத்துடன், கிராமியக் குழுவில் உள்ளவர்களுக்கு நியமனச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இவ்வாறு வழங்கப்பட்ட சான்றிதழ்களில் கையொப்பம் எதுவும் இடப்படவில்லை எனவும், நியமனச் சான்றிதழில் எழுத்துப் பிழைகள் பல இருப்பது பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நிகழ்வில் ஆறுமுகத்தான் புதுக்குளம், பன்றிக்கெய்த குளம், நொச்சிக்குளம், ஓமந்தை, இளமருதங்குளம், சேமமடு, மருதங்குளம், கொந்தக்காரன்குளம், பாலமோட்டை, குஞ்சுக்குளம் உட்பட 12 கிராமங்களைச் சேர்ந்த கிராமிய சமுதாயக் குழுவின் தலைவர்கள், மதத் தலைவர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ஜ-100)

# 108 ஏக்கரில் நெற்செய்கை; ஆனால் உலரவிடுவதற்குத் தளம் இல்லையே!

## அமைத்துத் தருமாறு வன்னி விளாங்குளம் கமக்காரர் கோரிக்கை

முல்லைத்தீவு, நவ.13

முல்லைத்தீவு வன்னி விளாங்குளம் பகுதியில் தற்போது 108 ஏக்கர் வயல் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால், நெல்லை உலர விடுவதற்கான தளங்கள் எவையும் இல்லையென வன்னி விளாங்குளம் கமக்காரஅமைப்பு தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர பிரிவின் கீழ் உள்ள வன்னி விளாங்குளத்தின் கீழ் வருடாந்தம் 108 ஏக்கர நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கையும் 50 ஏக்கர் வரையான சிறுபோக செய்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு செய்கை பண்ணப்பட்டு அறுவடை செய்யும் நெல்லை பதனிட்டுக் களஞ்சியப்படுத்தி வைக்கக்கூடிய வகையில் நெல் உலர விடும் தளங்கள் எவையும் இல்லை என்றும் இதனால் அறுவடை செய்யும் நெல்லை உடனடியாக குறைந்த விலைகளில் தனியாருக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது என்றும் கமக்கார அமைப்புகள் கூறுகிறது.

அத்துடன் மாங்குளம் வெள்ளாங்குளம் பிரதான வீதியிலேயே நெல்லை உலரவிட்டு வருவதாகவும் இதனால் போக்குவரத்துகள் பாதிக்கப்படுகின்றன எனவும் தெரிவித்துள்ள இப்பகுதி கமக்கார அமைப்பு, தமக்கான நெல் உலரவிடும் தளம் ஒன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

(இ-81)

# வவுனியா அரிசி ஆலைகளில் தொழிலாளர் பற்றாக்குறை

வவுனியா, நவ.13

வவுனியாவில் உள்ள அரிசி ஆலைகள் பலவற்றில் வேலைகளுக்கு ஆள்கள் தேவையாக இருந்தும் தொழிலாளர்கள் பற்றாக்குறை நிலவுகிறது என்று வவுனியா அரிசி ஆலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில் :-

வவுனியாவில் 10 இற்கும் மேற்பட்ட அரிசி ஆலைகள் இருக்கின்றன. தற்போது அந்த அரிசி ஆலைகளில் பலதரப்பட்ட வேலைகளுக்கும் ஆள்கள் தேவையாக உள்ளனர். நாளொன்றுக்கு நல்ல சம்பளம் வழங்குவதுடன் தங்குமிடம், சாப்பாடு என்பனவும் வழங்குகின்றோம். ஆனாலும் வவுனியாவில் கூலிக்கு ஆள்களைப் பிடிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. பல அரிசி ஆலைகளில் முன்னாள் போராளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வேலைகளை வழங்கியிருக்கின்றோம்.

இன்று பலரும் வேலை இல்லை எனக் கூறுகின்ற போதும், எம்மிடம் வேலைகள் இருந்தும் ஆள்களைப் பிடிக்க முடியாத நிலைமையே காணப்படுகின்றது எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

(ஜ-100)

# கிளிநொச்சியில் தொடர் கைதுகள்

கிளிநொச்சி, நவ.13

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கொலையைக் கண்டித்து கடந்த மாதம் 25 ஆம் திகதி வடக்கில் மேற்கொள்ளப்பட்ட ஒரு நாள் கதவடைப்பு போராட்டத்தின் போது கிளிநொச்சியில் அமைதியின்மையைத் தோற்றுவித்தவர்கள் தற்போது கைது செய்யப்பட்டு வருகின்றார்கள். என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுவரை மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். என்று தெரிவிக்கப்படுகிறது.

ஊடகங்களில் வெளியான புகைப் படங்களை ஆதரமாகக் கொண்டு அவர்கள் கைது செய்யப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கதவடைப்பு நாளன்று ஏ-9 வீதியிலும் கிளிநொச்சி புறநகர் பகுதிகளிலும், சந்திகளிலும் ரயர்களை கொளுத்தியவர்கள் மற்றும் கலகம் விளை வித்தவர்களே இவ்வாறு கைது செய்யப்படுகின்றனர் என்று கூறப்படுகிறது.

இதேவேளை, குறித்த தினத்தன்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக கலகத்தில் ஈடுபட்டு பொலிஸாரைத் தாக்கிய நபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு தற்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அத்தோடு மேலும் பலர் தேடப்பட்டும் வருகின்றனர். என்று கூறப்பட்டது.

(ஜ-70)

# பூநகரி மண்டைக்கல்லாறு பாலம் ரூ.800 மில்லியன் செலவில் திருத்தம்

பூநகரி, நவ.13

கிளிநொச்சி, பூநகரி, மண்டைக் கல்லாறு பாலம் 800 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது என மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளிநொச்சி, பூநகரி, மன்னார், ஏ-32 வீதியின் புனரமைப்புப் பணிகள் நிறைவு பெற்று மக்கள் பாவனைக்கு விடப்பட்டபோதும், இதில் காணப்படும் மண்டைக்கல்லாறு பாலம் புனரமைக்கப்படாமல் காணப்படுவதனால் மழை காலத்தில் ஏற்படும் வெள்ளப்பெருக்கால் போக்குவரத்து துண்டிக்கப்படுவது வழமை.

இவ்வாறான செலவில் படகுகள் மூலமே போக்குவரத்து இடம்பெறும். அதேசமயம், அந்தப் பகுதி மிக மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது. எனவே, இப்பாலத்தை புனரமைக்குமாறு பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

அதையடுத்து, இந்தப் பாலத்தின் கட்டுமானப் பணிகளுக்கு 800 மில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இதற்கான கட்டுமானப் பணிகள் அடுத்த ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மண்டைக்கல்லாறு வழியாக கடல்நீர் உட்புகுந்து வன்னேரிக்குளம் குஞ்சுக்குளம் பகுதிகளில் பயிர்செய்கை நிலங்கள் உவர் நிலங்களாக மாறி வருவதால் மண்டைக் கல்லாறு பகுதியில் உவர் நீர் தடுப்புக் கதவுகளை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று மாவட்டச் செயலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(இ-11)

# மஸ்கெலியப் பகுதியில் மண்சரிவு எச்சரிக்கை

## 29 பேர் இடம்பெயர்வு



நுவரெலியா, நவ.13

அம்பகமுவ பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மஸ்கெலிய சாமிமலை பெயார்லோன் பகுதியில் ஏற்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கையை அடுத்து 29 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

சாமிமலை சின்ன சூரிய கந்தத் தோட்ட லயன் குடியிருப்பில் வசித்து வந்த 8 குடும்பங்களைச் சேர்ந்த 7 சிறுவர்கள் 21பெண்கள் உட்பட 29 பேர் சிறுவர் நிலையம், மற்றும் உறவினர்கள் வீடுகளிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை, பெய்த கடும் மழையால் குறித்த லயன் குடியிருப்புப் பகுதியில் 30 மீற்றர் தூரம் வரையில் வெடிப்புடன் மண் சரிவு ஏற்பட்ட நிலையிலேயே, பாதுகாப்பின் நிமித்தம் இவர்கள் தற்காலிகமாக இடம் பெயர்ந்துள்ளனர். மண்சரிவு ஏற்பட்டுள்ள பகுதியின் அபாயம் தொடர்பில் நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு அறிவித்துள்ளதாக மஸ்கெலியப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை சீரற்ற கால நிலை காரணமாக அக்கரப்பத்தனை ஹோல்புறூக் நியூ கொலனி பிரதேசத்தில் மண்சரிவு மற்றும் கற்பாறைகள் சரிந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன்பு கற்பாறைகள் சரிந்து விழுந்துள்ளன என்றும் அந்தப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஹோல்புறூக் நியூ கொலனி பிரதேசத்தில் வாழ்ந்து வரும் 8 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 35 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் கற்பாறைகள் சரிந்து விழுந்தன. இதன் காரணமாக சில குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். மேலும் சிலர் அச்சத்துடனே வாழ்ந்து வருகின்றனர்.

பல முறை கிராம அதிகாரி மற்றும் பிரதேச செயலகம், பொலிஸ் அதிகாரி ஆகியோருக்குத் தெரிவித்தும் இதுவரை எவ்வித பயனும் இல்லை என்று பிரதேச மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

மேலும் இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் உடனடியாக இதற்கு தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

## வெளிநாட்டு நாணயத்தாள்களை கடத்த முயன்றவர் கைது

கொழும்பு, நவ.13

ஒரு தொகை வெளிநாட்டு நாணயத்தாள்களை இந்தியாவுக்குக் கடத்த முயன்ற நபர் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தவெளிநாட்டு நாணயத்தாள்கள் 6.6 மில்லியன் பெறுமதியுடையவை என்று சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவைச் சேர்ந்த 45 வயதுடைய சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பிரஜையின் பொதியிலிருந்து அமெரிக்க டொலர் வெளிநாட்டு நாணயத்தாள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் ஒரு இலட்சம் அபராதத் தொகை செலுத்தியதை அடுத்து அவரை விடுதலை செய்துள்ளதாக சுங்க அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (எ)

## தினசரி ராசி பலன் 13.11.2016

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 7.45 – 8.45 |
| | மாலை : 1.30 – 2.00 |
| ராகு காலம் | : 4.30 – 6.00 |
| குளிகன் | : 3.00 – 4.30 |
| எமகண்டம் | : 12.00 – 1.30 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சுபமுகூர்த்த நாள் - மேல்நோக்கு நாள்

**மேஷம்** : பாராட்டு – காரியங்களில் கீர்த்தியும் பணிபுரியும் இடத்தில் சிறப்புக்களும் கிடைக்கும் நன்னாள்.

**ரிஷபம்** : தோல்வி – லட்சியங்கள் அலட்சியத்தால் துவண்டு விழ வாய்ப்பு உள்ளது.

**மிதுனம்** : நன்மை – நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறி நன்மைகள் பல கிடைக்கும்.

**கடகம்** : சலனம் – ஆசைகளின் பக்கம் அலைபாயும் மனதை நிலைக்கவிட்டால் நிம்மதி குறையும்.

**சிம்மம்** : சுகம் – இன்று உறவினாலும் நட்பினாலும் மனதில் மகிழ்ச்சி நிறையும் நன்னாள்.

**கன்னி** : பாசம் – இன்று சந்திராஷ்டமம் என்பதால் அன்பினால் அவஸ்தைகள் உண்டாகும் நாள்.
சந்திராஷ்டமம்: ஹஸ்தம் ,சித்திரை 1,2ம் பாதங்கள

**துலாம்**: சுபம் – எடுத்த காரியங்கள் அனைத்தும் நிறைவடையும் நாள்.

**விருச்சிகம்**: அமைதி –அமைதி நிறைந்து மனக் குழப்பங்கள் குறைந்து நிம்மதி காண்பீர்கள்.

**தனுசு**: வெற்றி – செய்யும் காரியங்களில் மேன்மை தந்து வெற்றி கிடைக்கும்.

**மகரம்**: உயர்வு – அனைத்துக் காரியத்திலும் முயற்சியுடன் செயற்பட்டால் உயர்வு ஏற்படும்.

**கும்பம்**: களிப்பு – குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு களிப்படையும் நன்னாள்.

**மீனம்**: பீடை – வீண் அலச்சல்களும், மனக் குழப்பங்களும் ஆசைகளினால் உண்டாகும்.

## இலங்கை முஸ்லிம்களின் பிரச்சினை நன்கு அறிவோம்

### ஐ.நா.சபை தெரிவிப்பு

நியூயோர்க், நவ.13

இலங்கை முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைதொடர்பில்தாம்தெரிந்துகொண்டுள்ளதாக ஐக்கிய நாடு கள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகார உபசெயலாளர் நாயகம் மிரோஸ்லாவ் ஜென்கா இதனைத் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏற்ற வகையில் கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை செயலகத்துடன் தொடர்பு கொண்டு செயல்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சர் ரிஷாட் பதியுதீன் எழுதிய கடிதம் ஒன்றுக்கு பதில் வழங்கும் நோக்கிலேயே உப செயலாளர் நாயகம் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் யுத்தம் இடம் பெற்ற காலத்தில் நேரடி யாகவும் மறைமுகமாகவும் முஸ்லிம்கள் எதிர்நோக்கிய பிரச்சினை குறித்து தாம் அறிந் துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் இலங்கைக் கான பயணம் ஒன்றை தாம் மேற்கொண்டிருந்தபோது, அரச அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சமயத் தலைவர்கள், சிவில் சமூகத்தவர்கள் போன்றோருடன் உரையாடியதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

## இலங்கை விஞ்ஞானிகளால் புதிய எரிபொருள் கண்டுபிடிப்பு



கொழும்பு, நவ.13

இலங்கை விஞ்ஞானிகளால் எரிபொருள் ஒன்று தயாரிக்கும் புதிய முறை ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

தேங்காய் தூள் மற்றும் எல்கி (ஒரு வகை பாசி) பயன்படுத்தி ருஹுணு பல்கலைக் கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடத்தால் புதிய எரிபொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

டீசலுக்கு இணையான திறன் புதிய எரிபொருளில் உள்ளதாக விஞ்ஞான பீடத்தினர் சுட்டிக் காட்டியுள்ளனர். சிரேஷ்ட விரிவுரையாளர் சின்னா ரூபசிங்கவின் தலைமையில் நடைபெற்ற தயாரிப்பு முயற்சி வெற்றி பெற்றுள்ளது.

உலகம் முகம் கொடுக்கும் எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வாக இந்த புதிய எரிபொருள் காணப்படும் என்று இலங்கை விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (ஏ)

## வாசகர் கருத்து மேடை



### தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாற்றங்களுடன் இடம்பெறுமா?

தற்போது நடைமுறையில் உள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முறைமையானது பரீட் சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு அதிக நெருக்கீட்டிகளைக் கொடுக்கின்றது. இந்தப் பரீட்சையில் சித்தியடைவதற்கென்றே தரம் ஒன்று பாடசாலை அனுமதியில் இருந்து பெற்றோருக்கு நெருக்கடிகள் ஆரம்பித்து விடுகின்றன.

இதனால் பிரபல்யமான ஆரம்பப் பாடசாலைகளில் இடம் பிடிப்பதற்கான போட்டிகளும் ஏற்படுகின்றன.

பாடசாலை அனுமதியில் உள்ள சிரமங்கள் சில பெற்றோரை ஒரு பிள்ளையுடனேயே குடும்பக்கட்டுப்பாடு செய்யும் நிலைமையை ஏற்படுத்தி உள்ளது. அடுத்து வளமான இளமைக் காலத்தை தொடர் மேலதிக வகுப்புகளுக்கு ஆண்டு ஒன்று முதல் அனும்பும் சூழல் ஏற்பட்டு விட்டது. ஆரம்பப்பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அதிபர்களுர்களுக்கும் நெருக்கீடுகள் அதிகரித்து உள்ளன.

இந்த நிலையில் கல்வியியலாளர்கள் பரீட்சை முறைமையில் புதிய அணுகுமுறையைக் கடைப் பிடிக்க வேண்டும்.

புலமைப்பரீட்சையை ஆண்டு ஐந்தின் மூன்று தவணைகளின் இறுதியிலும் மூன்று பரீட்சைகளாக வைத்தால் நல்லது. ஒவ்வொரு பரீட்சையையும் பரீட்சைத் திணைக்களம் நடத்தி வலயமட்டத்தில் புள்ளியிடலை மேற்கொள்ளலாம். மூன்று பரீட்சைகளின் சராசரியை புலமைப் பரிசில் பரீட்சையின் அடைவு மட்டத்தைக் கணிக்கப் பயன்படுத்தலாம்.

இவ்வாறு செய்வார்களானால் மாணவர்களின் தொடர்திறமை கணிப்பீடு செய்யப்படும். மாணவர்களுக்கு நெருக்கீடு ஏற்படாது பெற்றோர்கள் பரீட்சை தொடர்பாக நகர ஆரம்ப பாடசாலைகளில் அனுமதிக்க போட்டியிட மாட்டாகள். கிராமப் புறப் பாடசாலைகளில் கல்வி கற்க கூடுதலாக விரும்புவர்.

எனவே காலமாற்றத்துடனும் தொழில்நுட்ப மாற்றத்துடனும் மாணவர்களின் கற்றல்திறனை அதிகரிக்க நவீன கல்வித் திட்டமிடல் ஆக்கபூர்வமாக அமைதல் இன்றியமையாதது.

அந்த வகையில் ஆரம்பக் கல்வியில் பரீட்சை முறையிலும் மாணவர் நட்பு அணுகுமுறையைக் கைக்கொள்ளல் அவசியமாகின்றது.

மருத்துவர்.
சி. யமுனாநந்தா

# "ஓ! அமெரிக்கா...!! எங்கே போகிறாய்...?"

02

- வேணு கிருஷ்ணா -

டொனால்ட் ட்ரம்ப்பை விமர்சிக்கும் ஜனநாயகக்கட்சி சார்புடைய ஊடகங்களும் பத்திரிகையாளர்களும் அவரது பேச்சுக்களும் செயல்பாடுகளும் 'அமெரிக்கத் தன்மை'யுடையவையே அல்ல (Un American) என்று எழுதுகின்றனர். எனினும், டொனால்ட் ட்ரம்ப்பின் செல்வாக்கும் வெற்றியும் வேறொன்றை உணர்த்துகின் றது – அவர் இந்தக் கால கட்டத்தின் தேவை. யாருடைய தேவை? கார்ப்பரேட் முதலாளிகள், தேசங்கடந்த தொழிற்கழகங்கள் மற்றும் நிதி மூலதன சூதாடிகளின் இன்றைய தேவையாக டொனால்ட் ட்ரம்ப் இருக்கிறார்.

கடந்த பத்தாண்டுகளாக நீடிக்கும் உலகப் பொருளாதாரக் கட்டமைப்பு நெருக்கடி இன்னும் தீர்ந்தபாடில்லை. வால் வீதி சூதாடிகளின் சூதாட்ட வெறியில் புதைகுழிக்குள் வீழ்ந்த பொருளாதாரத்தை நிமிர்த்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஒவ் வொன்றும் அந்தப் புதைகுழியை மேலும் ஆழமாக்கியே உள்ளன. அமெரிக்க உற்பத்தித் தொழில்கள் அனைத்தையும் குறைந்த உழைப்பில் நிறைந்த லாபத்தையும் அதிக சுரண்டல் வாய்ப்புகளையும் வழங்கும் கிழக்கத்திய நாடுகளுக்கு பெயர்த்தெடுத்துச் சென்று விட்டனர், முதலாளிகள்.

இந்தச் சூழலில் அமெரிக்க நடுத்தர வர்க்கம் மேலும் மேலும் கடனில் வீழ்ந்துள்ளது. கல்லூரிப் படிப்பை முடிக்கும் போதே மிகப் பெரிய கடன் சுமையோடு வெளியேறும் மாணவர்களை வேலையின்மை வரவேற்கிறது. கடந்த பத்தாண்டுகளில் அமெரிக்காவில் வீடற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள அதே நேரம் வாங்க ஆளில்லாமல்




பூட்டிக் கிடக்கும் வீடுகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. வறுமையும் பசி பட்டினியும் அதிகரித்து வரும் அதே நிலையில் அமெரிக்க சமூகத்தில் எண்ணிக்கையில் ஒரு சத வீதம் கூட இல்லாத முதலாளிகளோ தங்கள் செல்வங்களை பன்மடங்கு உயர்த்திக் கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் ஏழை அமெரிக்கர்களிடையே வன்முறைப் போக்கு ஒரு புறம் அதிகரித்து வருகிறதென்றால் இன்னொரு புறம் போதைப் பழக்கம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது. மார்ஃபின் என்ற வழக்கமான போதைப் பொருளை விட 100 மடங்கு வீரியம்கொண்ட–ஹெரோயினை விட 40 மடங்கு வீரியம் கொண்ட – ஃபெண்டனில் (Fenteny) என்கிற சிந்தடிக் ஓபியத்தின் பயன்பாடு அமெரிக்காவின் தெற்கு மாநிலங்களில் அதிகரித்துள்ளது. இந்தப் போதை மருந்தால் இறப்பவர்களின் சதவீதமும் திடீரென உயர்ந்துள்ளது. இது தவிர மன அழுத்தத்தால் பாதிக்கப்படைந்தவர்களின் எண்ணிக்கையும் அதன் காரணமாக தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்துள்ளது.

அமெரிக்கப் பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கு வித்திட்டவர்கள் பெருமுதலாளிகளும் நிதி மூலதன சூதாடிகளும்; பங்குச் சந்தை ஓநாய்களும்தான் என்பதை வால் வீதி முற்றுகை இயக்கம் மிகச் சரியாக முன்வைத்தாலும் ஓர் அரசியல் இயக்கமாக அது உருப்பெறவில்லை. அது என்.ஜி.ஓக்கள் மற்றும் அடையாள அரசியல் குழுக்களின் சங்கமமாக மாறி கடைசியில் பிசுபிசுத்துப் போனது. மக்களிடையே அரசியல் ரீதியில் நம்பிக்கையான மாற்று ஏதும் தோன்றாத நிலையில் 'மீட்பரின்' வருகைக்கான களம் என 2016 ஜனாதிபதித் தேர்தலை ஏழை அமெரிக்கர்கள் பயன்படுத்தினர்.அந்த அமெரிக்க ஏழைகளுக்கு நல்ல வீடு, நல்ல தொழில், நல்ல மருத்துவம் முதலியனவற்றை அள்ளித் தருவதாக மைனர் ட்ரம்ப் வாக்குறுதி கொடுத்து, வெற்றியை உறுதிப்படுத்தினார்.

பொதுவாக 'மீட்பர்கள்' எனப்படுபவர்கள் அறிவாளிகளாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. வெறும் சவடால் பேச்சுக்கள் போதும்.

'மீட்பர்களின்' உளறல்களுக்கெல்லாம் எந்த அறிவியல், தத்துவ, சித்தாந்த அடிப்படைகளும் தேவையில்லை. நோக்கம் ஒன்றே ஒன்று தான் – மக்களின் இன்பக்கிளுகிளுப்பைத் தூண்டுவது போல் பேச வேண்டும். தேர்ந்த எத்தனைப் போல் பேசி மக்களின் ஓட்டுக்களை கவர்வது முதல் கட்டம்.

தற்போது டொனால்ட் ட்ரம்ப் முதல் கட்டத்தை தாண்டி வெற்றிக்கனியை பறித்துவிட்டார்... அமெரிக்கர்களின் வெள்ளை இன தேசிய வெறியை எவ்வளவு திறமையாக தூண்டினார், மீண்டும் சிறந்த தேசமாக அமெரிக்கா உருவாவதற்கு புதிய புதிய எதிரிகளை அமெரிக்கர்களிடம் கட்டமைத்தார். அதற்கு ஏழை அமெரிக்கர்கள் பலியாகிப் போனார்கள்.

அதன் பின் மீட்பர் கிடைத்த நிம்மதியில் அமெரிக்கர்கள் இன்பக் கனவில் மூழ்கியிருக்கும் நேரம் பார்த்து நிதிமூலதனச் சூதாடிகளும், ரியல் எஸ்டேட் முதலைகளும் களமிறங்குவார்கள். டொனால்ட் ட்ரம்ப் தன்னளவிலேயே ஒரு ரியல் எஸ்டேட் முதலை என்பதோடு பல்வேறு நிதிமூலதனச் சூதாடிகளின் நெருக்கமான கூட்டாளியுமாவார். அவரது தேர்தல் பிரச்சார செலவுகளை நிதிமூலதனக் கும்பலே பின்னின்று கவனித்துக் கொண்ட தகவல்கள் ஏற்கனவே வெளியாகி வருகின்றன.

ஜோர்ஜ் புஷ்ஷுக்கு சற்றும் குறையாத போர் வெறியனாக தன்னை காட்டிக் கொள்வதில் ட்ரம்ப் எந்தக் கூச்சமும் அடைவதில்லை. ஜனாதிபதி வேட்பாளருக்கான போட்டியில் இருக்கும் போது தனது எதிர்காலப் போர் இலக்குகளாக வட கொரியாவையும், ஈரானையும், சிரியாவையும் அடையாளம் காட்டியிருந்தார். ஒருவேளை போர் வெடித்தால் போர்த்தளபாட கார்ப்பரேட்டுகளின் காட்டில் டொலர் மழைதான் என்பதில் சந்தேகமில்லை.

உலகின் பொருளாதார இயக்கம் மொத்தமும் அமெரிக்கப் பொருளாதாரத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் நிலையில் அதன் விளைவுகள் ஒவ்வொன்றும் நம்மையும் பாதிக்கப் போவது உறுதி.

டொனால்ட் ட்ரம்பின் தேர்தல் முழக்கம் 'மீண்டும் அமெரிக்காவை சிறந்த தேசமாக்குவோம்' என்பதாகும்.

பாரசீக வளைகுடாவில் தோன்றி உலகை அச்சுறுத்துவதாக குறிப்பிடப்படும் ஐ.எஸ் பயங்கரவாதிகளே வெட்கப்படுமளவுக்கு இந்த டொனால்ட் பேசுகிறாரே என்று சில அப்பாவி அமெரிக்கர்கள் வருத்தத்தில் இருந்தார்களாம்.


(கேள்வி தொடரும்)

*மக்களிடையே அரசியல் ரீதியில் நம்பிக்கையான மாற்று ஏதும் தோன்றாத நிலையில் 'மீட்பரின்' வருகைக்கான களம் என 2016 ஜனாதிபதித் தேர்தலை ஏழை அமெரிக்கர்கள் பயன்படுத்தினர்.*

*பொதுவாக 'மீட்பர்கள்' எனப்படுபவர்கள் அறிவாளிகளாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை. வெறும் சவடால் பேச்சுக்கள் போதும்.*

*'மீட்பர்களின்' உளறல்களுக்கெல்லாம் எந்த அறிவியல், தத்துவ, சித்தாந்த அடிப்படைகளும்தேவையில்லை. நோக்கம் ஒன்றே ஒன்றுதான் – மக்களின்இன்பக்கிளுகிளுப்பைத் தூண்டுவது போல் பேச வேண்டும். தேர்ந்த எத்தனைப் போல் பேசி மக்களின் ஓட்டுக்களை கவர்வது முதல் கட்டம்.*

*தற்போது டொனால்ட்ட்ரம்ப் முதல் கட்டத்தை தாண்டி வெற்றிக்கனியை பறித்து விட்டார்..*



# தீபா – வல

● கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே' என்பது,
நம் தமிழ்ச்சங்கச் சான்றோர் வகுத்த முடிவு.
'இதென்ன அரசியல் கட்டுரையை,
திடீரென இலக்கியக் கட்டுரையாய் ஆக்குகிறீர்?'
உங்களில் சிலபேர் முறைப்பது தெரிகிறது.
அவசரப்படாதீர்கள்.
காரணத்தோடுதான் அந்த மேற்கோளைச் சொல்லியிருக்கிறேன்.
அதென்ன காரணம் என்கிறீர்களா?
கட்டுரையைத் தொடரந்து வாசியுங்கள்.
முடிவில் விடயம் தானே தெரியும்.

+++

இது சற்று முன்னரே எழுதியிருக்கவேண்டிய கட்டுரை.
வெளிநாட்டுப் பயணங்களால் இப்போதுதான் எழுத நேரம் கிடைக்கிறது.
'சரி உன் புகழ் பாடாமல் விசயத்துக்கு வா!'
உங்கள் அவசரம் புரிகிறது.
விடயம் இவ்வளவுதான்.
நடந்து முடிந்த தீபாவளியின் போது,
சினிமா டைரக்டராயும், நடிகராயும் இருந்து,
இப்போது அரசியல்வாதியாய் ஆகியிருக்கும்,
தமிழகத்தைச் சேர்ந்த சீமான் அவர்கள்,
கனடாவில் நம் மக்கள் அழைப்பில் கனடா சென்று பேசும்போது,
தீபாவளி வரலாற்றில் நீண்டகாலமாய்ச் சொல்லப்பட்டு நரகாசுரன்,
நம் தமிழர்தம் முப்பாட்டன் என்றும்,
ஆரிய சூழ்ச்சியால் அவன் கொல்லப்பட்டான் என்றும்,
நமது அறியாமையால் நம் மூதாதையரின் கொலையை,
நாமே கொண்டாடி வருகிறோம் என்றும்,
ஒரு புதுத் தீபாவளிப் பட்டாசைக் கொளுத்திப் போட,
புலம்பெயர் ஈழத்தமிழர்களின் நற்பெயரைக் கெடுக்கவென்றே அங்கு சென்ற,
நம் தமிழ்ச் சந்ததியை வெள்ளைக்காரச் சந்ததியாய் மாற்ற,
ஓயாது முயன்று கொண்டிருக்கும் ஒருசில புலம்பெயர் அரைகுறைகள்,
அடியும் தெரியாமல் நுனியும் தெரியாமல்,
தாமும் இனப்பற்றாளர்கள் எனக் காட்ட நினைந்து,
சீமானின் கூற்றை இணையத்தளங்களில் ஆங்காங்கே,
கட்டுரையாகவும், கவிதையாகவும், நாடகமாகவும் கூட,
வழிமொழிந்து நிற்கின்றனர்.

+++

ஒரு காலத்தில் தமிழகத்தில் திராவிடக் கழகங்களின் எழுச்சியின் போது,
இதே போலத்தான் இராவணனைத் தமிழன் என்றும்,
ஆரியனான இராமன் அவனைக் கொலை செய்ய,
ஆரியமாயையில் அகப்பட்ட கம்பன்,
இராமனைப் புகழ்ந்து இராவணனை இகழ்ந்து,
காவியம் படைத்தான் என்றும்,
அதனால் கம்பனையும் கம்பகாவியத்தையும்,
தமிழர்கள் நிராகரிக்கவேண்டும் என்றும்,
ஒரு புதுப்பிரசாரத்தைச் செய்யத் தொடங்கினார்கள்.

+++

இவர்களது பிரசாரத்தைக் கண்டு,
கம்பனை ஆழக் கற்றோர் தமக்குள் சிரித்துக் கொண்டனர்.
மேற் பிரசாரக்காரரின் நோக்கம் அவர்களுக்குப் புரிந்தது.
தமிழர் வாழும் இடங்களிலெல்லாம் எத்தனையோ தலைமுறையாய்,
வேரூன்றி நிற்கும் கம்பனைத் தொட்டால்,
சமூகத்தின் கவனம் தம்பால் திரும்பும் எனும் அவர்களின் உத்தி அறிந்து,
அப் பெரியவர்கள் உயர்ந்தவை அழியா எனும் நம்பிக்கையோடு,
வாழாது ஒதுங்கி இவர்தம் விளையாட்டுக்களை வேடிக்கை பார்த்தனர்.

+++

அக்காலத்தில் இப்பிரச்சினையைக் கிளப்பியவர்கள்,
வலிமை மிக்க ஆற்றலாளர்கள் என்பது நிஜம்.
அறிஞர் அண்ணாத்துரை போன்ற,
அறிவும், சொல்வன்மையும் மிக்க ஒருசிலர் ஒன்றிணைந்தே,
இப்பிரச்சினை பற்றி பிரசாரம் செய்யத் தலைப்பட்டனர்.
**பொய் உடை ஒருவன் சொல்வன்மையினால்**
**மெய் போலும்மே மெய் போலும்மே**
என்ற பெரியோர்தம் கூற்றுக்கு இயைய,
இவ்வல்லமையாளர்களின் வாய் ஜாலத்தில் மயங்கி,
குறிப்பிட்ட ஓர் இளையதலைமுறை,
கம்பகாவியச் சொத்தினை இழந்து போயிற்று.

+++

ஆனால் கம்பன் தோற்றானல்லன்.
ஓடி முயன்ற இவர்தமை,
கம்பன் அசையாது இருந்து வென்றான்.
கம்பகாவியத்தை எரிப்போம் என்றவர்கள்,
கால ஓட்டத்தில் கம்பனை அங்கீகரித்துப் பணிந்தனர்.
திருவாசகத்தையும், கம்பனையும் கற்காதவர்கள்,
தமிழராக மாட்டார்கள் என்று அண்ணா,
பிற்காலத்தில் வெளிப்படையாகவே பேசினார்.
அதுபோலவே கலைஞர் கருணாநிதியும்,
கம்பன் விழாக்களில் கலந்து உரையாற்றி மகிழ்ந்தார்.
இவை நடந்து முடிந்த வரலாறுகள்.

அவ் வல்லமையாளர்கள் தம் தோளில் ஏற்றி,
ஆற்றாது தோற்று இறக்கிய,
அவ் ஆரிய எதிர்ப்புக் காவடியை,
சற்று வடிவம் மாற்றி தன்தேவைக்காக,
இப்போது சீமான் தூக்கத் தலைப்பட்டிருக்கிறார்.




+++

இவரும் முன்னையவர்களுக்குச் சற்றும் தாழாத,
சொல்வன்மையாளர் என்பதை எவரும் மறுக்கத் துணியர்.
தன் சொல்வன்மையை மட்டுமே முதலாகக் கொண்டு,
அரசியலில் இறங்கி தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர் இவர்.

ஆரம்பத்தில் தமிழர்தம் உணர்ச்சியைத் தூண்ட,
எரிந்து கொண்டிருந்த ஈழப்பிரச்சினையை,
கையில் எடுத்துக் களத்தில் குதித்தார் சீமான்.
அவரது ஈழத்தமிழர் பிரச்சினை பற்றிய உரைகளைக் கேட்டு,
அவர் பின்னால் பெருங்கூட்டம் கூடியது.
போர் மண்ணிலிருந்து தம் உயிர்காக்கத் தப்பி ஓடி,
வெளிநாடுகளில் பாதுகாப்பாக வசித்துக் கொண்டு,
ஈழத்தமிழர்களின் இரட்சகர்கள் நாமே என்று காட்டி வந்த,
புலம்பெயர் ஈழத்தமிழர்களில் ஒருசிலர்,
சீமானின் சிஷ்யர்கள் ஆனார்கள்.
இவர்களால் சீமான் பயனுற சீமானால் இவர்கள் பயனுற,
இக் கூட்டு வலிமையுற்று நீடித்தது.

+++

வெறும் வார்த்தை அழகு எத்தனை நாள் நீடிக்கமுடியும்.
வெறும் சொல் அழகால் மட்டும் பொருளை நிறுத்த முடியுமா?
**உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின்,**
**வாக்கினிலே ஒளி உண்டாகும்**
என்று பாரதி சும்மாவா சொன்னான்.
சீமான் கட்டிய வார்த்தைப் பந்தங்கள்,
கால ஓட்டத்தில் கழறத் தொடங்கின.
மேடைதோறும் 'ஒரு ஈழத்தமிழ்ப் போராளிப் பெண்ணையே,
திருமணம் செய்வேன்' என்று முழங்கியும்,
பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்தும் வந்த சீமான்,
பிறகு அக் கூற்றை முற்றாய் மறந்து,
வசதிமிக்க முன்னாள் அமைச்சர் ஒருவரின் மகளைத் திருமணம் செய்து,
தனது வாக்குறுதியைக் காற்றில் பறக்க

+++

பின்னர் புதுக்கட்சி தொடங்கிய சீமான்,
இன்று ஒரு கட்சித்தலைவராய்,

தன் நாக்கு வலிமையால் வாக்கு வலி
வலம் வந்து கொண்டிருக்கிறார்.
இவர்தான் அண்மையில் நரகாசுரனை
தமிழர்தம் முப்பாட்டனாய் முன்மொழி
சில நாள்களின் முன்தான்,
முருகப்பெருமான்தான் த்மிழர்தம் மு
மேடைதோறும் வேலேந்தி விளையாட்
முருகனே நம் முப்பாட்டன் என்று சொ
இன்று திடீரென நரகாசுரனுக்கு அப்ப
தமிழ் இனத்துக்குப் பெருமை சேர்த்தி
முருகனும் தமிழர்தம் முப்பாட்டனாம்.
நரகாசுரனும் தமிழர்தம் முப்பாட்டனா
நல்ல வேடிக்கை!
முருகனுக்கும், நரகாசுரனுக்குமான
பல பேராசிரியர்கள் தம் ஆய்வைத் தெ

+++

சீமானைக் குறை சொல்வதல்ல இக்க
அவர் தேவை புரிகிறது.
அவர் தேடல் புரிகிறது.
ஒரு காலத்தில் சிலர் கம்பனைப் பயன்
இப்போது அவர் நரகாசுரனைப் பயன்

அஃது அவர்கள் நாட்டின் அரசியல்.
அங்கு அவர்கள் எதுவும் செய்துவிட்
காலம் மாற அவர்தம் கருத்து மாறும்.
கருத்து மாற காட்சிகள் மாறும்.
ஏன் கட்சிகளும் மாறலாம்.
அங்கு இவை ஒன்றும் புதுவிடயங்கள்
எனது பிரச்சினை வேறு.

+++

ஈழத்தமிழர்கள் ஆழமானவர்கள்.
இறைவழிபாட்டில் அசையாத நம்பிக்

லி!

ம பறக்கவிட்டார்.

+++

சீமான்,




த வலிமை தேடி,

சுரனை,
மொழிந்திருக்கிறார்.

ம் முப்பாட்டன் என்று சொல்லி,
ளயாட்டுக் காட்டினார் இவர்.
று சொல்லிவந்த இவர்,
அப்பட்டத்தை வழங்கி,
ர்த்திருக்கிறார்.
னாம்.
டனாம்.

ான இரத்த உறவின் வழிதேடி,
த் தொடங்கிவிட்டார்களெனக் கேள்வி.

++

இக்கட்டுரையின் நோக்கம்.

பயன்படுத்தியமை போல,
பயன்படுத்துகிறார் என்பது
வெளிப்படை.
ல்.
விட்டுப் போகட்டும்.
றும்.

ங்கள் அல்ல.

++

.
ம்பிக்கை கொண்டவர்கள்.

பண்பாட்டில் ஊறியவர்கள்.
தமிழ்மேல் தாளாத காதல் கொண்டவர்கள்.
சுதந்திரவேட்கை மிக்கவர்கள் என்று,
உலகமே இன்று நம்பிக்கை கொண்டிருக்கிறது.
இதுவரை நம் தமிழர்கள் அங்ஙனம் தான் வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.
ஒற்றுமையாய், உறவாய் ஒரு கிராமம் போல,
தம் தாய் மண்ணை நெருக்கி நேசித்து வாழ்ந்தவர்கள் அவர்கள்.
கடந்த சில தசாப்தங்களாக உரிமைக்காய் நிகழ்ந்த போரும்,
அப்போர் சார்ந்து நிகழ்ந்த சம்பவங்களும்,
அப்போர்ச் சூழலைப் பயன்படுத்தி,
உள்நுழைந்த வேற்றாரின் விருப்பு விளையாட்டுக்களும்,
நம்ஈழத்தமிழர்களின் இயல்புவாழ்க்கையை ஓரளவுசிதைத்துவிட்டன.
ஓரளவென்ன ஓரளவு நிறையவே சிதைத்துவிட்டன.

+++

அச் சிதைவைப் பயன்படுத்தி,
ஆங்காங்கு வணிகம் நடத்த சிலர் முற்பட்டு நிற்கின்றனர்.
அவருள் சிலர் நம்மவர். சிலர் மாற்றவர்.
யாரானாலும் இவர்தம் மாயவலையில் இருந்து மீளுதலே,
நம் இனத்தின் உறுதிக்காம் முதல் வழி.

+++

என்னவோ தெரியவில்லை குற்றவாளிகளாய் வரலாற்றில் பதிவான,
அரக்கர் கூட்டத்தை நம் மூதாதையராய் இனங்காட்டுவதில்,
சிலருக்கு ஏதோ மகிழ்ச்சி.
இராவணனைத் தமிழன் என்றார்கள்.
இதிகாச இலக்கியக் கதைகள் என்றோ நடந்து முடிந்தவை.
இக்கதைகளை உறுதி செய்ய புராணங்கள், இலக்கியங்களை அன்றி,
நிச்சயமான வேறு சான்றுகள் கிடையா என்பது திண்ணம்.
அவை தவிர்ந்த வரலாற்றுச் சான்றுகளை இவர்களால் தேட முடியாது.
ஆனால் சற்றும் கூச்சமின்றி,
ஏதோ இராவணனதும், நரகாசுரனதும், முருகனதும்
'போர்ச்சேர்டிவிகேற்' கிடைத்தாற்போல,
இவர்தாம் எம் மூதாதையர் என்று,
இவர்கள் போடும் கூக்குரலைக் கேட்ட,
கற்றார் எவரும் நகையாதிரார் என்பது திண்ணம்.

+++

இராவணன் பற்றிப் பேசும் இலக்கியங்கள் எல்லாமே,
அவன் மாற்றான் மனைவியை விரும்பியமையையும்,
பறக்கும் தன் வாகனத்துக்கு இடையூறாய் இருக்கும் காரணத்தால்,
சிவன் இருந்த கயிலை மலையை இடம்பெயர்க்க முனைந்தமையையும்,
பின் சிவனால் அம்மலையின் கீழ் நசிக்கப்பட்டு,
சாமகீதம் பாடி அவரை மகிழ்வித்து வரம் பெற்றமையையும்,
தெளிவுறச் சொல்கின்றன.
மாற்றான் மனைவியை விரும்புபவனும்,
சிவனைப் போற்றாதவனுமாகிய இவனா நம் குல முதல்வன்?
கேட்கவே நகைப்பாயிருக்கிறது.

+++

வரலாற்றைக் கடந்த ஒரு நல்லவனை,
நம் மூதாதையன் இவன் என்று,
கற்பனையாயேனும் சொல்லிப் பெருமைப்படின்,
அதனை அறிவுடைமை எனலாம்.
அதைவிட்டு,
தேடி எடுத்து ஒரு தீயவனை நம் மூதாதையனாய் உரைக்க
முற்படுகிறோம்.
என்னே எமது அறியாமை!

+++

இராவணனை நம்மவனாக்க
இவர்கள் சொல்லும் காரணம் அவன் திராவிடனாம்.
இலக்கியம் கற்காத குற்றம்.
அனைத்து இலக்கியங்களும்,
இராவணன் பிரம்மனுடைய புதல்வனுடைய புதல்வன் என்கின்றன.
பிரம்மன் வழிவந்தமையால் அவன் பிராமணன்.
சூர்ப்பணகையிடம் பேசும் இராமன்,
'அந்தணர் பாவை நீ அரசரில் வந்தோன் நான்' என்கிறான்.
இது கூடத் தெரியாமல் அவனைத் திராவிடன் என்கின்றார்கள்
இவர்கள்.

+++

எந்தப் பாவையைப் பேசினாலும்,
ஒருவருக்குத் துன்பம் வரும்போது அவரது தாய்ப்பாவை தானே வரும்.
கயிலையை இராவணன் தூக்க சிவன் அவனை அழுத்துகிறார்.
துன்பம் பொறாத இராவணன் சாமவேதம் பாடினான் என்கிறது வரலாறு.
எந்த இலக்கியத்திலும் அவன் தமிழ்ப்பாடல் பாடியதாய் சான்று இல்லை.
அதிலிருந்தே அவன் தமிழன் இல்லை என்று தெரியவில்லையா?

+++

வேறுசிலர்,
சம்பந்தர் தனது எல்லாப் பதிகங்களிலும் வரும்,
எட்டாவது பாடல்களில் இராவணனைப் பாடியிருப்பதால்,
அவனைச் சிவபக்தன் என்று சொல்லி வருகிறார்கள்.
உண்மை அறியாத உத்தமர்கள்.
சைவத்தின் வியாக்கியானகர்த்தாவாகிய சேக்கிழார்,
சம்பந்தர் இராவணனை எட்டாம் பாடலில் வைத்தமைக்கான காரணம்
சொல்கிறார்.

**மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையின்**
**கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளும் எனக்காட்ட**
**எண்ணமிலா வல்லரக்கன் எடுத்துமுறிந் திசைபாட**
**அண்ணலவற் கருள்புரிந்த ஆக்கப்பா டருள்செய்தார்.**

பிழை செய்தவர்களும் வந்தடைந்தால் இறைவன் அருள்செய்வான்
என்பதைக்காட்டவே,
சம்பந்தர் எட்டாம் பாடலில் இராவணனை வைத்தார் என்கிறார் அவர்.
அவர் கருத்தை மீறி அவனைச் சிவபக்தன் என்கிறார்கள் இவர்கள்.
ஓர் உண்மைச் சிவபக்தன் இறைவன் இருக்கும் கயிலையைக்
கண்டால்,
அதை வலம் வந்து வணங்குவானா? அன்றேல்,
அதனை நகர்த்திவிட்டு செல்லத் துணிவானா?
இதனைக் கூட சிந்திக்கமுடியாத இவர்கள் அறிவை என் சொல்வேன்?

+++

நரகாசுரன் கதையும் இதுதான்.
இவனும் மகாவிஷ்ணுவுக்கும் பூமிதேவிக்கும் பிறந்த புதல்வன்
என்றே,
புராணங்கள் கூறுகின்றன.
தாயால் மட்டுமே மரணம் வரவேண்டும் என்று வரம் பெற்று,
உலகைத் தனது கொடுமையால்; இருள் சூழ செய்தவன் இவன்.
இவனது கொடுமையினின்றும் உலகை மீட்க,
மகாவிஷ்ணு, பூமாதேவியின் அவதாரமாய்த் திகழ்ந்த,
தன் மனைவியாகிய சத்தியபாமையைக் கொண்டு,
இவனைக் கொன்றார் என்பது வரலாறு.
தாயால் கொல்லப்படும் அளவுக்குத் தீயவனாய் விளங்கியவன்
அவன்.
எங்காவது தாயே தன் பிள்ளையைக் கொல்வாளா?
அந்த அளவுக்கு அவன் கொடுமை விரிந்திருந்தது.
அவன்தான் நம் மூதாதையனாம்.
இந்தப் புராணங்கள் எல்லாம் பொய்யென்றால்,
அவன் நம் மூதாதையன் என்பதற்காம் சான்று,
எங்கு இருக்கிறது என்று இவர்கள் சொல்லவேண்டும்.
பாரம்பரியமாக நாம் பேணிவந்த மரபுகளை,
அரசியல்வாதிகளின் கற்பனையான கதைகேட்டு மாற்றிக்கொள்ள,
ஈழத்தமிழர்கள் இடமளியார்கள் என்பது திண்ணம்.

+++

நம் தமிழும் சமயமும்,
யோகக்காட்சி வாய்த்த ஆன்றோர்களால் வகுக்கப்பட்டவை.
அவற்றில் அரசியல் விளையாட்டுக்களுக்கு,
ஒருக்காலும் இடமளிக்கமுடியாது.
தமிழ்நாட்டார் தங்கள் முடிவை தெரிவிக்கிறார்களோ இல்லையோ,
ஈழத்தமிழர்கள் இந்த விடயத்தில்.
தமது அசையாத்தன்மையை அறுதியிட்டு உரைத்து நிற்கிறார்கள்.
எம்மவரிலும் சில சில்லறைகள் இவ் அசைவுகளால் சிதறி சத்தம்
எழுப்பலாம்.
ஆனால்,
நம் ரிஷிகளால் வகுக்கப்பட்டு நம் அறிஞர்களால் அங்கீகரிக்கப்பட்டு,
நம் மூதாதையர்களால் பின்பற்றப்பட்டு வந்த உயர் மரபுகளை,
ஆழம்மிக்க ஈழத்தமிழர்கள் எக்காரணம் கொண்டும் கைவிட
மாட்டார்கள்,
என்பது மட்டும் திண்ணம்.


+++

இக் கட்டுரையின் ஆரம்பத்தில்,
'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே' எனும்,
சங்கச் சான்றோருடைய மேற்கோளைக் குறிப்பிட்டிருந்தேன்.
இத் தொடர் ஆழமானது.
எண்ணிக்கையின் அளவை வைத்து,
உலகு என்பதன் அர்த்தத்தைத் தீர்மானிக்காமல்,
ஒருவரானாலும் உயர்ந்தவரை வைத்தே,
உலகைத் தீர்மானித்தல் வேண்டும் என்பதனையே,
மேற் சங்கத் தொடர் நமக்கு உறுதி செய்கிறது.
அதனாற்றான் சொல்கிறேன்.
உயர்ந்தவர்களால் வகுக்கப்பட்ட நம் பாரம்பரிய மரபுகளை,
தம் தேவைக்காய்ப் பேசுவோர்தம் கவர்ச்சிப் பேச்சில் மயங்கிக் கைவிடுதல்,
நிச்சயம் உண்மைத் தமிழர்தம் செயலாகாது.


+++

இணையங்கள் ஊடாக,
இப்பொய்ச் செய்தியின் புகழ் பரப்ப நினைப்போர்க்கு ஒரு
வேண்டுகோள்.
தீபாவளியைத் தீபாவலி ஆக்காதீர்கள்.

# மனப்புரட்சியும் மனித விடுதலையும் 1



ஜிட்டு கிருஷ்ண மூர்த்தி



“மனித குலம் இன்று தன்னைத் தானே அழித்துக்கொள்ளும் ஒரு பயங்கர அணு யுகத்தின் விளிம்பில் நிற்கின்றது. உலக மானது பிளவுபட்டு, மனித உறவுகள் சிதைபட்டுக் கிடக்கின்றன. வல்லரசுகள் என்றும், நாடுகள் என்றும், இனங்கள் என்றும், மதங்கள் என்றும், வர்க்கம் என்றும், சாதி என்றும் மானிடம் சிதறுண்டு, முரண்பட்டு மோதுகின்றது. இனவாதம், மதவாதம் என்ற வெறிபிடித்த சித்தாந்தங்கள் வன்முறைக்குத் தூபமிடுகின்றன. உலகின் பல முனைகளில் யுத்தங்களும், போராட்டங்களும், புரட்சிகளும் வெடித்து, மனிதனை மனிதன் அழித்துக் கொண்டிருக்கின்றான்.”

**தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்**



*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*

*‘விடுதலை’ என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் ‘தேசத்தின் குரல்’ அன்ரன் பாலசிங்கம்.*

*“இந்த எழுத்துக்கள் யாரையாவது சிந்திக்கத் தூண்டும் என்ற நம்பிக்கை எனக்குண்டு” - என்ற எதிர்பார்ப்புடன் அவர் வரைந்த இந்தக் கட்டுரைத் தொடரை நமது தற்போதைய சமூகத்தின் சிந்தனைக்காக இங்கு முன்வைக்கிறோம்.*

*அவர் எதிர்பார்த்தமை போல மனித மனம் பற்றிய இந்தத் தொடர், நமது வாசகர்களின் சிந்தனையைத் தூண்டும் என்றே நாமும் நம்புகிறோம்.*

*அவரது சிந்தனைத் தெளிவை நாமும் தரிசிப்போம். வாருங்கள்...!*

**யார்** இந்த ஜிட்டு கிருஷ்ண மூர்த்தி?

கடவுள் என்றும், ஞானி என்றும், புத்த பெருமானின் அவதாரம் என்றும், அனுபூதிமான் என்றும், ஆன்மயோகி என்றும், தத்துவதரிசி என்றும் நாம் பதிக்கும் சமூக படிமங்களுக்கும் எமக்குத் தெரிந்த சாதாரண அளவீடுகளுக்கும் அகப்படாத ஓர் அபூர்வமான மனிதர்.

அவர் யார்? என்பதை வரையறுத்துக் கொள்வது கடினம். அப்படி வரித்துக் கொண்டு நாம் அவரைப் புரிந்துகொள்ளவும் முடியாது.

‘அவர் யார்? என்ற கேள்விக்கு ‘அவர் யாருமற்றவர்’ என்பதுதான் பொருத்தமான பதில். ஏனென்றால், அவர் தனது சுயத்தை, அகந்தையை, ஆளுமையை அகத்தின் முகத்தை அழித்துக் கொண்டவர்.

அவர் ஓர் அசாதாரண மனிதர். அழகான மனிதர். 90 ஆண்டுகள் வரை எம்மோடு இப் பூமியில் வாழ்ந்தார். அதில் 75ஆண்டுகள் வரை எம்மோடு கலந்துரையாடினார்; போதித்தார்; எழுதினார்.

மனித மனம் பற்றி - மனித உறவுகள் பற்றி - மனித விழிப்புணர்வு பற்றி - மனித விடுதலை பற்றி - மனித வாழ்வின் சகல சிக்கலான பரிமாணங்கள் பற்றியும் மிகவும் கனிவுடன், மிகவும் அக்கறையுடன், மிகவும் துல்லியமான தெளிவுடன், மிகவும் அழகான, அற்புதமான கவிதா மொழியில் பேசினார்; எழுதினார்.

அவரது போதனைகள், எழுத்துக்கள் எல்லாவற்றையும் நாம் ஒன்று சேர்த்துத் தொகுத்துப் பார்த்தால், அவை ஒரு பெரும் தத்துவார்த்தமாகவோ, கருத்துக் களஞ்சியமாகவோ அல்லது ஓர் ஆன்மீக தரிசனமாகவோ அமையமாட்டா. அவை அனைத்துமே எம்மைநோக்கி எறியப்படும் கேள்விகள்; எம்மோடு சேர்ந்து நடத்தப்படும் தேடுதல்கள்; எமது கனவுகளைக் கலைத்து, நம்பிக்கைகளை உடைத்து, விழிப்புணர்வைத் தூண்டும் விசாரணைகள். கிருஷ்ணமூர்த்தி எமக்கு எவ்வித தத்துவக் கோட்பாடுகளையும் நெறித்து விடவில்லை. ஆன்மீக ஞானதரிசனத்தை அளித்துவிடவில்லை. உண்மைப் பொருளைக் கண்டுகொள்ளும் ஒரு மார்க்கத்தைக் காட்டவில்லை.

யுகம் யுகமாக எமக்குள், எமது மனக்குகை இருட்டினுள் நாமே வரைந்து விட்ட நிழலுருவங்களை, புனைந்து விட்ட பொய்மைகளைக் கண்டுகொள்வதாயின், “நாமே எமக்கு ஒளியாக வேண்டும்” என்கிறார் கிருஷ்ணமூர்த்தி. அவரது போதனை ஒரு புதுமையான சுயதரிசனக் கண்ணாடி.

மனித குலம் இன்று தன்னைத் தானே அழித்துக்கொள்ளும் ஒரு பயங்கர அணு யுகத்தின் விளிம்பில் நிற்கின்றது. உலக மானது பிளவுபட்டு, மனித உறவுகள் சிதைபட்டுக்கிடக்கின்றன. வல்லரசுகள் என்றும், நாடுகள் என்றும், இனங்கள் என்றும், வர்க்கம் என்றும், சாதி என்றும் மானிடம் சிதறுண்டு, முரண்பட்டு மோதுகின்றது. இனவாதம், மதவாதம் என்ற வெறிபிடித்த சித்தாந்தங்கள் வன்முறைக்குத் தூபமிடுகின்றன. உலகின் பல முனைகளில் யுத்தங்களும், போராட்டங்களும், புரட்சிகளும் வெடித்து, மனிதனை மனிதன் அழித்துக் கொண்டிருக்கின்றான்.

இவ்விதம் மனித வாழ்வு சீர்குலைந்து கிடப்பது ஏன்? மனித உறவுகள் சிக்குப்பட்டு குரோதம் அடைவது ஏன்? மனிதர்களிடையே அன்பும், அமைதியும், ஒத்திசைவான வாழ்வும் செத்துப்போனமை ஏன்? மனிதன் முழுமையோடு, நிறைவோடு, உள்ளும் புறமும் இசைவாக, அமைதியோடு, ஆனந்தமாக வாழ முடியாதா?

மனிதன் நாகரீகங்களைத் தோற்றுவித்தான். அவை அழிந்து போயின. சாம்ராஜ்யங்களை கட்டி எழுப்பினான். அவை இடிந்து விழுந்தன. சமுதாய வடிவங்களை உருவாக்கினான். அவை சிதைந்து போயின. மனிதன் மீண்டும் மீண்டும் ஓர் உன்னதமான, புதுமையான சமுதாயத்தைக் கட்டியெழுப்பி விழைகிறான். சமுதாய அமைப்பை மட்டும் மீண்டும் மீண்டும் மாற்றி அமைத்து விடுவதால் மனிதன் சுபீட்சம் அடைய முடியுமா?

தனி மனிதனுக்குப் புறம்பான சக்தியாக - தனி மனிதனை ஆட்டிப்படைக்கும் சக்தியாக - தனி மனிதன் தனித்துவத்தை நசுக்கிவிடும் சக்தியாக - சமுதாய அமைப்பு இயங்கும் பொழுது, அது தனி மனித முழுமைக்கும், மனித விடுதலைக்கும் வழி வகுக்குமா? சமுதாயம் என்பதே சிக்கலான மனித உறவுகளைக் குறிப்பது அல்லவா? இந்த உறவு எனக்கும் உனக்கும் இடையிலான உறவு. அவனுக்கும் மற்றவனுக்கும் இடையிலான உறவு. மனித உறவுகளின் ஒட்டுமொத்தமான சிலந்தி வலைப் பின்னலாக சமூக அமைப்பு உருவகம் பெறுகிறது. தனி மனிதன் தனது மன உலக இருட்டினுள் பாதை தெரியாது தடுமாறும் பொழுது - பொய்மைகளில் புதைந்து குழம்பும் போது - எனக்கும் உனக்கும் உள்ள உறவுகளில் புரிந்துணர்வு இல்லாத போது - அவனுக்கும் மற்றவனுக்கும் உள்ள உறவுகளில் முரண்பாடு தலை தூக்கும் பொழுது - சமுதாயத்தை மாற்றி அமைக்க விளைவதில் என்ன அர்த்தம் இருக்கிறது. அக உலகத்தை அறவே உதாசீனம் செய்து, புறவுலகத்தை, பொருள் உலகத்தை மட்டும் சீரமைத்தால் மனித வாழ்க்கை சிறப்புற முடியுமா?

இவ்விதம் கேள்விகளை எழுப்பும் கிருஷ்ணமூர்த்தி, “முதலில் தனி மனிதன் தனக்குள், தனது மன உலகில் ஒரு புரட்சியைச் செய்ய வேண்டும்” என்கிறார்.

“சமுதாயப் புரட்சியானது, தனி மனிதனில் இருந்து, தனி மனிதனின் உள்ளீடான அகவுலகப் புரட்சியாக ஆரம்பிக்கப்படவேண்டும். தனி மனிதனின் உள்ளீட்டான புரட்சி நிகழாமல், மனவமைப்பு மாற்றப்படாமல், தனி மனிதனுக்குப் புறம்பாக, வெளியே நிகழும் எவ்வித புதுமையான சமூகப் புரட்சியும் உள்ளடக்கத்தில் உயிரற்றதாகவே இருக்கும். உயிர் துடிப்புள்ளதும் காலத்தால் சிதைந்து போகாததுமான ஒரு புதிய சமூக வடிவத்தை கட்டியெழுப்புவதாயின் தனி மனிதனின் மனவரங்கில் ஒரு புரட்சி நிகழ்வது அவசியம்” என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

இந்த மனப் புரட்சியானது பிரக்ஞையின் விழிப்புணர்வாக, பிரக்ஞையின் அடித்தளத்திலிருந்து வெடித்தெழ வேண்டும்.

நானே என்னை புரிந்துகொள்ளாத வரை, வாழ்வின் அர்த்தத்தை உணர்ந்து கொள்ளாத வரை, பொய்மைகளின் இருண்ட சுவர்களுக்குள் நான் சிறைப்பட்டுக் கிடக்கும் வரை, நான் மற்றவனை புரிந்து கொள்வது எங்ஙனம்? இந்தச் சமுதாயத்தையும் உலகத்தையும் அறிந்துகொள்வது எங்ஙனம்?

இந்தச் சமூகமோ உலகமோ என்னிடமிருந்து மாறுபட்ட ஒரு பூடகமான பொருள் அல்ல. நானே இந்தச் சமூகத்தையும் உலகத்தையும் சிருஷ்டித்துள்ளேன். இந்தச் சமூகமும் உலகமும் எனது சுயத்தின் வெளிப்பாடாகவே பொருளுருவம் பெற்றிருக்கின்றன. எனது ஆசைகள், எனது கனவுகள், எனது விருப்பு, வெறுப்புகள் எனது மனப்புற்றிலிருந்து பாம்புகளாகச் சீறும். துவேசங்கள், வெறிகள் எல்லாமே இந்தச் சமூக உலகத்தை, சமூக உறவுகளைப் படைத்திருக்கிறது. எனவே, நானே இந்தச் சமூகம், நானே இந்த உலகம்.

நான் சிருஷ்டித்த இந்தச் சமூக உலகத்தை நானாக உள்ள இந்தச் சமுதாயத்தை, நானே மாற்றி அமைப்பதனால், அந்தப் புரட்சி எனக்குள் தொடங்க வேண்டும். எனது மனவுலகக் களத்தில் அந்தப் போராட்டம் ஆரம்பமாக வேண்டும்.

இந்த உள்ளீடான மனவரங்குப் போராட்டத்தில் எனது விடுதலைக்கான ஆயுதம் எனது விழிப்புணர்வுதான். இந்த விழிப்புணர்வின் வெளிச்சத்தில் எனது மனதின் வேடங்களை, கோலங்களை நான் கண்டுகொள்ள வேண்டும். “பொய்மைகளைக் கண்டுகொள்ளும் பொழுது தான் உண்மை புலனாகிறது” என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

(தொடரும்...)

- சீராளன் -

# தமிழ் ஊடகப் பரப்பில் நவீன முகம் - 'ஆதவன்'!

ஈழத்தமிழர்கள் போராலும் இன ஒடுக்குமுறையாலும் புலம் பெயர்ந்து உலகநாடுகள் எங்கும் வீசப்பட்டிருக்கலாம். இனவன் கொடுமையால் நொந்துபட்ட ஈழத்தமிழர்கள் இன்று, உலமெங்கும் வாழ்ந்து பல்வேறு சாதனைகளை நிகழ்த்திவருகிறார்கள். இலங்கைத் தீவினை பூர்வீகமாகக் கொண்ட மரபு - நவீன ஊடகங்களை இணைத்து




டிஜிட்டல் மீடியா என்ற வகையறாவை தமிழுக்கு வழங்கியவர்கள் ஈழத்தமிழர்கள். இன்றைய தமிழ் டிஜிட்டல் மீடியாவின் முன்னோடிகளில் ஒன்றாக ஆதவனும் விளங்குகிறது. மூன்று வருடங்களுக்குள் 'ஆதவன்' ஊடகக் குழுமம் அடைந்த வளர்ச்சி சாதாரணமானதல்ல. ஆதவன் இணையத்தளம், ஆதவன் வானொலி, ஆதவன் தொலைக் காட்சி என்ற



பிரதான ஊடகங்கள் இன்று மக்கள் மத்தியில் பெரும் வரவேற்றைப் பெற்றுள்ளன. இன்றைய காலத்தில் எந்த ஆதாரமுமற்று செய்திகளைப் பதிவேற்றி, தவறான, பொய்யான செய்திகளை உருவாக்கும் இணையச் சூழலில் தமிழ் இணையங்கள் குறித்த நம்பிக்கையீனமும் வெறுப்பும் ஏற்பட்டிருப்பதைப் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அடிப்படையற்ற, பொய்யான செய்திகளை எவர் அனுப்பினாலும் பிரசுரிப்பதும், பின்னர் சுட்டிக் காட்டியதும் அகற்றுவதும் சர்வ சாதாரணமாக சில தமிழ் இணையங்கள் செய்வது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உண்மையில் இது ஊடக அறத்துக்கும் ஊடக பாரம்பரியத்தின் அடிப்படைக்கும் மாறான செயல். செய்திகளை உண்மையின் அடிப்படையில் அறிக்கையிடுவதே நேர்மையான இதழியல் ஒழுக்கம் என்று ஊடக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆதவன் தன்னுடைய பிரதான செயற்பாடாக செய்தி அறிக்கையிடலைக் கொண்டுள்ளது.

தாயகத்தில் பிரத்தியேக செய்தியாளர்களைப் பணியில் அமர்த்தி அவர்களின் ஊடாக உண்மையான பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து, நம்பகமான செய்திகளை வழங்கி, அவற்றுக்குத் தீர்வுகளைக் காணும் வழிகளைக் கண்டறியும் பணியை ஆதவன் ஆற்றி வருகின்றது. அரசியல் செய்திகளில் தகவல்களைக் கூர்மையாக கொண்டு செல்லும் முறையில் செய்தியிடல் தன்மையை ஆதவனின் செய்திகள் கொண்டிருக்கின்றன.

ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை, தாயக நிலைவரங்களை, உலக அளவில் தமிழிலும் பன்னாட்டு மொழியான ஆங்கிலத்திலும் கொண்டு சேர்ப்பதும் ஆதவன் ஊடகக் குழுமத்தின் முதன்மைப் பணியாகும். வடக்கு மாகாண சபையின் விவாதங்களுக்கு, கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளிப்பதுடன் - இலங்கை - அரசியல் விவகாரங்களையும் சர்வதேச அரசியல் நகர்வுகளையும் இணைத்து 'ஈழ இலங்கை சர்வதேச' பார்வை செய்திகளையும் அது தயாரிக்கின்றது.

ஆதவன் தொலைக்காட்சி ஒரு சர்வதேச தமிழ்; தொலைக் காட்சியாக பரிமாணம் பெற்றுள்ளது. இதில் தாயகத்திலிருந்து ஒளிபரப்பப்படும் செய்தி, புலம் பெயர் மக்களிடமும் தாயக மக்களிடமும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. 'திசைகள்' நிகழ்ச்சி மக்களின் அன்றாடப் பிரச்சினைகள், தாயகத்தின் பண்பாடுகள் மற்றும் பாரம்பரியங்கள், வரலாற்றுச் சிறப்பம்சங்கள் போன்ற பல்வேறு தளங்களின் ஊடாக கவனத்தைப் பெற்றுள்ள ஒரு நிகழ்ச்சியாகும்.


உகந்தைமலை ஆலயம் தொடர்பான ஆதவனின் 'திசைகள்' கொண்டு வந்த விவரணம் மிக முக்கியமான வரலாற்றுப் பண்பாட்டு ஆவணமாகும். பறிபோகும் தமிழர் நிலங்கள் பற்றிய விவரணம் இன்று தமிழ் மண்ணில் நடைபெறும் நில அபகரிப்பை, பௌத்த மயமாக்கலை ஆழமாக எடுத்துரைத்து விழிப்பை ஏற்படுத்துகிறது. கிளிநொச்சி பரவிப்பாஞ்சன் மக்களின் நிலப் போராட்டத்தை குறித்த விவரணமும் அந்த மக்களின் போராட்டத்தை உலக அரங்குக்கு கொண்டு சேர்க்கும் ஒரு பணியே.

ஆதவன் வானொலி இன்றைய தமிழ் உலகின் நவீன வானொலி. புதுமையான, பொழுதை இனிதாகப் போக்குகின்ற, சிந்தனையைத் தூண்டி உற்சாகத்தை விதைக்கின்ற நிகழ்ச்சிகளை அது வழங்குகிறது. மகிழ்வையும் சிந்தனையையும் புதுமையையும் நாள் முழுக்க ஊட்டும் அறிவிப்பாளர்கள் ஆதவன் வானொலியில் ஒன்றிணைந்துள்ளனர். வீட்டுக்கு வீடு, நேருக்குநேர், களம், சூரியோதயம் முதலிய நிகழ்ச்சிகள் உலக தமிழர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவை. காலையில் ஒலிபரப்பாகும் வானவில் நிகழ்ச்சியில் அரசியல், சமூக, வாழ்வியல் அம்சங்கள் தொடர்பான பரந்துபட்ட, ஆழமாக சிந்தனையைத் தூண்டும் உரையாடல்கள் இடம் பெறுகின்றன. வீடுக்கு வீடு நிகழ்ச்சி வீடுகளை ஆரோக்கியமாக்கும், அழகுபடுத்தும் நிகழ்ச்சி.



இன்றைய டிஜிட்டல் ஊடகத்தை நவீன ஊடகம் என்கிறோம். மரபு ஊடகத்தையும் இணைய ஊடகத்தையும் இணைத்து அனைத்து ஊடகங்களையும் ஒன்றிணைக்கும் புது வகை ஊடகத்தின் முன்னணி ஊடக அடையாளமாகத் துலங்கும் ஆதவன், வானொலி, இணையதளம், தொலைக்காட்சி முதலிய ஊடகப்புலங்களை ஒன்றிணைத்திருப்பதுடன் திரைப்பட முன்னோட்டங்கள், பாடல்கள், குறும்படங்கள், தொலைக்காட்சிகள், திரைப்படங்கள் என அனைத்து ஊடகப்புலங்களையும் ஓரிடத்தில் இணைக்கிறது. ஈழத்துக் கலைஞர்களின் பாடல்கள், குறும்படங்கள், குறும்பட முன்னோட்டங்கள் முதலியவற்றையும் ஆதவன் வெளிக்கொணர்கின்றது. அத்துடன், தாயகத்தில் இடம்பெறும் கலைப்படைப்பு வெளியீடுகள் பற்றிய செய்திகளையும் ஆதவன் முன்னிலைப்படுத்துகின்றது.

இன்று தமிழ் உலக மொழியாகிவிட்டது. அதனால் தமிழ் ஊடகம் ஒன்றும் உலக ஊடகமாகமாற வேண்டிய நிலையில் உள்ளது. உலகின் சிந்தனைப் போக்கு வாழ்வியல் போக்குடன் இணைந்து கொள்ளும் அதே வேளை, எமது வரலாறு, பாரம்பரியம், பண்பாடு வாழ்வியல் பண்புகளையும் வளர்த்தெடுக்கும் ஊடக கலைப் படைப்புக்களையே இன்று வழங்கவேண்டும். அதனையே ஆதவன் பன்முகத்துடன் ஆற்றிவருகிறது. ஊடக அறம் - வாழ்வின் அறம் இவ் இரு அடிப்படை அம்சங்களிருந்தும் விலகா ஆதவன், தமிழ் ஊடகப் பரப்பில் பேரொளி கொண்ட நவீன முகம் என்றே கூற வேண்டும்.



# இந்தியா-ஜப்பான் நாடுகளிடையே அணுசக்தி ஒப்பந்தம் கைச்சாத்து

டோக்கியோ, நவ.13

இந்தியா-ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு இடையே வரலாற்றுச் சிறப்புமிக்க சிவில் அணுசக்தி ஒப்பந்தம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைச்சதானது.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் பிரதமர் நரேந்திர மோடி, ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே ஆகியோர் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதன்மூலம், அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் (என்பிடி) கையெழுத்திடாமலேயே ஜப்பானுடன் அணுசக்தி ஒப்பந்தம் மேற் கொண்டுள்ள முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது.

இதுதவிர, இரு நாடுகளுக்கு இடையே பல்வேறு துறைகளில் 9 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.



2032 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் அணு மின் உற்பத்தியை 10 மடங்காக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜப்பானுடனான அணுசக்தி ஒப்பந்தம் இந்தியாவின் தேவையைப் பூர்த்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கெனவே பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் இந்தியா அணுசக்தி ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ளது.

புல்லட் ரயில் திட்டம்

நீரிலும் நிலத்திலும் தரையிறங்கும் மீட்பு விமானத்தை இந்தியக் கடற்படைக்கு வழங்க ஜப்பான் ஒப்புக் கொண்டுள்ளது. இது தொடர்பாகப் பிரதமர் ஷின்சோ அபேவுடன் பிரதமர் மோடி நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தினார். மும்பை-அகமதாபாத் இடையே 508 கி.மீ. தொலைவுக்கு புல்லட் ரயில் சேவையை ஆரம்பிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்கான ஒப்பந் தத்தைப் பெற ஜப்பானிய நிறு வனங்கள் ஆர்வமாக உள்ளன.

இது தொடர்பாகவும் அபேயும் மோடியும் நேற்று பேச்சு நடத்தினர்.

மோடியின் பயண நிறைவில் அணுசக்தி ஒப்பந்தம் தவிர மேலும் 12 ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஏ)

## பீகாரில் நேற்று பத்திரிகையாளர் சுட்டுக்கொலை

பாட்னா, நவ.13

பீகார் மாநிலத்தின் ரோட்டாஸ் மாவட்டத்தில் பிரபல இந்தி நாளிதழில் பணியாற்றி வரும் மூத்த பத்திரிகையாளர் ஒருவர் நேற்றுக்காலை மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பீகாரில் வெளிவரும் பிரபல இந்தி நாளிதழில் மூத்த பத்திரிகையாளராக பணியாற்றி வரும் தர்மேந்திரா சிங் என்பவர் ரோட்டாஸ் மாவட்டத்தில் உள்ள சசாராம் பகுதியில் வசித்து வருகிறார்.

நேற்றுக் காலை வழக்கம் போல் அங்குள்ள அமரா குட்டை பகுதி வழியாக தர்மேந்திரா சிங் நடைப்பயிற்சியில் ஈடுபட்டிருந்தார். இதன்போது, அவ்வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று மர்மநபர்கள் அவரை சரமாரியாக துப்பாக்கிகளால் சுட்டனர். குண்டு காயங்களுடன் ரத்த வெள்ளத்தில் சுருண்டு விழுந்த அவரை அப்பகுதிவாசிகள் அருகில் உள்ள ஆஸ்பத்திரிக்கு தூக்கிச் சென்றனர். ஆனால், வழிலேயே தர்மேந்திரா சிங் பரிதாபமாக உயிரிழந்தார். (ஏ)

## ஜெயலலிதா மீண்டும் தீவிர சிகிச்சைப் பிரிவில்



தமிழக முதல்வர் ஜெயலலிதா மீண்டும் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

திடீர் உடல்நலக் குறைவு காரணமாகக் கடந்த செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி சென்னை கிரீம்ஸ் வீதியில் உள்ள அப்போலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

லண்டன் டொக்டர், எய்ம்ஸ் குழுவினரின் ஆலோசனையின் படி அப்பல்லோ மருத்துவமனை சிரேஷ்ட வைத்தியர்கள் முதல்வருக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர்.

சிங்கப்பூர் மவுண்ட் எலிச பெத் மருத்துவமனையில் இருந்து வந்துள்ள பெண் பிசியோதெரபி நிபுணரும் முதல்வருக்குத் தொடர்ந்து பிசியோ் தெரபி சிகிச்சை அளித்து வருகிறார். அவர் இயற்கையாகவே சுவாசிக்கத்தொடங்கியதால், அவருக்கு பொருத்தப்பட்டிருந்த செயற்கை சுவாசக் கருவிகள் அகற்றப்பட்டன. ஆனால் அவசர தேவைக்காக அவருடைய தொண்டைப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த டிரா கோடமி கருவி மட்டும் அகற்றப்படவில்லை.

இந்தநிலையில் முதல்வருக்கு அவ்வப்பொழுது செயற்கைச் சுவாசம் தேவைப் படுவதால், அவர் மீண்டும் தீவிர சிகிச்சைப் பிரிவிலேயே அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஏ)

## விஜய் மல்லையாவின் சொத்துக்கள் பறிமுதல்

டெல்லி, நவ.13

தொழிலதிபர் விஜய் மல்லையாவின் ஆயிரத்து 620 கோடி ரூபா மதிப்புள்ள சொத்துக்களை அமுலாக்கத்துறை பறிமுதல் செய்துள்ளது.

இந்தியாவின் முன்னணி பொதுத்துறை வங்கிகளில் ரூ.9 ஆயிரம் கோடி கடன் பெற்று இருந்த பிரபல தொழிலதிபர் விஜய் மல்லையா, அதனைத் திரும்பச் செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. தற் போது லண்டனில் தலைமறைவாக இருந்து வரும் அவருக்கு எதிராக பல்வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

மேலும் இந்த மோசடி தொடர்பாக சி.பி.ஐ. மற்றும் அமுலாக்கத்



துறையும் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றன. அவரை இந்தியா கொண்டு வர பல நடவடிக்கைகளை மேற்கொண்டது அமுலாக்கத்துறை. ஆனால் பலமுறை அழைப்பாணை அனுப்பியும் அவர் நாடு திரும்ப வில்லை.

இதையடுத்து அவரை தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என்றும், இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள அவருடைய சொத்துகளைப் பறிமுதல் செய்ய வேண்டும் என்றும் மும்பை சிறப்பு நீதிமன்றத்தில் அமுலாக் கத்துறை மனு தாக்கல் செய்தது.

இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், விஜய் மல்லையாவின் சொத்துகளை பறிமுதல் செய்ய உத்தரவிட்டது. நீதிமன்றம் உத்தரவுப்படி விஜய் மல்லையாவின் ஆயிரத்து 620 கோடி ரூபா மதிப்புள்ள சொத்துக்களை அமுலாக்கத்துறை பறிமுதல் செய்துள்ளது. ஆனால் வெளிநாடுகளில் உள்ள சொத்துகளை பறிமுதல் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்க நீதிமன்றம் மறுத்துவிட்டது. (ஏ)

# நாணயத்தாள்களை மாற்றப் போராடும் மக்களுக்கு தமிழக அரசு இதுவரை என்ன நடவடிக்கை எடுத்தது?

## கேள்வி எழுப்பியுள்ளார் தி.மு.க.பொருளாளர் ஸ்டாலின்



அரவக்குறிச்சி, நவ.13

செல்லாத நாணயத் தாள்களை மாற்றப் போராடும் மக்களின் அவதியைப் போக்க தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்று மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளரை ஆதரித்து தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் 2 ஆவது நாளாக ஈசநத்தம், பள்ளப்பட்டி, அண்ணாநகர் ஆகிய பகுதிகளில் பிரசாரம் செய்தார். இதன்போதே அவர் கேள்வி எழுப்பினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"தமிழகத்தில் நிதி நெருக்கடி நிலை ஏற்பட்டு இருக்கிறதா? என ஒரு கேள்வி எழுப்பி இருக்கிறார்கள். அத்துடன் மட்டுமல்ல, இத்தகைய ஆட்சி மீது அரசியல் சட்டம் 360 இன் படி ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழல் உள்ளதா என்றும் கேட்டு இருக்கிறார்கள். தமிழகத்தில் நீதித் துறைக்கு மத்திய அரசு ஒதுக்கிய 150 கோடி ரூபாவில் ஒருசதம் கூட செலவிடாமல் திருப்பி அனுப்பப்பட்டு இருக்கிறது. 100 பணியாளர்கள் நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதனையும் நீதிபதிகள் சுட்டிக் காட்டி கண்டித்து இருக்கிறார்கள். 4 லட்சம் கோடி ரூபா தமிழக அரசு கடன் வாங்கி இருப்பதை திருப்பிச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதனால் தான் இது செயற்படாத அரசு என்று குற்றம் சாட்டுகிறேன். கடந்த 2 நாள்களாக ஏழை, எளிய மக்கள், வணிகர்கள், தொழி லாளர்கள், விவசாயிகள் படும் அவதியை நான் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறேன். மத்திய அரசு திடீரென ரூ.500 மற்றும் ரூ.1000 தாள்கள் செல்லுபடியாகா என்று அறிவித்ததால் மக்கள் வங்கிகள் முன் செல்லாத ரூபா தாள்களை மாற்றுவதற்காக சொந்த நாட்டி லேயே அவதிப்பட்டு இருக்கும் காட்சியை பல இடங்களில் பார்த்தேன். கறுப்புப்பணத்தை ஒழிப்பதற்காக மத்திய அரசு எடுத்த இந்த நடவடிக்கை வரவேற்புக்கு உரியது தான். தி.மு.க. சார்பில் தலைவர் கருணாநிதி அதனை வரவேற்று அறிக்கை வெளியிட்டார். அதே போல் பல்வேறு கட்சி தலைவர்களும் அதனை வரவேற்றுள்ளனர்.

ஆனால் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் மாநில அரசு மக்களின் அவதியைப் போக்க என்ன ஏற்பாடு செய்தது என கேட்க விரும்புகிறேன். முதலமைச்சர் பொறுப்பை முழுமையாக ஏற்று இருக்கிற நிதி அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் இது தொடர்பாக அமைச்சரவையை கூட்டினாரா? இல்லை. அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினாரா? எதுவும் செய்யவில்லை.

இல்லை என்றால் தலைமைச் செயலாளராவது மக்கள் படும் அவதியைத் தீர்க்க ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காததால் தான் மக்கள் இவ்வளவு அவதிப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

எனவே செயற்படாத இந்த அரசுக்கு பாடம்பு கட்ட, தட்டிக் கேட்க தி.மு.க.வை வெற்றி பெற செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்."என்றார் அவர். (ஏ)

## ஜப்பானில் நேற்று நில நடுக்கம்

டோக்கியோ, நவ.13

ஜப்பானில் கிழக்குப் பகுதியில் உள்ள ஹோன்ஷூ தீவில் நேற்றுக் காலை 6.42 மணிக்கு கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் வீடுகள் குலுங்கின.

எனவே பீதி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் ஓட்டம் பிடித்தனர். அவர்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடைந்தனர்.

அங்கு 6.2 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவானதாக அறிவிக்கப்பட்டது. ஹோன்ஷூ தீவு பகுதியில் பூமிக்கு அடியில் 44 கி.மீற்றர் தூரத்தில் நிலநடுக்கம் உருவாகியுள்ளது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட உயிர் சேதம் மற்றும் பொருள் சேதம் குறித்த தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவுமில்லை. (ஏ)



அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி ஒபாமா தன்னுடைய ஆட்சிக் காலத்தில் வெள்ளை மாளிகையில் இருந்து எடுத்துக் கொண்ட புகைப்படங்கள் தற்போது சமூக வலைத்தளங்களில் வெளிவருகின்றன. 2015 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 4 ஆம் திகதி அமெரிக்காவில் உள்ள ஒவல் அலுவலகத்தில் தேசிய பாதுகாப்பு ஆலோசகரின் மகளான எல்லாவுடன் கீழே குனிந்து விளையாடிய காட்சி.

## எகிப்தில் பலத்த பாதுகாப்பு

கெய்ரோ, நவ.13

எகிப்து அரசு கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

அந்தநாட்டு அரசுக்கு எதிராக நடத்தப்பட இருந்த போராட்டத்தைத் தடுக்கும் நோக்கில் இவ்வாறு பெரியளவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. போராட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும், பெருமளவான மக்கள் வீட்டை விட்டு வெளியே செல்லவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார மறுசீரமைப்புக்கு எதிராகவே இந்தப் போராட்டம் நடத்தப்பட இருந்தது. எனினும் போராட்டம் நடத்தினாலும் கொள்கைகளில் மாற்றம் செய்யப்படாது என்று அரசு அறிவித்துள்ளது. எகிப்தின் தலைநகர் கெய்ரோ உள்ளிட்ட முக்கிய நகரங்களின் வீதிகள் வெறிச்சோடி காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

# குடியேற்றக் கொள்கையில் மாற்றம் ஏற்படுத்துவது குறித்து பரிசீலனை

## ட்ரம்ப் தலைமையிலான புதிய ஆட்சி வருவதை அடுத்து

வொஷிங்டன், நவ.13

அமெரிக்காவில் டொனால்ட் ட்ரம்ப் தலைமையில் அமையவிருக்கும் அரசில் தற்போதுள்ள குடியேற்றக் கொள்கையில் மாற்றம் கொண்டு வருவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக ஆட்சி மாற்றத்துக்கான நடவடிக்கைகளைக் கவனித்துக் கொள்ளும் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அந்தக் குழுவினர் நேற்று முன்தினம் தெரிவித்தவை வருமாறு:-

"ட்ரம்ப் தலைமையிலான புதிய அரசில், மெக்ஸிக்கோ எல்லையில் சுவர் எழுப்புவது, குறிப்பிட்ட நாடுகளில் இருந்து வருவோருக்கு நுழைவு இசைவு விசா வழங்க மறுப்பது, குடியேற்றக் கொள்கையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்வது உள்ளிட்ட மாற்றங்களை மேற்கொள்வது குறித்துப் பரிசீலித்து வருகிறோம்.

மதவெறி சித்தாந்தங்களால் ஏற்படக்கூடிய விளைவுகள், அணு ஆயுதங்கள்; இணையத் தளத் தாக்குதல் ஆகிய 3 விவகாரங்களுக்கு ட்ரம்ப் அரசு முக்கியத்துவம் அளிக்கும்.

குடியேற்றக் கொள்கைகளைப் பொறுத்தவரை, 10 அம்சத் திட்டங் களை உருவாக்கி, விதிமுறை களில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்.




அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்பின் குடியேற்றக் கொள்கைகளுக்கு எதிராக, இஸ்ரேலின் டெல்–அவிவ் நகரிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முன் கோசங்கள் எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள்.

தேர்தல் பிரசாரத்தின்போது குடியேற்ற விதிகள் குறித்து டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில் கொள்கை மாற்றங்கள் ஏற்படுத்தப்படும்.

நாட்டின் தெற்கு எல்லையில் தடுப்புச் சுவர் எழுப்புவது மட்டுமின்றி, எல்லை தாண்டி அத்துமீறி நுழைபவர்களைக் கைது செய்து உடனடியாக விடுவித்து விடும் முறைக்கு முற்றுப்புள்ளி வைப்பது குறித்தும் பரிசீலித்து வருகிறோம்.

மேலும், குற்றச்செயல் புரியும் குடியேற்றவாசிகளிடம் மிகவும் கண்டிப்பாக நடந்து கொள்வது, குடியேற்ற வாசிகளுக்கு அடைக்கலம் அளிக்கும் பகுதிகளுக்கு நிதியுதவியை ரத்து செய்வது, குடியேற்ற விதிகளை மிகக் கடுமையாகச் செயற்படுத்துவது போன்ற அம்சங்கள் குறித்தும் பரிசீலித்து வருகிறோம்.

அமெரிக்காவுக்கு வரும் நபர்களின் பின்னணி குறித்து முழுமையாக அறிந்துகொள்ள முடியாத நிலையில் இருக்கும் நாடுகளிலிருந்து, யாருக்கும் நுழைவு இசைவு வழங்குவதைத் தடை செய்வது, சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேறியவர்களைத் திருப்பி அனுப்பும்போது அவர்களை பிறநாடுகள் ஏற்றுக் கொள்வதை உறுதி செய்வது ஆகியவை குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

சட்டத்துக்குட்பட்ட குடியேற்ற முறைகளில் மாற் றங்களை ஏற்படுத்துவது குறித்தும் பரி சீலித்து வருகிறோம்என்று தெரிவித்தனர்.

தான் ஆட்சிக்கு வந்தால் அமெரிக்காவுக்குள் முஸ்லிம்களுக்குத் தடை விதிப்பார் என்று ட்ரம்ப் கூறிய வாசகங்கள், அவரது தேர் தல் பிரசார வலைத்தளத்திலிருந்து புதன்கிழமை நீக்கப்பட்டன. எனினும், இதுகுறித்து செய் தியாளர்கள் கேள்வி எழுப்பியதைத் தொடர்ந்து, அந்த வாசகங்கள் இணையத் தளத்தில் மீண்டும் இடம்பெற்றன.

இதுகுறித்து ட்ரம்ப்பின் தேர்தல் பிரசார நிர்வாகிகள் கூறியவை வருமாறு:-

"தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, தேர்தல் பிரசார வலைத்தளத்தில் இடம் பெற்றிருந்த சில வாசகங்கள் மறைந்தன. தற்போது அது சேர்க்கப்பட்டுள்ளன" என்றார் அவர்.

சான் பெர்னாடிகோ, கலிபோர்னியா ஆகிய பகுதிகளில் நிகழ்த்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து, அமெரிக்காவில் முஸ்லிம்கள் அனுமதிக்குத் தடைவிதிக்கப் போவதாகக் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார். (ஏ)

## அரசியலில் குதிக்கிறார் ஹிலாரியின் மகள்

ஹிலாரி கிளிண்டனின் மகள் செல்சியா அமெரிக்க அரசியலில் களம் இறங்கவுள்ளார்.

ஹிலாரி சமீபத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு ட்ரம்பிடம் வெற்றி வாய்ப்பை இழந்தார். அவரது மகள் செல்சியா. 36 வயதான இவருக்கு திருமணமாகி விட்டது. இவரது கணவர் பெயர் மார்க் மெஸட்விங்ஸ்கி. இவர்களுக்கு சார்லோட், ஐடன் ஆகிய 2 குழந்தைகள் உள்ளன.

இந்தநிலையில் தனது தந்தை பில் கிளிண்டன், தாயார் ஹிலாரியைத் தொடர்ந்து செல்சியாவும் அரசியலில் குதிக்கிறார். இதே வேளை ஜன நாயகக் கட்சியைச் சேர்ந்த 79 வயது சிரேஷ்ட அரசியல்வாதி நீடாலோவி அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதித்துவ சபையில் உறுப்பினராக இருக்கிறார்.

முதுமை காரணமாக அவர் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். எனவே அந்த இடம் வெற்றிடமாக உள்ளது. எனவே அந்த இடத்துக்கு தேர்தல் நடைபெற



உள்ளது. அதில் ஜனநாயகக் கட்சி சார்பில் செல்சியா போட்டி யிட உள்ளார். அற்கு வசதியாக கடந்த ஓகஸ்ட் மாதம் கிளிண்டன் ஹிலாரி தம்பதி நியூயோர்க்கில் தற்போது வசிக்கும் சபாகுவா பகுதியில் 1.16 மில்லியன் டொலருக்கு ஒரு வீடு வாங்கியுள்ளனர். அதைதங்களது மகள் செல்சியாவுக்காக வாங்கினர் என்று தெரிகிறது. (ஏ)

## இரசாயன ஆயுதங்கள் சிரியாவில் பாவனை

*ரஷ்ய பாதுகாப்பு அதிகாரிகளிடம் சிக்கியது ஆதாரம்*

டமாஸ்கஸ், நவ.13

சிரியாவின் அலெப்போ நகரத்தில் இரசாயன ஆயுதங்களை சிரிய தீவிரவாதிகள் பயன்படுத்தியமைக்கான ஆதாரங்களைக் கண்டுபிடித்துள்ளனர் என்று ரஷ்ய பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தென்மேற்கு அலெப்போவில் வெடிக்காத வெடிமருந்துகளை நிபுணர்கள் ஆய்வு செய்தனர். அவற்றில் குளோரின் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்பு, கிளர்ச்சியாளர்கள் அரசின் பிடியில் உள்ள நகரத்தின் பகுதிகளில் வாயு குண்டுகளை வீசினர் எனவும் சிரிய அரச ஊடகம் குற்றம் சாட்டியிருந்தது. (ஏ)

# ஊர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

"கடவுளே உலகம் செழிச்சு எல்லோரும் வாழ வேணும்"என்ற படி கச்சான் கடகத்தை அவிழ்த்து பின்னேர வியாபாரத்தைத் தொடங்கினாள் செல்லாச்சி. பஸ் ஸுக்கு நின்ற ஒருவர் செல்லாச்சியிடம் இருபது ரூபாவை நீட்டி, "பார்த்துப் போடு ஆலடியிலையும் விக்கினம்... நான் அதை விட்டிட்டுத் தான் உன்னிடம் வாங்கிறன்" – என்றார்.

அவரை முறைத்த செல்லாச்சி "என்ன... எங்களுக்குள்ளை கொழுவி விட்டிட்டு நீர் அமத்திக் கொண்டு போகப் பார்க்கிறீரோ? நாலு இடத்திலை நாலுபேர் விப்பினம்,எது பிடிக்குதோ அங்கே வாங்க வேண்டியதுதானே...தேவையென்றால் நாலு இடத்திலையும் வாங்கும். அதை விட்டுட்டு உம்மடை இருபது ரூவாவுக்கு எங்களுக்குள்ளை கொளுவி விடாதையும்" – என்று சீறினாள்.

எதுவும் பேசாமல் கச்சானை வாங்கிக் கொண்டு போனார் அவர்.

"2009 மே மாசம் மூத்தவன் காணாமல் போனதிலையிருந்து கிழவி கடும் கோபப்படுகுது" என்று பக்கத்தில் இருந்த வாத்தியாரிடம் கிசுகிசுத்தார் ஏரம்பர்.

"இரண்டு பேரும் வேளைக்கே சந்திக்கு வந்திட்டியள்" என்றபடி வந்த மார்ந்த ஜீவன் கைபேசிக்குள் மூழ்கினான்.அப்போது கையில் பத்திரிகையுடன் வந்தான் ரூபன்.

"என்ன பேப்பரோடை வாறீர் தம்பி?"கேட்டார் ஏரம்பர்.

"சிவத்தான் கடையிலை காலைக்கதிர் பேப்பர் இன்று மட் டும் இலவசமாம்...புதுசாக வந்திருக்கு" என்றான் ரூபன்.

"வித்தியாதரன் எலெக்ஷன் கேட்கிறதுக்குத் தொடங்கின பேப்பரெல்லே?"என்று கேட்ட ஜீவன் மீண்டும் கைபேசியில் மூழ்கினான்.

"அப்பிடிப் பார்த்தால் தேர்தலிலை நிக்கிறவை எல்லோரும் பேப்பர் தொடங்குவினம் எல்லே.. சனம் தெளிவாக இருக்கு.போன தேர்தலை எடுத்துப் பாருங்கோவன். அதிலை அதிகம் விருப்பு வாக்கு எடுத்தவை பேப்பர் நடத்தியே அவ்வளவு வாக்கு எடுத்தவை? எனக்குத் தெரிஞ்சு அவைக்குப் பத்திரிகைகள் அளித்த ஆதரவும் குறைவு"– என்று விளக்கினார் வாத்தியார்.

"வித்தி ஆள் வலு சுழியன். அப்பிடி நினைச்சு பேப்பர் தொடங்கியிருக்கும் என்று நினைக்கேல்லை. இப்பதான் தொழில்நுட்பம் வளர்ந்திட்டுது.சனத்தை ஏமாத்தேலாது"என்ற ஏரம்பர் "பேப்பரை ஒருக்கா தாரும்" என்று கேட்டு வாங்கினார்.

"என்றாலும் பேப்பர் தொடங்க உவருக்கு யார் காசு கொடுத்தது....இந்தியா என்று சொல்லுகினம். மஹிந்த ஆக்கள் என்றும் கதைக் கினம்"சந்தேகத்தைக் கேட் டான் ஜீவன்.

அதுவரை வியாபாரத்தை கவனித்த செல்லாச்சி "உவனிட்டை இருந்து போனை பறிச்சு எறியடா ரூபன். அதிலை பார்த்துத்தான் விசர் கேள்வியள் கேட்கிறான்'' என்று சீறினாள்.

"இன்று சமூகத்திலை கருத்து ஒன்றை உருவாக்கிறதிலை பேஸ்புக்,டுவிட்டர் என்று சமூக ஊடகங்கள் முக்கியமானவையாக இருக்கின்றன.இன்னும் பழைய நோக்கியாவை வைத்திருக்கிற உனக்கு இதுகள் விளங்காது கிழவி"என்று செல்லாச்சியின் வாயை அடைத்தான் ஜீவன்.

"ஏன் கோவிக்கிறாய் செல்லாச்சி"என்று சாந்தப்படுத்திய வாத்தியார் "கேள்வியிலை நியாயம் இருக்குத்தானே. ஏனென்றால் காலம் காலமாக நம்பி நம்பித்தானே நாங்கள் சீரழிஞ்சு போய் நிற்கிறம்" என்றார்.

"அதுதான் வித்தியாதரனின் வகுப்புத்தோழன் மூர்த்தி என்றவர் தான் முதலீடு என்று இந்தப் பேப்பரிலையே சொல்லியிருக்கினம்"என்று தனது கண்டுபிடிப்பைச் சொன்னார் ஏரம்பர்.

"சொல்லுறது மட்டும் போதாது ஏரம்பர்.பேப்பரிலை இருக்கிற செய்திகளும் கட்டுரைகளும் தான் நேர்மையையும் நடுநிலையையும் காட்ட வேணும்.இல்லாட்டி சனம் ஒதுக்கிப் போடும். ஆனாலும் அங்கே பிரதம ஆசிரியராக இருக்கிற கானமயில்நாதன் வலு இறுக்கமான ஆள்...சரியாத்தான் செய்வார்...என்றாலும் கொஞ்சக்காலம் போனாத்தான் உண்மை , நேர்மை, பக்கஞ்சாராமை எல்லாம் பேச்சளவிலேயோ அல்லது செயலிலையும் இருக்கோ என்று தெரியும்"என்று சொல்லிவிட்டு மூச்சு வாங்கினார் வாத்தியார்.

"எண்டாலும் காலைக்கதிர் வெளியீட்டிலை முதலமைச்சர் இப்பிடிக் கதைச்சிருக்கக் கூடாது.முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட வித்தியாதரனும், மாவையரும் முன்பு விரும்பினவை என்று போட்டுடைச்சுப் போட்டார்... கூப்பிட்டவைக்கு சங்கட மாத்தான் இருந்திருக்கும்" வாசிச்சதைச் சொன்னார் ஏரம்பர்.

"அண்ணை, மகளுக்குக் கலியாணம் பேசினாலும் அடுத்தவன் கல்லுக் குத்திப் போடுவான் என்று ரகசியமாக வைச்சிருக்கிற ஆக்கள் நீங்கள்" என்ற ரூபன் தொடர்ந்து 'முதலமைச்சர் வெளிப்படையாகக் கதைக்கிறது உங் களை மாதிரி பழைய ஆக்களுக்கு புதுசாத்தான் இருக்கும்... கஷ்டமாகவும் இருக்கும்" என்றான்.

"அப்பவும் அவர் பிழையாக ஒன்றும் சொல்லேல்லையே, 'தேர்தலிலை நிக்கிறன் ஆதரவு தாங்கோ' என்று வித்தியாதரன் கேட்டார், மாகாண சபைக்குப் போட்டியிட மாவையார் விரும்பியிருந்தார் என்ற அர்த்தத்திலைதானே பேசியிருக்கிறார். தேர்தலிலை போட்டியிட எல்லோருக்கும் உரிமை இருக்குத்தானே. தம்பி சொன்னமாதிரி மைக் கிடைச்சா முதுகு சொறியிறவையை பார்த்துப் பழகிப் போனதாலை வெளிப்படையாகப் பேசுறது பிழையாகக் கிடக்கு"என்றார் வாத்தியார்.

"அப்பிடிப் பேசினதைத் தன்ரை பேப்பரிலேயே வித்தியாதரன் போட்டிருக்கிறதும் உண்மையா யாழ்ப்பாணத்துக்குப் புதுசுதான்"என்றான் ஜீவன் கைபேசியிலிருந்து கண்ணை எடுக்காமலே. அந்த நேரம் கச்சான் வாங்க வந்த ஒருவர் செல்லாச்சியிடம் காசைக் கொடுத்துக்கொண்டே "புதுப்பேப்பரிலை வித்துவான் பதிலும் வருமோ?" என்று ஆர்வமாய் கேட்டார்.

"நீ முதலிலை ஒழுங்காகக் கையிலை பிடி....கச்சான்

## உந்தப் பேப்பர்கள் போற போக்கு...!



சரையை.." சினந்தபடி கொடுத்த செல்லாச்சி "உந்த வயசிலை அவருக்கு அதுதான் தேவைப்படுகுது"என்று புறுபுறுத்தாள். அவளின் கோபத்தைப் புரிந்தவர்போல் கூறத் தொடங்கினார் வாத்தியார்..

"ஒரு பேப்பர் தொடங்கிறதுக்கு முதலீடு தேவைதான்.... ஆனால் தொடர்ந்து வெளிவாறதுக்கு அது விக்கவும் வேணும்....ஒரு குடும்பத்திலேயே ஒவ்வொருத்தர் ஒவ்வொன்றை விரும்பி வாசிப்பினம். எங்களுக்குப் பிடிக்காத ஒன்று இன்னொருவருக்கு பிடிக்கும். எல்லோருக்கும் பிடிக்கிற மாதிரி பத்தும் பலதையும் தந்தாத்தானே பேப்பர் தொடர்ந்து விக்கும்"

"அப்ப வாத்தியார் என்ன கேவலத்தையும் எழுதலாம் என்று சொல்லுறீங்களோ?'' என்று கேட்கவும் பேப்பர் தம்பி வந்து அமரவும் சரியாக இருந்தது.

"நான் அப்பிடிச் சொல்லேல்லை. ஒருத்தருக்கு அரசியல் பிடிக்கும், ஒருத்தருக்கு சினிமா பகிடிகள் பிடிக்கும், இன்னொருவருக்கு விளையாட்டுச் செய்திகள் விருப்பமாக இருக்கும்...இப்பிடிப் பலதையும் போடத்தானே வேணும்...ஆனால் எல்லாத்திலையும் நேர்மையும் ஒழுக்கமும் இருக்க வேணும்.பேப்பர் எங் கடை, எதையும் எழுதுவம் என்று இருக்கக் கூடாது என்று தான் சொல்லுறன்"என்று முடித்தார் வாத்தியார்.

"அட இண்டைக்கு எங்களைக் கழுவிக் காயப் போடுறியள் போல இருக்கு" என்று சமாவில் கலந்து கொண்டான் பேப்பர் தம்பி.

"புதுப்பேப்பர் ஒன்று வந்திருக்கெல்லே.அதிலை தொடங்கிறது"என்றான் ரூபன்.

"முந்தி சிவத்தான் கடையிலை மரக்கறி மேசை பெரிசு...பேப்பர் அடுக்கிற மேசை சிறியது...இப்ப அவர் பேப்பர்கள் கூடிப்போச்சென்று மரக்கறி மேசையிலை பேப்பர்களை அடுக்கிறார்....பேப்பர் மேசையிலை மரக்கறிகளை அடுக்கிறார்."நக்கலாகச் சொன்னான் ஜீவன்.

"உண்மைதான் மச்சான், ஆனால் என்னதான் சொன்னாலும் சனத்தை கனகாலம் பேய்க்காட்ட ஏலாது.ஒருத்தருக்கும் வால் பிடிக்காமல், மக்களின் பக்கம் மட்டும் நின்று, மக்களுக்கு நல்லது நடக்க வேணும் என்று நினைச்சு வெளியிடுற பத்திரிகை வரவேற்பை பெறும் தானே" தனது பக்க நியாயத்தைச் சொன்னான் பேப்பர் தம்பி.

"எல்லோரும் நடுநிலை, பொது நலம் என்று வடிவாகக் கதைக்கிறியள்...செயலிலை காணேல்லையே"விடாமல் தாக்கினான் ஜீவன்.

"உவனுக்கு உந்த போனிலை நல்ல விஷயமே கண்ணிலை படுறதில்லையே" என்று பொருமினாள் செல்லாச்சி.

"அப்பிடி இல்லையணை, அவனும் நாட்டு நடப்பைத் தானே சொல்லுறான்" என்ற பேப்பர் தம்பி ஜீவன் பக்கம் திரும்பினான்.. "ஊடகவியலாளர் என்றால் கல்லைத் தின்று காற்றைக் குடிக்கிறவை என்றே நினைக்கிறீர். எங்களுக்கும் வாய், வயிறு, குடும்பம் இருக்கு...உங்களுக்குத் தரமான பத்திரிகை வேணுமென்றால் தரமான பத்திரிகைக்கு நீங்கள் ஆதரவு அளிக்க வேணும்.. பேப்பர் வாங்கும்போது நியாயம், தர்மமாக நடக்கிற பேப்பராக பார்த்து வாங்குங்கோ...'' என்று தனது பக்க நியாயத்தை முன்வைத்தான் பேப்பர் தம்பி.

"சரியாய் சொன்னீர்"என்று பாராட்டிய வாத்தியார்... 'வெறும் உணர்வுகளைத் தூண்டி..காசாக்கிற மாதிரி எழுதினால்..அதுகளை நாங்கள்தான் அடையாளம் கண்டு ஒதுக்க வேணும்....இல்லாததும் பொல்லாததும் எழுதினால் அதுகளை மறுக்கிற உரிமை தங்களுக்கு இருக்கு என்று தெரிஞ்சு சனம் தட்டிக் கேட்க முன்வரவேணும்....." என்றார்.

"ஆனால் வாத்தியார் ஊடகக்காரர் ஆமியோடையும் நிப்பினம்... பிறகு புலிகளோடையும் ஒட்டி அடிப்பினம்... வெளிநாட்டுக்காரர் வந்தால் அவையோடை விருந்தும் சாப்பிடுவினம்...இவை ஒருத்தரையும் நம்பேலாமல் எல்லே இருக்கு" என்று விடாமல் கேட்டான் ஜீவன்.

"சனியன் பிடிச்சது...இதுக்குள்ளேயே சுத்தி சுத்தி வருகுது"என்று நாயை விரட்டினாள் செல்லாச்சி. அவள் சொன்னது நாய்க்கா அல்லது தனக்கா என்று புரியாமல் விழித்தான் ஜீவன்.

சந்திவெளியில் அமைதி நிலவியது..அதனைக் கலைத்தான் பேப்பர் தம்பி.

"ஜீவன்,பலதரப்புகளுக்குள்ளையும் ஊடாடுகிறவைதான் ஊடகவியலாளர்கள். ஒரு பக்கம் கதைச்சா அவற்றை ஆள் என்று கன்னை பிரிப்பீங்கள்.. எல்லோருடனும் கதைத்தால் எல்லாப் பக்கமும் வாலாட்டிகினம் என்பீர்கள்... நீங்கள் பத்திரிகையைப் பாருங்கோ. குறிப்பிட்ட சிலரை தொடர்ந்து குறை சொல்லிக் கொண்டே இருந்தால்... சிலரைப் பாராட்டிக் கொண்டே இருந்தால்... அந்தப் பத்திரிகை பக்கச் சார்பு என்று விளங்கும்தானே"என்று கூறி மூச்சு வாங்கிக் கொண்டான். பிறகு தொடர்ந்தான்.... "அதுக்காக அந்தப் பத்திரிகையை குறை சொல்ல ஏலாது...ஏனென்றால் யாரைப் பாராட்டினமோ அவரை ஆதரிக்கின்ற சனம் அந்தப் பத்திரிகையை வாங்கும்.அதை ஒருத்தரும் பிழை என்று. சொல்ல முடியாது"என்று முடித்தான் பேப்பர் தம்பி.

அதுவரை அமைதியாக இருந்த ஏரம்பர்.. "அப்ப அது கட்சிப் பத்திரிகை மாதிரியெல்லோ இருக்கும்'' என்றார். "மாதிரி என்ன; அதேதான்" என்றான் ரூபன்.

"ஆனால் எந்தப் பத்திரிகையை வாங்குவது என்று முடிவெடுக்கப் போவது நீங்கள் தானே..ஏதோ உங்களை இழுத்துப் பிடிச்சுப் பேப்பர் விக்கிறது இல்லையே..தரமான பத்திரிகையை வாங்க வேண்டியதுதானே..."என்று சொன்னான் பேப்பர் தம்பி.

"தம்பி சொல்லுறதும் சரிதான். சனம் விவரமாக இருந்தால் பத்திரிகைகளும் சரியாக இருக்கும்"என்றார் ஏரம்பர்.

"என்னுடைய சினேகிதன் சொன்னது ஞாபகம் வருது..." என்று பீடிகையுடன் ஆரம்பித்தார் வாத்தியார்.... "கே.கே. இரத்தினசிங்கம் என்று ஒரு பத்திரிகை ஆசிரியர் இருந்தவராம்... தினபதி , சிந்தாமணி தொடக்கம் இப்ப வரைக்கும் பணியாற்றி சமீபத்திலைதான் காலமானவர்.....அவரிட்டை ஒருவர்தான் எழுதிய கட்டுரையை பத்திரிகையில் போட நேரில் சந்தித்துக் கொடுத்தாராம்.....அவரும் பிரபலமானவராம்....கட்டுரையை வாங்கிக் கையில் வைத்தபடி இரத்தின சிங்கத்தார் – கட்டுரை தரமாக இருந்தால் வாசலிலை காவலாளியிடம் கொடுத்திட்டு போனால் கூட பேப்பரிலை பிரசுரிக்கப்படும்.தரமில்லையென்றால் நேரிலை சந்திச்சு சிரிச்சுக் கதைச்சுத் தந்தாலும் பிரசுரமாகாது– என்று சொன்னாராம். அந்த கே.கே.இரத்தினசிங்கத்தாரிடம் ஊடகவியல் பழகிய ஆக்கள்தான் காலைக்கதிரை வழி நடத்துகினம். ஆனபடியால்தான் அது தரமாக இருக்கும் என்று நம்புகிறோம்"என்று கூறியபடியே எழுந்தார் வாத்தியார். மற்றவர்களும் எழுந்திருக்க கச்சான் கடையைக் கட்டத் தொடங்கினாள் செல்லாச்சி.

# இலங்கை பிரிமியர் லீக் போட்டிகள் 25 ஆம் திகதி ஆரம்பம்



இலங்கை கிரிக்கெட் சபையின் பிரிமியர் லீக் போட்டிகள் இம்மாதம் ஆரம்பமாகவுள்ளன. 2016, 17ஆம் ஆண்டுக்கான இலங்கை கிரிக்கெட் சபையின் பருவகால உள்ளூர் போட்டிகளான பிரிமியர் லீக் இம் மாதம் 25ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

குறிப்பிட்ட இந்த பருவகால போட்டிகள், மூன்று நாட்கள் கொண்ட போட்டிகளாக இடம் பெறுவதுடன், 24 அணிகள் பங்குபற்ற உள்ளன. இந்தப் போட்டிகள் 'ஏ', 'பி' என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நடைபெறவுள்ளன.

'ஏ' பிரிவில் 14 அணிகள் உள்வாங்கப்பட்டு அவை ஏழு அணிகளைக் கொண்ட இரண்டு குழுக்களாக தெரிவு செய்யப்படும். குறிப்பிட்ட குழு மட்டத்தில் முன்னிலை வகிக்கும் முதல் நான்கு அணிகள் சூப்பர் 8 சுற்றுக்குத் தெரிவு செய்யப்படும். சூப்பர் 8 சுற்று நான்கு நாட்கள் கொண்ட போட்டியாக நடை பெறுவதுடன், இப்போட்டிகளின் போது இளம் சிவப்பு பந்து உபயோகிக்கப்பட இருப்பது மற்றொரு சிறப்பம்சமாகும்.

எஞ்சிய ஆறு அணிகளும் தட்டுக்கான (Plate) போட்டிகளில் பங்குபற்றுகின்றன. இப்போட்டிகள் மூன்று நாட்கள் கொண்ட போட்டியாக நடைபெறுவதுடன், அப்போட்டிகளில் கடைசி இடத்தைப் பெறுகின்ற அணி அடுத்து வரும் பருவகால போட்டிகளில் 'பி' பிரிவுக்கு தரமிறக்கப்படுவார்கள்.

பொதுவாக 'பி' பிரிவு என்பது, கிரிக்கெட் போட்டிகளில் வளர்ந்து வரும் அணியாக கணிக்கப்படுகிறது. குறிப்பிட்ட இப்போட்டிகளில் 10 அணிகள் பங்குபற்றுவதோடு மூன்று நாட்கள் கொண்ட லீக் போட்டியாக நடைபெறவுள்ளது. இப்போட்டிகளில் அதிக புள்ளிகளைப் பெறும் அணி அடுத்து வரும் பருவகால போட்டிகளில் 'ஏ' பிரிவுக்கு தரமுயர்த்தப்படுவார்கள்.

பிரிமியர் லீக் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகள் மற்றும் இருபதுக்கு இருபது போட்டிகள் மேற்கூறிய 24 அணிகளின் பங்குபற்றுதலோடு 2017ஆம் ஆண்டு ஆரம்பத்தில் நடைபெறவிருக்கிறது. பிரிமியர் சூப்பர் 8 போட்டிகள் மற்றும் தட்டுக்கான (Plate) போட்டிகள் ஜனவரி மாதம் 14ஆம் திகதி நடைபெறும், அதே சமயத்தில் 'பி' பிரிவு போட்டிகள் அனைத்தும் ஜனவரி மாதம் 22 ஆம் திகதி நிறைவுபெறவிருக்கிறது.

'ஏ' பிரிவுடன் நடாத்தப்படும் செகண்ட் இலவன் போட்டிகள் இந்த முறை பருவகால போட்டிகளிலிருந்து அகற்றப்பட்டுள்ளதுடன் பங்குபெறும் 24 கிரிக்கெட் கழகங்களுக்கும் முதற்தர அந்தஸ்து வழங்கப்படவுள்ளது.

கடந்த பருவகால லீக் போட்டிகளில் வெற்றி பெற்ற தமிழ் யூனியன் கிரிக்கெட் மற்றும் மெய்வல்லுனர் கழகம், கடந்த பருவகால லீக் போட்டிகளில் நான்காவது மற்றும் ஐந்தாவது இடத்தை முறையே பிடித்த காலி கிரிக்கெட் கழகம் மற்றும் சிங்கள விளையாட்டுக் கழகத்தோடும், 2015,16 ஆம் ஆண்டுக்கான சூப்பர் 8 போட்டிகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகள் சம்பியனான என்.சி.சி. அணியின் குழுவில் இணைக்கப்பட்டுள்ளது.

கடந்த பருவகால போட்டிகளில் தட்டுக்கான (Plate) வெற்றியாளர் ப்ளூம்பீல்ட் கிரிக்கெட் மற்றும் மெய்வல்லுனர் கழகத்துடன், சிலாபம் மேரியன்ஸ் மற்றும் படுரேலிய ஆகிய கிரிக்கெட் கழகங்கள் குழு 'ஏ' இல் இணைக்கப்பட்டுள்ளன.

அதே நேரம் 'பி' பிரிவில் கடந்த லீக் போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட மூவர்ஸ் விளையாட்டுக் கழகம் 61 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளராகம கிரிக்கெட் கழகத்துடன் கடினமான போட்டியை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது.

சூப்பர் 8 போட்டிகளில் கோல்ட்ஸ் கிரிக்கெட் கழகம் மற்றும் சி.சி.சி. முறையே 6 ஆம் மற்றும் 7 ஆம் இடங்களைப் பிடித்திருந்த நிலையில், கடந்த ஆண்டு கழகங்களுக்கு இடையிலான இருபதுக்கு இருபது போட்டி வெற்றியாளர்களான இலங்கை இராணுவ அணியுடன் மோதவுள்ளனர். சரசன்ஸ் விளையாட்டு கழகம் 'பி' பிரிவில் எந்நேரமும் மீள் எழுச்சியடையக் கூடிய அணியாக இருக்கும் அதே நேரம் புதிதாக தரவுயர்வு பெற்ற பி.ஆர்.சி. கழகம் இம்முறை பல உள்ளூர் முன்னணி வீரர்களுடன் களமிறங்குகிறது.

2014,15 ஆம் ஆண்டு பிரிமியர் லீக் தொடரை வென்ற இலங்கை துறைமுக அதிகார சபை விளையாட்டுக் கழகம், தட்டுக்கான (Plate) போட்டிகளில் இறுதி இடத்தைப் பெற்றுக்கொண்டமையினால் 'பி' பிரிவுக்கு தரமிறக்கப்பட்டுள்ளது. நீர்கொழும்பு கிரிக்கெட் கழகம் பி. சாரா போட்டிகளில் வெற்றிகொண்டமையினால் B பிரிவுக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளது.

பாணந்துறை விளையாட்டுக் கழகம், லங்கன் கிரிக்கெட் கழகம் மற்றும் கடற்படை விளையாட்டுக் கழகம் போன்ற அணிகள் 'பி' பிரிவு போட்டிகளில் வலிமை மிக்க அணிகளாகத் திகழ்கின்றன.

கழகங்களுக்கு இடையிலான போட்டிகள் முடிவடைந்தபின், 2016, 17 ஆம் ஆண்டுக்கான, நான்கு அணிகள் பங்குபற்றும் இலங்கை கிரிக்கெட் சபையின் மாகாணங்களுக்கிடையிலான 4 நாட்கள் கொண்ட லீக் போட்டிகள், ஒருநாள் போட்டிகள் மற்றும் இருபதுக்கு இருபது போட்டிகள் நடைபெறவுள்ளன.

# 'மைலோ' கிண்ணத்தை வென்று சம்பியனானது பாடும்மீன்கள் அணி




யாழ். துரையப்பா விளையாட் டரங்கில் நேற்று நடைபெற்ற பர பரப்பான உதைபந்தாட்ட இறுதி யாட்டத்தில் பாடும்மீன்கள் அணி வெற்றி பெற்றது.

குருநகர் பாடும்மீன்கள் மற்றும் பாசையூர் சென். அன்ரனிஸ் அணிகள் மோதிய இறுதியாட்டத்தில் 2:0 என்ற கோல் கணக்கில் 'மைலோ' கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது பாடும்மீன்கள் அணி.

முதல் பாதியாட்டத்தில் எது வித கோல்களும் பெறாதநிலையில் முடிவுற, இரண்டாம் பாதியாட்டத்தில் 38 ஆவது நிமிடத்தில் பாடும்மீன்கள் அணி வீரர் மயூரன் ஒரு கோல் போட்டார். மீண்டும் 41 ஆவது நிமிடத்தில் தமது அணிக்கென இரண்டாவது கோலையும் போட்டார் மயூரன். ஆட்டம் விறுவிறுப்புடன் உச்சத்தைத் தொட்டு 2: 0 என்ற கோல்களுடன் நிறைவுக்கு வந்தது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் சென்.மேரிஸ் அணி, கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியை 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பேற்று மூன்றாம் இடத்தைத் தன தாக்கியது.

இப்போட்டியில் ஆட்டநாயகனாக மயூரனும், தொடர் ஆட்ட நாயகனாக அன்ரனீஸ் வீரர் கலிஸ்ரனும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-8)

# சுப்பர்மடம் சித்தி விநாயகர் வெற்றி

பருத்தித்துறை நகர அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையில் பருத்தித் துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கபடித் தொடர் கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகிறது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியொன்றில் சாவகச்சேரி இந்து விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்டு சுப்பர்மடம் சித்தி விநாயகர் கழகம் வெற்றி பெற்றது. சாவகச்சேரி இந்து விளையாட்டுக் கழகம் 35 புள்ளிகளையும், சுப்பர்மடம் சித்தி விநாயகர் கழகம் 90 புள்ளிகளையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. சிறந்த ஆட்டக்காரராக யோகராஜா கலைச் செல்வன் தெரிவு செய்யப்பட்டார்.

# 'மைலோ' சிறுவர்களுக்கான உதைபந்தாட்ட பயிற்சி முகாம்




சிறுவர்களுக்கான உதைபந்தாட்ட பயிற்சி முகாம் ஒன்று நேற்று துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம் பெற்றுள்ளது.

நெஸ்லே லங்கா மைலோ நிறுவனத்தினால் நடத்தப்பட்ட இப் பயிற்சி முகாம் யாழ் . மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமான இப் பயிற்சி முகாமில் நூற்றுக் கணக்கான சிறுவர், சிறுமியர்கள் பங்குபற்றி பயனடைந்திருந்தனர். மைலோ வெற்றிக்கிண்ண இறுதிப் போட்டியை முன்னிட்டு இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆஸ்திரேலியா 85 ஓட்டங்களில் சுருண்டது!



பெர்த், நவ.13

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 85 ஓட்டங்களில் சுருண்டது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 3 டெஸ்ட் போட்டித் தொடரில் பெர்த்தில் நடந்த முதல் போட்டியில் தென்னாபிரிக்கா 177 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதனால் அந்த அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இந்த நிலையில் இரு அணிகள் மோதும் 2 ஆவது டெஸ்ட் போட்டி ஹோபார்ட்டில் நேற்றுத் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் டுபெலிசிஸ் பந்து வீச்சை தேர்வு செய்தார்.

தென்னாபிரிக்க வீரர்களின் அபாரமான பந்து வீச்சுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் ஆஸ்திரேலியா திணறியது . அந்த அணி 32.5 ஓவர்களில் 86 ஓட்டங்களில் சுருண்டது. தென்னாபிரிக்காவுக்கு எதிராக ஆஸ்திரேலியாவின் 3 ஆவது குறைந்தபட்ச ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். இதற்கு முன்பு 47 ஓட்டங்களிலும், (2011 ஆண்டு), 75 ஓட்டங்களிலும் (1950) சுருண்டு இருந்தன.

ஆஸ்திரேலிய அணியில் இரண்டு வீரர்களே இரட்டை இலக்கத்தை தொட்டனர். அணித் தலைவர் சுமித் அதிகபட்சமாக 48 ஓட்டங்களை (ஆட்டமிழக்காமல்) எடுத்தார். பிலாண்டர் 21 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட் வீழ்த்தினார். அபோட் 3 விக்கெட்டும், ரபாடா 1 விக்கெட்டும் எடுத்தனர்.

பின்னர் தென்னாபிரிக்கா முதல் இன்னிங்ஸை விளையாடியது. ஸ்டீபன் குக்கும், எல்கரும் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். தென்னாபிரிக்காவின் தொடக்கம் சிறப்பாக இருந்தது.

# போராடித் தோற்றது இந்தியா!

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் 488 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்துள்ளது. இதனால் இங்கிலாந்து அணி 49 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

ராஜ்கோட்டில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 159.3 ஓவர்களில் 537குவித்தது.

இதையடுத்து முதல் இன்னிங்ஸை ஆடிய இந்திய அணி 3 ஆவது நாள் ஆட்டநேர முடிவில் 108.3 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 319 குவித்தது. கோஹ்லி 70 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் 26 ஓட்டங்களை எடுத்து களத்தில் இருந்தார். இங்கிலாந்தின் முதல் இன்னிங்ஸ் ஓட்ட எண்ணிக்கையை எட்டுவதற்கு இந்தியா இன்னும் 218 ஓட்டங்கள் எடுக்க வேண்டியிருந்தது.

இந்நிலையில் நேற்று ஆட்டம் தொடங்கியபோது கோஹ்லியும் ரஹ்னாவும் ஜோடி சேர்ந்து கலக்குவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 13 ஓட்டங்களில் அன்சாரி பந்துவீச்சில் க்ளீன்



போல்ட் ஆனார் ரஹானா. அடுத்த சில ஓவர்களில், துரதிர்ஷ்டவசமாக ஹிட் விக்கெட் முறையில் விராட் கோஹ்லி 40 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதனால் திடீரென இந்திய அணிக்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டது. ஆனால் பின்னர் ஜோடி சேர்ந்த அஸ்வினும் சாஹாவும் பொறுப்பாக ஆடினார்கள். அவர்கள் மீது அணி நிர்வாகம் வைத்த நம்பிக்கையைப் பொய்யாக்காமல் விளையாடினார்கள். இதனால் எவ்வளவு முயன்றும் உணவு இடைவேளை வரை அவர்களைப் பிரிக்கமுடியாமல் போனது. இருவரும் ஜோடி சேர்ந்து 50 ஓட்டங்களை எடுத்து களத்தில் இருந்தனர்.

மதிய உணவு இடைவேளையின்போது இந்திய அணி 6 விக்கெட் இழப்புக்கு 411 ஓட்டங்களை எடுத்தது. நம்பிக்கையுடன் ஆடிவந்த சாஹா, 35 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஒரு சிக்ஸர் அடித்த ஜடேஜா 12 ஓட்டங்களில் அடுத்ததாக ஆட்டமிழக்க, உமேஷ் யாதவ் சிக்ஸர் அடிக்கும் பேராசையில் 5 ஓட்டங்களில் தனது விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

கடைசி விக்கெட்டுக்கு அஸ்வினும் ஷமியும் சிறிது நேரம் தாக்குப்பிடித்து ஆடினார்கள். 111 பந்துகளில் அரை சதமெடுத்த அஸ்வின், 70 ஓட்டங்களில் சிக்ஸர் அடிக்கும் ஆசையில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். அவர் முக்கிய பங்களிப்பாக 70 ஓட்டங்கள் எடுத்தார். இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் 488 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. எனவே இந்தியாவின் போராட்டம் தோல்வியில் முடிந்தது.

இதனால் இங்கிலாந்து அணி 49 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது.

# ஆடவர் டென்னிஸ் இறுதிச் சுற்று; எட்டு முன்னணி வீரர்கள் களத்தில்






உலக ஆடவர் டென்னிஸ் தரவரிசையில் முதல் எட்டு இடங்களை வகிக்கும் வீரர்கள் பங்குபற்றும் டென்னிஸ் வீரர்கள் சங்க உலக இறுதிச் சுற்று டென்னிஸ் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்த எட்டு வீரர்களும் முன்னாள் டென்னிஸ் விற்பன்னர்களான ஜோன் மெக்என்ரோ, ஐவன் லெண்டல் ஆகியோரின் பெயர்களைக் கொண்ட குழுக்களில் போட்டியிடவுள்ளனர். பிரித்தானிய வீரர் அன்டி முர்ரே (தரவரிசையில் 1), சுவிட்சர்லாந்தின் ஸ்டான் வொரின்கா (3), ஜப்பானின் கெய் நிஷிகோரி (5), குரோஏஷியாவின் மார்ட்டின் சிலிக் (7) ஆகியோர் ஜோன் மெக்என்ரோ குழுவில் இடம்பெறுகின்றனர்.

சேர்பியாவின் நொவாக் ஜோகோவிச் (2), கனடாவின் மிலோஸ் ராஓனிக் (4), பிரான்ஸின் காயல் மொன்பில்ஸ் (6), ஆஸ்திரியாவின் டொமினிக் தியெம் (8) ஆகியோர் ஐவன் லெண்டல் குழுவிலும் இடம்பெறுகின்றனர்.

ஒவ்வொரு குழுவிலும் இடம்பெறும் வீரர்கள் அந்தந்த குழுவில் இடம்பெறும் ஒவ்வொருவருடனும் லீக் அடிப்படையில் தலா 3 போட்டிகளில் விளையாடுவர். லீக் சுற்று முடிவில் முதலிரண்டு இடங்களைப் பெறும் நான்கு வீரர்கள் இறுதிச் சுற்றில் விளையாடத் தகுதிபெறுவர்.

இதன் பிரகாரம் இரண்டு குழுக்களிலும் முதலாம் இடங்களைப் பெறும் வீரர்கள் மற்றைய குழுக்களில் இரண்டாம் இடங்களைப் பெறும் வீரர்களுடன் இரண்டு அரை இறுதிப் போட்டிகளில் விளையாடுவர். அவற்றில் வெற்றிபெறுவோர் இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதிபெறுவர்.




# வைத்தியசாலையில் ரோஹித் சர்மா

இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் ரோஹித் சர்மா லண்டனில் உள்ள வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்றுவரும் புகைப்படத்தை தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

நியூஸிலாந்து அணிக்கெதிரான போட்டியின் போது ரோஹித் சர்மாவுக்கு தொடைப் பகுதியில் காயம் ஏற்பட்டது.

இதனைத்தொடர்ந்து இவர் அறுவை சிகிச்சை செய்து கொள்ள ஆலோசனை வழங்கப்பட்டிருந்த நிலையில், அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இவர் எதிர்வரும் மூன்று மாதங்கள் வரை போட்டிகளில் கலந்து



கொள்ளமாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அறுவைச் சிகிச்சை சிறப்பாக நடந்தது எனவும், உங்கள் அனைவரினதும் வாழ்த்துகளுக்கு நன்றிகள் எனவும் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.





பருத்தித்துறை நகர அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கபடித் தொடரில் இடம்பெற்ற இருவேறு போட்டிகளைக் காணலாம்.

# இனங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்த 'கைகோர்ப்பு நிகழ்ச்சி'

## மாத்தறையில் இருந்து 40 பேர் நேற்று யாழ்.வருகை





யாழ்ப்பாணம், நவ.13

இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவோம் என்ற ஜனாதிபதியின் எண்ணக் கருவிற்கமைவாகதேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் ஏற்பாட்டில் கைகோர்ப்புஎனும்நல்லிணக்கத் துக்கானதேசிய நிகழ்ச்சித்திட்டம் வடக்கு மற்றும் தெற்குக்கு இடையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் உதவிச்செயலாளரான டபிள்யூ.ஏ.பி. அனுர தலைமையில் மாத்தறை மாவட்டத்தைச்சேர்ந்த அரச அலுவலர்கள் 40 பேர் நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர்.

யாழ் மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்திருந்த அவர்கள் யாழ். அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் வரவேற்கப்பட்டனர்.

இவர்கள் தொடர்ந்து மூன்று நாள்கள் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் மக்களுடன் தங்கியிருந்து தமிழ் மக்களின் பண்பாடு, உணவுமுறை, கலாசாரம் உள்ளிட்டவற்றை அறியவுள்ளதுடன் யாழ்.மாவட்டத்தின் பிரசித்திபெற்ற பல்வேறு பகுதிகளுக்கும் அழைத்துச்செல்லப்படவுள்ளனர்.

இதேபோன்று யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களும் தென்பகுதிக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (ம-18)

# கிளிநொச்சியில் 450 மாணவருக்கு புத்தகப் பை, உபகரணங்கள்

கிளிநொச்சி, நவ.13

கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனம் புலம்பெயர் உறவுகளின் நிதி உதவியுடன், கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் 450 பேருக்கு புத்தகப் பை மற்றும் பயிற்சிப் புத்தகங்களை வழங்கியுள்ளது.



கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்றுச் சனிக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மேற்படி நிறுவனம் வக்குக் கிழக்கில் தனது சேவைகளை முன்னெடுத்துவருவதுடன் கிளிநொச்சியில் தெரிவு செய்யப்பட்ட குறித்த 450 மாணவர்களுக்கும் கல்வி ஊக்குவிப்பு நிதியாக மாதாந்தம் தலா 500 ரூபாவை வழங்கி வருகின்றது.

3 மாதத்துக்கான ஊக்குவிப்புத் தொகையை ஒன்று திரட்டியே நேற்று குறித்த மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள்வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்கஅதிபர் கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவன பிரதிநிதிகள், மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-70)

# த.தே.ம.முன்னணி பிரமுகர்கள் செயற்பாட்டாளர் கலந்துரையாடல்

## கிளிநொச்சியில் நேற்று சந்திப்பு



கிளிநொச்சி, நவ.13

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கிளிநொச்சி செயற்பாட்டாளர்களை நேற்றுச் சனிக்கிழமை கட்சியின் பிரமுகர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர். கிளிநொச்சி திரேசா ஆலயத்துக்கு முன்பாக அமைந்துள்ள கட்சியின்கிளிநொச்சி அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், சமகால அரசியல் நிலைமைகள், கட்சி அமைப்பாளர்களின் பணிகள், மக்களின் தேவைகளுக்கேற்ப பணியாற்றுதல் போன்ற பல விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பொதுச் செயலாளருமான செல்வராசா கஜேந்திரன், கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர், கட்சியின் செயற்பாட்டாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ம-70)

# தாய்ப்பால் புரையேறி 50 நாள் சிசு மரணம்

திருகோணமலை, நவ.13

திருகோணமலை கோமரங்கடவெல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் தாய்ப்பால் புரையேறியதால், பிறந்து 50 நாட்களேயான சிசுவொன்று உயிரிழந்துள்ளது.

இந்தச்சம்பவம் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்றது.

அழுதுகொண்டிருந்த சிசுவுக்கு தாய் பால் கொடுத்தார். இதன்போது பால் புரை ஏறியது. பதற்றமடைந்த பெற்றோர் குழந்தையை கோமரங்கடவெல வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

எனினும், இடைவழியிலேயே சிசு உயிரிழந்துவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

# சர்வதேச கூட்டுறவு தினவிழா நேற்று நெடுங்கேணி ம.வியில்

## நிகழ்வில் மாணவர்கள் கௌரவிப்பு



வவுனியா, நவ.13

வவுனியா வடக்கு கூட்டுறவு சங்கங்களும் வவுனியா கூட்டுறவு திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த 94 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா வவுனியா, நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வடமாகாண கூட்டுறவு மற்றும் விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன், எம்.தியாகராசா, ஆர். இந்திரராசா, கூட்டுறவு சங்கங்களின் தலைவர்கள், கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம-100)

# வவுனியாவில் இலக்கியக் கலை விழா

வவுனியா, நவ.13

வவுனியா மாவட்ட தேசிய இலக்கியக் கலை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் 15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு வவுனியாபிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில்இடம்பெறவுள்ளது.

வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும். (இ-100)

# வவுனியா பிரதேச செயலகத்தில் சொற்சதுரங்க நிகழ்வு நாளை

வவுனியா, நவ.13

வவுனியாபிரதேசசெயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சொற்சதுரங்கநிகழ்வில் இலக்கியப்பட்டறையும்போட்டி நிகழ்வுகளும் நாளை திங்கட்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

காலை 8.30 மணி தொடக்கம்10.30 மணிவரை பயிற்சிப் பட்டறையும் 11 மணி முதல் ஒரு மணிவரைபோட்டிநிகழ்வுகளும் இடம்பெறும்.

இப்போட்டி நிகழ்வுகளில் சமூக சிந்தனை நலம் அதிகம் காணப்படுவது ஈழத்து மரபுக் கவிதைகளிலேயே என வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய மாணவர்களும் ஈழத்துப் புதுக்கவிதைகளிலேயே என வவுனியா இந்துக் கல்லூரி மாணவர்களும்–

வன்னி வள நாட்டார் பாடல்களில் விஞ்சி நிற்பது கற்பனையே என தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்களும் சமூக சிந்தனையே என விபுலானந்தாக் கல்லூரி மாணவர்களும் –

பாரதியாரின் குயில்பாட்டு காதல்கீதமே எனச் சைவப் பிரகாச மகளிர் மகாவித்தியாலய மாணவிகளும் விடுதலையின் ராகமே என இறம்பைக் குளம் மகளிர் மகாவித்தியாலய மாணவிகளும் –

இலக்கியங்களில் புரட்சிப் பெண்ணாகச் சித்திரிக்கப்படுபவர் கண்ணகியேஎன இலங்கை திருச்சபை மகாவித்தியாலய மாணவர்களும் திரௌபதியே என ஓமந்தை மத்திய கல்லூரி மாணவர்களும்–

சகோதர பாசத்தை பெரிதும் வெளிப்படுத்தியவன் பரதனே என பூவரசங்குளம் மகாவித்தியாலய மாணவர்களும் இலட்சுமணனே என கோமரசன் மகா வித்தியாலய மாணவர்களும் விவாதத்தில் ஈடுபடுவர். (இ-100)

# அரசியல் கைதிகளுக்கு வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை

## நாடாளுமன்றில் சார்ள்ஸ் நிர்மலநாதன் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.13

அரசியல் கைதிகள் 23 பேரைப் புனர்வாழ்வளித்து விடுதலை செய்வதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு வழங்கிய வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய சார்ள்ஸ் நிர்மலநாதன், அரசியல் கைதிகளை விடுவிப்பதாக வாக்குறுதி வழங்கி பல வாரங்கள் கடந்துவிட்டன என் பதை சுட்டிக்காட்டினார்.

அத்துடன் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் அரசியல் நோக்கங்களை அடிப்படையாக கொண்டு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கென சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் இது வரை நிறைவேற்றப்படவில்லை.

வடக்கு மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு குறிப்பிடத்தக்க அளவில் நிதி ஒதுக்கப்படவில்லை என்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் குற்றம் சாட்டினார். (ம)

## ஈழப் போராட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நிர்ணய குழுவில் கூட நாங்கள் இந்த விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளோம்.

**சம்பந்தன் ஐயாவின் வாக்குறுதியில் நம்பிக்கை துளியளவும் இல்லை**

2017ஆம் ஆண்டு எங்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என சம்பந்தன் ஐயா வாக்குறுதி கொடுத்திருந்தார். அதில் எமக்கு துளியளவும் நம்பிக்கை இல்லை. இந்த அரசாங்கம் எங்களை ஏமாற்றிப்போகின்றது. உங்களது காலத்தில் தீர்வை காண வேண்டும் என எதிர்பார்க்கின்றோம் என்று நாங்கள் திரும்பத்திரும்ப சம்பந்தன் ஐயாவுக்கு சொல்லி வருகின்றோம்.

மக்கள் உங்களுக்கு தந்த ஆணை மிகப்பெரியது. அதைப் பயன்படுத்தி எமது மக்களுக்கு எந்த அளவிற்கு வாழ்வாதார உதவியை செய்யமுடியுமோ அல்லது எமது மக்களுக்கு அரசியல் உரிமையை பெற்றுக்கொடுக்க முடியுமோ அதற்கான காத்திரமான பணிகளை செய்ய வேண்டும்.

தவிர நாங்கள் பொறுமை காத்து அமைதியாக இருந்தால் யாருமே தங்கத் தட்டில் வைத்து இதுதான் உங்களுக்கு தீர்வு என தரப்போவதில்லை என கூறியிருக்கின்றோம். ஆனால், சம்பந்தன் ஐயா அதற்கான வேலைத் திட்டங்களைச் செய்யவில்லை. - என்றார். (ம-100)

## குழாய் நீருக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சிறந்த சேவையொன்றை தொடராக வழங்கும் முகமாக இந்தக் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த அதிகரிப்பு தொடர்பான அறிவிப்பு கடந்த நவம்பர் 2ஆம் திகதி வெளியாகியிருந்தது. இதன்படி, 9 கட்டங்களில், 9 முறைமையில் இந்த விலை அதிகரிப்பு இடம்பெறவுள்ளது. (ம)

## பாகிஸ்தானில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அங்கு சம்பவ நேரம் சுமார் 500 பேர் தரிசனம் செய்வதற்காக திரண்டிருந்தனர். அப்போது வழிபாட்டுத் தல வளாகத்தில் சக்திவாய்ந்த குண்டு வெடித்தது. இதில், ஏராளமான பக்தர்கள் தூக்கி வீசப்பட்டனர்.

சம்பவம் தொடர்பாக கேள்வியடைந்த பொலிஸாரும், மீட்புக் குழுவினரும் உடனடியாக அங்கு விரைந்து வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இந்தக் குண்டுவெடிப்பில் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 30 பேர் வரை இறந்திருக்கின்றனர் என்று மீட்புக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து மீட்பு பணி நடைபெறுவதால், உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது. (ம)

# இலங்கை - இந்திய மீனவர் தொடர்பாக இந்தியாவில் நடந்த சந்திப்பு வெற்றி

## வெளிவிவகார அமைச்சர் மங்கள கூறுகிறார்

கொழும்பு, நவ.13

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் அண்மையில் இந்தியாவில் இடம்பெற்ற சந்திப்பு வெற்றியளித்துள்ளதாக வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது இழுவைப் படகுகளில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதனால் ஏற்படும் பாதிப்புக்களை இந்தியா உணர்ந்து கொண்டதாக அமைச்சர் கொழும்பில் வைத்து 'த ஹிந்து'வுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தை எதிர்வரும் ஜனவரியில் தொடரவுள்ள நிலையில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் ஓர் உடன்பாட்டுக்கு வரமுடியும் என்றும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை அமெரிக்காவில் ஆட்சிமாறியபோதும் டொனால்ட் ட்ரம்ப், தற்போது அமெரிக்கா கடைப்பிடித்துவரும் கொள்கையையே கடைப்பிடிப்பார் என்றும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதற்கிடையில் சீனத்தூதுவர், இலங்கை தொடர்பில் வெளியிட்ட கருத்துக்கள் குறித்து தகவல் வெளியிட்ட அவர், பிரச்சினை ஊடகம் ஊடாக வெளிக்கொணரப்படாமல், இலங்கை அரசாங்கத்துடனும் வெளியுறவுத்துறை அமைச்சு அதிகாரிகளுடன் பேசித் தீர்க்கலாம் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நேற்று சனிக்கிழமை இந்த முறைப் பாட்டை பதிவுசெய்துள்ளது.

இந்த இடத்தில் தேவாலயம் அமைக்கப்பட்டதற்கு எதிராக சில நபர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த போதும் கடந்த 6 ஆம் திகதி தேவாலயம் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு அந்த தேவாலயத்தினுள் சென்ற மர்மநபர்கள் தேவாலயக் கண்ணாடி களை உடைத்து நொருக்கிவிட்டு 2 அடி உயரமான புனித இறை இரக்க ஆண்டவர் திருச் சொரூபத்தை களவாடிச் சென்றிருக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## தமிழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இருந்து வருகின்றார்.

அவருக்கான சிகிச்சை முடிந்து விட்டது. சாதாரண அறைக்கு மாற்றப்படுவது என்பது, வசதியைப் பொறுத்த விடயம் மட்டுமே. .

தான் முழுமையாக குணமடைந்து விட்டேன்; இனி மருத்துவமனை தேவையில்லை என எப்போது முதல்வர் நினைக்கிறாரோ அப்போது வீடு திரும்புவார். .

தற்போது வழக்கமான உணவுகளையே அவர் எடுத்துக் கொள்கிறார். - என்றார்.

(முன்னர் வந்த செய்தி 14 ஆம் பக்கத்தில்) (ம)

## அமெரிக்காவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) துள்ளார்.

இந்த விதமான மாற்றம் இலங்கை அரசியலிலும் வர வேண்டும் - வரக் கூடும் என்ற அவரது கருத்து, தாமும் அரசியலில் செல்வாக்குப் பெறலாம் என்பதை மறைமுகமாக - சூசகமாக தெரிவித்திருக்கிறார் என்றே எண்ணத்தோன்றுகிறது என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

அரசியலில் ஈடுபட்டு நாட்டின் அதி முக்கிய பதவியைப் பிடித்து விட வேண்டும் என்ற நம்பிகையுடன் கோட்டாபய ராஜபக்ஷ காத்திருக்கிறார் என்றே அவருடன் நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன. (இ)

## திருமலை வைத்தியசாலையின் தாதியர் நேற்றுப் போராட்டம்

திருகோணமலை, நவ.13

திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் நேற்று சனிக்கிழமை பகல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அங்கு பணியாற்றும் தாதிய உத்தியோகத்தர் ஒருவரை கடமையில் இருந்த வைத்தியர் ஏசியதைக் கண்டித்தே இந்தப் பகிஷ்கரிப்பு இடம்பெற்றது.

குறித்த தாதியை வைத்தியர் ஏசியமை தொடர்பாக கலந்துரையாடுவதற்காக ஐக்கிய தாதியர் சங்கம், அரசாங்க தாதியர் சங்கம் ஆகிய இரு சங்கங்களும் வைத்தியரிடம் சென்றபோது அதற்கு வைத்தியர் சம்மதிக்கவில்லை. இதனையடுத்தே போராட்டம் இடம்பெற்றதாக தெரியவருகின்றது.

இதனையடுத்து கொழும்பு சங்கங்களின் ஆலோசனையின் பேரில் திருகோணமலை சங்க உறுப்பினர்கள் பணிப்பாளர் மற்றும் ஏசிய வைத்தியர் மற்றும் வைத்தியநிபுணர்கள் அனைவரும் இணைந்து கலந்துரையாடல் ஒன்றை நடத்திய பின்னர் பகிஷ்கரிப்பு நிறைவுக்கு வந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ம)

## நாவற்குழி சந்தியில் மீன் விற்பனை செய்வதை நிறுத்துமாறு அறிவுறுத்தல்

சாவகச்சேரி, நவ.13

நாவற்குழி சந்தியில் அனுமதி பெறாத நிலையில் நடத்தப்பட்டு வரும் மீன் வியாபாரத்தை உடன் நிறுத்துமாறு மீன் வியாபாரிகளிடம் சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

நாவற்குழி சந்தியில் மீன் வியாபாரம் செய்துவரும் மீன் வியாபாரிகளைச் சாவகச்சேரி பிரதேச சபையினர் கேரதீவு - சங்குப்பிட்டி நாவற்குழி வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட சந்தையில் வியாபாரத்தை நடத்துமாறு தெரிவித்து வருகின்றனர்.

இதனை ஏற்காத வியாபாரிகள் தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதனால் சாவகச்சேரிப் பிரதேச சபையினர் பொலிஸாரிடம் முறையிட்டனர்.

அதனை அடுத்து நடைபெற்ற விசாரணையின்போது பொலிஸ் அதிகாரி உடன் நடைமுறைக்கு வரும் வகையில் மீன் வியாபாரத்தை நிறுத்துமாறும், மீறினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அறிவுறுத்தினார்.

இதேவேளை, பிரதேச சபையால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொதுச் சந்தையில் மீன் வியாபாரிகளுக்குத் தேவையான வசதிகளையும் செய்து கொடுக்குமாறும் தெரிவிக்கப்பட்டது. இதற்கு இரு தரப்பினரும் சம்மதம் தெரிவித்துள்ளனர். (இ-22)

## கோயிலாக்கண்டி கிராமத்துக்கு அதிக வலு கொண்ட மின்மாற்றி

சாவகச்சேரி, நவ.13

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கோயிலாக்கண்டி கிராமத்துக்கு 100 கே.வி.ஏ வலு கொண்ட புதிய மின்மாற்றி (ட்ரான்ஸ்போமர்) ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. இதனால் கூடிய வலுகொண்ட மின்சாரத்தைப் பொதுமக்கள் பெற்றுள்ளனர்.

இதுவரை காலமும் சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் இருந்த மின்மாற்றி மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. இதனால் கோயிலாக்கண்டி கிராமத்துக்கான மின்சாரத்தின் வலு குறைவாகக் காணப்பட்டது.

இது குறித்து பொதுமக்கள் அதிகாரிகளிடம் முறையிட்டதையடுத்து இக்கிராமத்துக்கு உயர் அழுத்த மின்மார்க்கக் கம்பிகள் இணைக்கப்பட்டு புதிய மின்மாற்றி பொருத்தப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்துள்ளனர். (இ - 22)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதிபர் பூஜித ஜயசுந்தர நாட்டில் இருக்கவில்லை. இந்நிலையில் பதில் பொலிஸ்மா அதிபராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சீ.டீ.விக்ரமரத்ன செயற்பட்டுள்ளார்.

அவர் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகலரத்நாயக்கவுக்கு நெருக்கமான ஒருவராவார். அத்துடன் அடுத்த பொலிஸ்மா அதிபர் பதவிக்கு வருவதற்கு தகுதியான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியாகும்.

அதற்கமைய அங்கவீனமடைந்த முன்னாள் இராணுவத்தினருக்கு எதிராக ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில், பதில் பொலிஸ்மா அதிபர் மற்றும் அமைச்சர் சாகல ரத்நாயக்க பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

எப்படியிருப்பினும் இந்த தாக்குதலுக்கு உத்தரவிட்டது யார் என்பது தொடர்பில் தற்போது வரையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறு உத்தரவிட்டமை தொடர்பில் அமைச்சர் அறிந்திருக்கவில்லை என அமைச்சருக்கு நெருக்கமான தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

இதற்குள் ஜனாதிபதி செயலகத்தின் அதிகாரிகளுக்கு தொடர்புகள் உள்ளனவா என்பது தொடர்பிலும் சந்தேகம் எழுந்துள்ளது.

எப்படியிருப்பினும் ஜனாதிபதி செயலகத்திற்குள் நுழைவதற்கு முயற்சித்த நடவடிக்கையின் பின்னால் முன்னாள் இராணுவ மேஜர் ஜெனரல் செயற்பட்டுள்ளனர் என்ற சந்தேகம் எழுந்துள்ளதென பிரதமர் செயலக தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகிக்கப்படுகின்ற முன்னாள் மேஜர் ஜெனரல் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவர் என கூறப்படுகிறது.

இந்த அதிகாரி கடந்த அரசாங்கத்தின் போது இடம்பெற்ற சில முறைகேடுகள் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்ட ஒருவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சமாதானத்திற்கு பாதிப்பு ஏற்படும் என்றால் ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்கு அவசியமான நீதிமன்ற உத்தரவை பொலிஸாரினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி செயலகத்தை சுற்றிவளைக்கும் அளவிற்கு அருகில் வருவதற்கு இடமளிக்கப்பட்டமை சந்தேகத்திற்குரிய விடயமாகும்.

நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றுள்ளபோதிலும் எந்தவொரு ஆர்ப்பாட்ட பேரணியையும் ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் நடத்துவதற்கு பொலிஸார் இடமளிக்கவில்லை.

இந்நிலையில், ஜனாதிபதி மற்றும் பொலிஸ்மா அதிபர் நாட்டில் இல்லாத சந்தர்ப்பத்தில் இடம்பெற்ற இந்த செயற்பாடு சூழ்ச்சிக்காக பரீசித்துப் பார்க்கப்பட்டதா என சந்தேகம் எழுந்துள்ளதாக ஜனாதிபதி செயலக தக வல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஜனாதிபதி செயலகத்திற்குள் பலவந்தமாக நுழைவதற்கு கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலுக்கு அருகில் உள்ள குழு ஒன்றுதிட்டமிட்டுள்ளதாக அரசாங்க புலனாய்வு சேவையினால் குறித்த பிரிவுகளின் பிரதானிகளினால் இதற்கு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது என குறித்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.11.2016 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.